Civil Aviation Authority
Sri Lanka

" Safe skies for all "

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# ஆண்டறிக்கை
# 2014

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# ஆண்டறிக்கை
# 2014

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆவது வாசகத்திற்கிணங்க பாராளுமன்றிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொனிப்பொருள் கீதம்

ஸ்ரீ லங்கா சிவில் குவன் சேவா அதிகாரிய
கித் யாசின் கதலே
ஹெலி தொட்ட ஹெலி ஹெலே //

சக்வித்தி ராவண ஆருதி யுகேன்
தண்டு மொனரின் குவன தினா//
விஸ் அமதி லக்தன வாரிய பொலனுத்
பாவிது நுவன மனா//

உவதுரு தொர பவ சந்தஹா முல்வெமு
வெய்பெர வெக்கிய அபே//
இக்மன் அய மகநெகுமகி முல்வெவ
மேவெய் தமக்கும அபேய்//

ரடவெசி யுதுகம இடுவன அயுரின்
மௌபிம ஹா பெதமு//
சமாஜ மெஹவர சாரதாஹம் ரெக
வககீமென் புதமு//

ஆக்கம் : அரிசன் அஹபுது
பாடல் : கலாநிதி பண்டிதர் டப்ள்யு‘.டி. அமரதேவ
இசையமைத்தவர் : கலாநிதி பண்டிதர் டப்ள்யு‘.டி. அமரதேவ

### கௌரவ அமைச்சர்,சிவில் விமானப்போக்குவரத்து

இவ் ஆண்டறிக்கை 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 15 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 01 ஜனவரி 2014 இல் ஆரம்பித்து 31 டிசம்பர் 2014 இல் முடிவடைந்த ஆண்டில் இலங்கை சிவில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.



**சிப்லி அஸீஸ் பீ.சீ**
தலைவர்,
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தொனிப்பொருள் கீதம் | 3 |
| சுருக்கமான சொற்றொடர்கள் | 6 |
| விபரக்கொத்து | 8 |
| தலைவரின் அறிக்கை | 9 |
| சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அறிக்கை | 12 |
| பக்கத்தோற்றம் | 17 |
| மீள்பார்வை | 17 |
| இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையும் பொறுப்புடமையும் | |
| அதிகாரசபையின் பொறுப்பு | 24 |
| பணிப்பாளர் சபை | 24 |
| அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரம் | 24 |
| அதிகாரசபையின் குழுக்கள் | 25 |
| சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC) | 27 |
| நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்பு | 27 |
| அதிகாரசபையினதும் சிரேஷ்ட முகாமையினதும் பொறுப்பு | 27 |
| பொறுப்புடமை | 28 |
| ஆர்வ ரீதியான முரண்பாடுகள் | 28 |
| உள்ளகக் கணக்காய்வு | 28 |
| சட்டக் கடப்பாடு | 28 |
| ஒழுக்க விழுமியங்கள் | 29 |
| **இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை** | **30** |
| நியதிச் சட்டச் செயற்பரப்பு | 34 |
| வானூர்தி விபத்து விசாரணை அலகு | 36 |
| உள்ளகக் கணக்காய்வுப் பகுதி | 38 |
| வானியல் சேவைகள் பிரிவு | 39 |
| விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி | 39 |
| விமானத்தளம் மற்றும் வான்செலவு சேவைகள் பகுதி | 39 |
| விஷேட செயற்றிட்டப் பகுதி | 41 |
| விமானப் பறப்புப் பாதுகாப்புப் பிரிவு | 43 |
| செயற்பாட்டுப் பகுதி | 43 |
| தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதி | 44 |
| வான்தகைமைப் பகுதி | 46 |
| கூட்டாண்மைப் பிரிவு | 48 |
| வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி | 48 |
| மனித வளங்கள் மற்றும் அலுவலகத் முகாமைத்துவ பகுதி | 54 |
| நிதி முகாமைத்துவப் பகுதி | 56 |
| கைத்தொழிலின் செயற்சாதனை - 2014 | 60 |
| விமானப் போக்குவரத்து விபரங்கள் | 67 |
| நிதிக் கூற்று | 68 |

# சுருக்கமான சொற்றொடர்கள்

| | |
|---|---|
| A&NS | விமானத்தளங்கள் மற்றும் வான்செலவு சேவைகள் |
| AA | உதவிக் கணக்காளர் |
| AAI | உதவி விமானத்தளப் பரிசோதகர் |
| AA(I) | உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் |
| AASI | உதவி விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| AASL | வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை)கம்பனி |
| AATO | உதவி வான் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| AAwE | உதவி வான்தகமைப் பொறியியலாளர் |
| Acct | கணக்காளர் |
| AFM | உதவி நிதி முகாமையாளர் |
| AFTN | வானியல் நிலையான தொலைத்தொடர்பு வலையமைப்பு |
| AGOI | உதவி தளச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| AI | விமானத்தளப் பரிசோதகர் |
| AIU | விபத்து விசாரணை அலகு |
| AISO | வானியல் தகவல் சேவைகள் உத்தியோகத்தர் |
| AME(BL) | வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் (அடிப்படை அனுமதிப் பத்திரம்) |
| AML | வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் |
| AMO | அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்பு |
| AMT | வானூர்திப் பராமரிப்பு தொழிநுட்பக் கலைஞர் |
| ANR | வான்செலவுகள் ஒழுங்குக் கோவை |
| ANS | வான்செலவுகள் சேவைகள் |
| ANSI | வான்செலவுகள் சேவைகள் பரிசோதகர் |
| AOC | வான் செயற்பாட்டாளர் சான்றுப்பத்திரம் |
| AS | வானியல் சேவைகள் |
| ASI | விமானப் போக்குரத்துப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| ASN | விமானப் போக்குரத்துப் பாதுகாப்பு அறிவித்தல்கள் |
| AT&LA | வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் |
| ATC | வான் நெரிசற் கட்டுப்பாடு /வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர் |
| ATO | வான் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| Av. Sec | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு |
| Aw | வான்தகமை |
| AwE | வான்தகமைப் பொறியியலாளர் |
| BIA | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் |
| CAASL | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| CADEC | சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்வியு‘ட்டற் குழு |
| CAO | சிவில் விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| CEO | பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் |
| CIA | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் |
| COSCAP-SA | செயற்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகமையினை விருத்தி செய்வதற்கான தெற்காசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டம் |
| Cp | கூட்டாண்மை |
| CSI | வானறைப் பாதுகாப்புப் பரிசோதகர் |
| C of R | பதிவுச் சான்றிதழ் |

| | |
|---|---|
| DCA | சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் |
| D | பணிப்பாளர் |
| DD | பிரதிப் பணிப்பாளர் |
| DGCA | சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் |
| DO | ஆவண உத்தியோகத்தர் |
| DPIG | விமானப் பறப்புத் தகவல் வலயம் |
| EASA | ஐரோப்பிய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகவா |
| ELP | உபகரணங்கள் ஏற்றும் திட்டம |
| EU-SA | ஐரோப்பிய ஒன்றியம்- தெற்காசியா |
| FAL | அனுசரணை |
| FIR | விமானப் பறப்புத் தகவல் வலயம் |
| FS | விமானப் பறப்புப் பாதுகாப்பு |
| FS | விமானப் பறப்புப் பாதுகாப்பு |
| GOI | தளச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| GSA | பொது விற்பனைப் பிரதிநிதி |
| HR&OM | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் |
| HR&OMA | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவ உதவியாளர் |
| HR&OMO | மனித வளங்கள் மற்றும் அலுவலக முகாமைத்துவ உத்தியோகத்தர் |
| IA | உள்ளகக் கணக்காய்வு |
| ICAO | சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு |
| MEL | குறைந்த பட்ச உபகரணப் பட்டியல் |
| NOTAM | விமான சேவையிலுள்ளோருக்கான அறிவித்தல்கள் |
| OA | அலுவலக உதவியாளர் |
| Ops | செயற்பாடுகள் |
| PA | நேர்முக உதவியாளர்கள் |
| PEL | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் |
| PLO | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் உத்தியோகத்தர் |
| PA-AAI | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விமான விபத்து விசாரணை |
| PA-AE | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விமான சேவைப் பரீட்சைகள் |
| PA-IT | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- தகவல் தொழிநுட்பம் |
| PA-SP | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- விஷேட செயற்றிட்டம் |
| S/CAASL | செயலாளா / இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| SD | சிரேஷ்ட பணிப்பாளர் |
| SAFA | வெளிநாட்டு வானூர்திக்கான பாதுகாப்பு மதிப்பீடு |
| SAISO | சிரேஷ்ட வானியல் தகவல் சேவைகள் உத்தியோகத்தர் |
| SARPs | தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகள் |
| SARI | தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு |
| SATO | சிரேஷ்ட விமானப் போக்குவரத்து உத்தியோகத்தர் |
| SFOI | சிரேஷ்ட விமானப் பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர் |
| SLAS | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் |
| SLCAP | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள |
| SLFRS | இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் |
| SP | விஷேட செயற்றிட்டம் |
| SMS | பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை |
| SSP | தேசிய பாதுகாப்புத் திட்டம் |
| USAP | உலகளாவிய பாதுகாப்பு சோதனை வேலைத்திட்டம் |
| USOAP | உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை சோதனை வேலைத்திட்டம் |

# விபரக்கொத்து

பிரதான அலுவலகம் : இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
இல. 04, ஹவுணுபிட்டிய வீதி,கொழும்பு - 02.
தொலைபேசி: 94 -11-2304632, 94-11-2358800
தொலைநகல்: 94 –11-2304644
மின்னஞ்சல்: info@caa.lk
இணையத்தளம்: www.caa.lk

தபால் முகவரி :த.பெ. இல. 535, கொழும்பு
தபால் தந்தி முகவரி : AIRCIVIL
முகவரி Address : VCCCYAYX

கிளை அலுவலகம் : இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,
ஹில்டொப் ,நைகந்த, மினுவாங்கொட
வீதி, கட்டுநாயக்க.
தொலைபேசி : 94 -11-2251076
தொலைநகல்: 94 –11-2251076
மின்னஞ்சல்: katcaa@caa.lk

மத்தள அலுவலகம் : இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,
பண்டாரநாயக்க
மத்தள சர்வதேச விமான நிலையம், மத்தள
தொலைபேசி : 94 -47-7510530
தொலைநகல் : 94 –47-2031133

விமானத்தகைமை உப அலுவலகம்,
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,
கொழும்பு விமான நிலையம்,
இரத்மலானை.
தொலைபேசி : 94 – 11 – 2635756
மின்னஞ்சல்: aidccaa@caa.lk

கணக்காய்வாளர் : இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கணக்காய்வாளர் நாயகம்.

சட்டத்தரணிகள் : இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டமா அதிபர்
வங்கியாளர் : இலங்கை வங்கி
காப்புறுதியாளர் : வ/ப இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
வ/ப செலிங்கோ காப்புறுதிக் கம்பனி

# தலைவரின் அறிக்கை



2014 ஆம் ஆண்டானது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிலும் அதேபோன்று இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்திலும் சில குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றங்களை வெளிப்படுத்துகின்றது. மேலும், மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பயணிகள் மற்றும் சரக்குகளின் காவுகையில் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றத்தைப் பதிவாக்கியது. விமானப் போக்குவரத்தில் முக்கிய மைற்கற்களில் ஒன்றாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஆனது மே 2014 இல் “ஓர் உலகம்” விமானசேவைக் கூட்டணியில் அதனையும் இணைத்துக் கொண்டதுடன், அதனது பாதை வடிவமைப்பினை ஏனைய பங்காண்மை விமான சேவைகளுடன் இணைந்த வகையில் விரிவாக்கிக் கொண்டது. மேலும் பல சர்வதேச முன்னணி விமான சேவைச் செயற்பாட்டாளர்கள் இலங்கைக்குத் தமது பகிர்வு அடிப்படையிலான செயற்பாடுகளை கணிசமான அளவில் அதிகரித்துள்ளது.

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து உடன்படிக்கையில் கைச்சாத்திடுனர்களில் ஒருவராக, CAASL ஆனது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட பரிந்துரைகள் அவை உள்நாட்டில் அமுலாக்கப்படுவதுடன் வினைத்திறனாகப் பிரயோகிக்கப்படுகின்றன என்பனவற்றை உறுதி செய்து கொள்வதற்கான கட்டாய கட்டுப்பாடொன்றினை வைத்திருக்கினறது. விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பினை உறுதி செய்து கொள்வதற்கான பிரதான குறிகாட்டிகளில் ஒன்றாக, தேவைப்படும் பயிற்சியளித்தல்களின் நிறைவின் நிறைவின் பின்னர் இடர்பாடான விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ள ஆளணித் தொகுதியினருக்கு ஆளணி உரிமங்களின் வழங்குகை செய்முறையாகக் காணப்படுகின்றது. ஆளணி உரிமப் பகுதியானது விமானிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள், வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திரங்கள், வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர் அனுமதிப்பத்திரங்கள், மற்றும் விமானியறை அங்கத்துவச் சான்றிதழ்கள் என்பனவற்றிற்கான வழங்குகைகள் மற்றும் அவற்றின் புதுப்பதித்தல்கள் என்பனவற்றிற்கு இவ் ஆண்டில் கணணி மயப்படுத்தப்பட்ட முறைமையொன்றினை அறிமுகப்படுத்தியது என்பதுடன், இம் முறையானது ஊயுயுளுடு மற்றும் அனுமதிப்பத்திரதாரர்களுக்கும் நன்மையளிக்கக் கூடியதொன்றாக காணப்பட்டது. சிவில் விமானப் போக்குவரத்துடன் தொடர்புபட்டதான பாதுகாப்பு மற்றும் தற்காப்பை முன்னுரிமைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனுமதிப்பத்திரங்கள், தராதரங்கள், சான்றிதழ்களைக் கொண்டுள்ள ஆளணியினரால் மதுபானப் பாவனை அல்லது உளவியல் சார் செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கான விடயங்கள் வான் போக்குவரத்திற் பாதுகாப்பு மற்றும் தற்காப்பினை மேம்படுத்தும் பொருட்டு ஆளணி உரிமப் பகுதியால் தற்போது பிரசுரிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச விமான சேவைகள் செயற்படுத்தப்படும் அனைத்து விமான நிலையங்களும் சான்றுப்படுத்தப்படுவது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பினது தேவைப்பாடொன்றாகக் கருதப்படுகின்றது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமானது இரண்டு வருட காலாவதியினைக் கொண்டு 2010 இல் சான்றுப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, இரண்டாவது விமானத்தளச் சான்றுப்படுத்துகைக்கான புதுப்பித்தற் சோதனையொன்று மார்ச் 2014 இல் நிகழ்த்தப்பட்டது. இச் சோதனையில் அவதானிக்கப்பட்ட அனைத்துக் குறைபாடுகளும் திருத்தப்படுவதற்குரிய அனைத்துப் படிமுறைகளும் எடுக்கப்பட்டதன் பின்,BIA இன் விமானத் தளச் சான்றிதழானது மற்றுமொரு இருவருட காலப்பகுதிக்காகப் புதுப்பிக்கப்பட்டது.

2014 இல் செயற்பாட்டுப் பகுதியானது இரண்டு வான் செயற்பாட்டாளர் சான்றுப்படுத்தற் செய்முறைகளை நிறைவுறுத்தியிருந்ததுடன்

IWS ஏவியேஷன் மற்றும் ஸ்கைலக் ஏவியேஷன்

எனும் இவ் இரண்டு ஹெலிகொப்ரர் செயற்பாட்டாளர்களும் உள்நாட்டு வர்த்தக வான் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டன.

2014 இல் பத்து (10) வானூர்தி பராமரிப்பு நிறுவனங்களுக்கான ஆரம்ப அனுமதிகள் தேவைப்படும் மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்டன. மேலும், ஐம்பத்து நான்கு (54) வெளிநாட்டு தள மற்றும் விமான சேவைப் பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் பதின்மூன்று உள்நாட்டுப் பராமரிப்பு நிறுவனங்களுக்கான அனுமதிகள் புதுப்பிக்கப்பட்டன.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலத்தில், CAASL ஆனது பதினேழு (17) வானூர்திகளுக்கான ஆரம்பப் பதிவினையும், ஐம்பத்தொரு (51) வானூர்திகளுக்கான புதுப்பித்தற் பதிவுகளையும் மேற்கொண்டிருந்தது. சிறிலங்கன் எயார்லைன்ஸின் வான் செயற்பாட்டாளர் சான்றிதழின் கீழ் செயற்படுவதற்கு உரிமையாளர்களின் வேண்டுகோளின் பேரில் மூன்று வானூர்திகளுக்கான உரிமை மாற்றஞ் செய்யப்பட்டது.

கைத்தொழிலில் சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு முறைமைகள் மீதான சோதனை நடவடிக்கைகளானவை 2014 இன் அனுமதிக்கப்பட்ட தேசிய சோதனையிடலுக்கிணங்க முன்னெடுக்கப்பட்டன. வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி மற்றும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் என்பனவற்றின் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு திரையிடலாளர்கள், வழிகாட்டுநர்கள், மற்றும் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகாமையாளர்களின் சான்றுப்படுத்துகை மற்றும் மீள் சான்றுப்படுத்துகை என்பன முன்னெடுக்கப்பட்டன.

கட்டுநாயக்க நைகந்தயில் CAA இன் தலைமையகத்தினை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்ததுடன், தேவைப்படும் அனுமதிகள் தொடர்புபட்ட அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுக் கொள்ளப்பட்டன. 2016 இல் தலைமையலுவலகக் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டன.

மேலும், MRIA இல் பாதுகாப்பு மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடும் CAA ஊழியர்களின் தங்குமிட வசதிகளுக்காக தேவைப்படுமென்று அடையாளங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2014 இல் வீரவில எனுமிடத்தில் ஒவ்வொன்றும் நான்கு படுக்கையறைகளை கொண்ட இரு வேறு இரண்டு தட்டுக்களைக் கொண்ட கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

பாங்கொங்கில் இடம்பெற்ற ஐம்பதாவது DGCA மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, CAPSCA-AP (சிவில் விமானப் போக்குவரத்தின் பொதுமக்கள் சுகாதார நிகழ்வுகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைக்கான கூட்டிணைந்த ஒழுங்கமைப்பு (ஆசியா பசுபிக்) இன் ஏழாவது கூட்டம் 20 முதல் 24 மே 2014 இல் இலங்கை கொழும்பில் நிகழ்ந்தது. ஏழாவது CAPSCA-AP கூட்டமானது விமானப் போக்குவரத்துத் துறையை தாக்கும் பொது சுகாதார அவசர தேவைகளிலிருந்தான ஆபத்துகளை இல்லாது செய்யும் பொருட்டு விமானப் போக்குவரத்து மற்றும் பொது சுகாதாரத்துறை நலன் விரும்பிகள் என இரு சாராரையும் ஒன்றிணைத்தலை இலக்காகக் கொண்டிருந்தது.

ICAO இற்கு CAA இனால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளொன்றின் நிமித்தம், சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் ஆசியா– பசுபிக் பறத்தலுக்கான செய்முறைத் திட்டத்தின் கீழ், 17 ஒக்டோபர் 2014 வரையில் கொழும்பில் செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. பறத்தலுக்கான செய்முறை வடிவமைப்பாளர்களால் விருத்தி செய்யப்பட்ட செய்முறை அடிப்படையில் அமைந்த வழிகாட்டல் (PBN)பறத்தற் செய்முறைகளின் பறத்தற் செல்லுபடியாக்கலில் விமானிகளைப் பயிற்றுவிப்பதாக இன் நிகழ்வின் நோக்கமாக அமைந்தது. ICAO இன் தேவைப்பாடுகளின் பிரகாரம், நாடுகள் பிராந்திய PBN அமுலாக்கற் திட்டத்துடன் கூடியதான ஒழுங்கில் PBN I அமுலாக்குவதற்கு வேண்டப்படுகின்றது.

ICAO செயற்பாடுகளின் பிரகாரம், நாடுகள் ICAO ஆல் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ், அந் நாடுகளில் சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பினை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு தேசிய "பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்" ஒன்றினை அமுலாக்கிக் கொள்ள வேண்டப்படுகின்றது. சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது பிராந்திய நாடுகளுக்கான ICAO தொழிநுட்பக் கூட்டாண்மை அமைப்பிலிருந்து (ICAO- TCB) நிபுணத்துவ உதவியுடன், இலங்கையில் SSP கற்கைநெறியொன்றை முன்னெடுத்திருந்தது. பெரும்பாலும் CAA இன் அனைத்து தொழிநுட்ப ஊழியர்களும் இக் கற்கைநெறியில் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

CAASL ஆனது பொதுமக்களுக்கு, விஷேடமாக பாடசாலைச் சிறார்களுக்கு அடிப்படை விமானப்

போக்குவரத்து அறிவினை வழங்கும் பொருட்டு 2010 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டங்களானது வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. காலாண்டு கல்வியியற் சஞ்சிகையான "குவான்ஷர" வின் நான்கு வெளியீடுகள் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் பாடசாலைச் சிறார்களின் விமானப் போக்குவரத்து மீதுள்ள அறிவாற்றலை விருத்தி செய்யும் நோக்குடன் வெளியீடு செய்யப்பட்டன. இவ் இதழ்கள் 3,100 பாடசாலைகளுக்கு இலவச அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

CAASL ஆனது அதனது ஊழியர்களுக்கும் அவர்களது நெருங்கிய குடும்ப அங்கத்தினருக்கும் வழங்கிய மருத்துவக் காப்புறுதித் திட்டம் போன்ற அதனது ஊழியர் நலன் விடயங்களை முன்னெடுத்திருந்தது. இவ் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் நூற்று நாற்பத்தாறு ஊழியர்கள் (146) பயனடைந்திருந்தனர்

மேலும், மீளாய்விற்குட்படுத்தப்பட்ட காலத்தில், இடர் கடன்கள், வீட்டுக் கடன்கள், மற்றும் வாகனக் கடன்களை CAASL இன் ஊழியர் நலன்புரி நிகழ்வுகளாக வழங்கப்பட்டன.

CAASL இன் பணிப்பாளர் நாயகத்தாலும் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பணிபுரியும் அதன் ஊழியர்களாலும் முன்னெடுக்கப்பட்ட திறமைமிக்க சேவைகளுக்கும் எனது நன்றியறிதலை தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். மேலும், அனைத்து வேளைகளிலும் அவர்களது பொறுப்புக்கூறலை கருத்திற் கொண்டு மற்றும் ஆதரவு மற்றும் வழிகாட்டல்களை வழங்கிய CAASL இன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில்எனது நன்றியறிதலை தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், நான் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்கள்,அதன் செயலாளர், மற்றும் அதன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் அவர்கள் எனக்களித்த கூட்டிணைவு மற்றும் வழிகாட்டல் என்பனவற்றிற்காக இச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.



ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த
தலைவர்,
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
(09.01.2013 இருந்து 13.01.2015 வரை)

தலைவரின் அறிக்கை

# சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அறிக்கை



## உலகளாவிய நிலைமை

2014 ஆம் ஆண்டானது வர்த்தக விமானப் பறப்புக்களின் 100 ஆண்டுகள் நிறைவாகவும், 1944 இன் சிக்காக்கோ பிரகடனத்தின் 70 ஆண்டுகள் நிறைவாகவும் காணப்பட்டது.

இவ் ஆண்டு முழுமையாகவும் வான் போக்குவரத்துக் கைத்தொழிலானது தேசிய எல்லைகளினுடாக பிரயாணம் மேற்கொண்டு மக்களையும் பொருட்களையும் நகர்த்தும் விமான சேவைகளுடன் உலக பூகோளமயமாக்கலில் பிரதானதொரு அங்கமாகக் காணப்படுகின்றது. இத்துறையானது 58 மில்லியன் வேலைவாய்ப்புக்களுக்கு உதவுவதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.4 ரில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை ஏற்படுத்தி, வருடாந்தம் 3 பில்லியனுக்கு மேலான பயணிகளின் பரிமாற்றத்துடன் பூகோள இணைப்பு மற்றும் பொருளாதார ரீதியில் முக்கியமான பங்காளியாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருநாளும் 100,000 பறப்புக்களுக்கு மேலாக மக்களையும், பொருட்களையும் அவர்களது தரிப்பிட மையங்களுக்கு கொண்டு சேர்க்கின்றது. விமானப் பறத்தலானது 4.4 மில்லியன் புறப்பாடுகளுக்கு ஒரு விபத்து என்னும் பதிவுடன் கூடிய உலகப் பரிமாற்று ஊடங்களில் அதியுயர் பாதுகாப்பினையும், மிக வினைத்திறனாகவும் காணப்படுகின்றது. இன்று விமானப் போக்குவரத்தில் உலக பொருளாதாரமானது 3.4% தங்கியுள்ளது.

மிக முக்கியமானதாக நவீன வானூர்திகள் 80% ஆன வினைத்திறன் (100 பயணிகள் கிலோ மீற்றர்களுக்கு 3 லீற்றர் எரிபொருள்) மற்றும் ஜெற் பாவனைக்காலங்களுடன் ஒப்பீடுகையில் (127 dB) மிக உயர்ந்தளவிலான தாங்கிக் கொள்ளக் கூடியதான (82 dB) மிக அதிகபடியான சூழலியற் தாக்கங்களுக்கு சாதகமாகப் பதிலளிப்பவையாகக் காணப்படுவதனால வான் போக்குவரத்துத் துறையானது சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கங்களில் குறிப்பிடத்தக்க மட்டத்தினை அடைந்துள்ளது.

2014 இல் 1981 இலிருந்து 2013 வரையிலான காலப்பகுதியில் மொத்தமாக 73 விபத்துக்களை அனைத்து ரக வானூர்திகள் கொண்டிருந்தது. இவற்றில் 05 வருட காலப்பகுதி வரையில் (2009 – 2013) ஆண்டொன்றிற்கு 19 சம்பவித்த விபத்துக்கள் மற்றும் 517 இறப்புக்களையும் கொண்ட சராசரியுடன் ஒப்பிடுகையில் 641 இறப்புக்களுடனான 12 இறப்பு சம்பவித்த விபத்துக்களை அனைத்து ரக வானூர்திகள் உள்ளடங்கலாக கொண்டிருந்தது. 2014 இல் உலகளாவிய ரீதியில் ஜெற் விபத்து வீதம் 0.23 (1 மில்லியன் பறப்புக்களுக்கு சராசரி இறப்புக்களில் அளவிடப்பட்டது) உலகளாவிய சராசரி இழப்பு வீதம் 0.41 ஆகவும், மேலும் மில்லியன் ஜெற் பறப்புக்களுக்கு 0.58 சராசரி இழப்பு விபத்துக்களில் ஐந்து வருட (2009 – 2013) வீதத்திற்கு மேலான முன்னேற்றமொன்றினைக் கொண்டிருந்த போதும் குறிப்பாக 2013 முழுமையிலும் முன்னேற்றமொன்றினைக் கொண்டதாக அமைந்திருந்தது.

2014 வருடமானது MH 370 மற்றும் MH17 எனும் வானூர்திகள் இரண்டு அசாதாரணமானதும் துன்பம் நிறைந்த நிகழ்வானதுமாக அமைந்திருந்து எல்லோர் மனதிலும் மறக்கப்பட முடியாததுமாகக் காணப்படுகின்றது. ஆர் 370 இன் மறைவிற்கானதும் அதன் இழப்பிற்கானதுமான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத போதிலும் இச் சம்பவமானது 2014 இல் இறப்பு நிகழ்ந்த 12 சம்பவங்களில் ஒன்றாக அதாவது விபத்தாகக் கருதப்படுகின்றது. இது தாக்கம் மற்றும் வழிகாட்டல் அமுக்கத்தை மதிப்பிடுவதற்கு பன்நாட்டு செயற்பாட்டு மதிப்பீடுகளின் மூலம் உறுதுணை புரியப்பட்ட வர்த்தக வானூர்தியின் உலகளாவிய பின்பற்றற் செயற்பாடொன்றினை அடிப்படையிற்கொண்ட நியமத்தின் உள்வாங்கலை நோக்கிய நகர்தலுக்கான சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) கூட்டிணைவினை ஏற்படுத்துவதை விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலுக்கு விளைவாகக் கொடுத்திருந்தது.

வானூர்திக்கெதிரான ஆயுதத்தால்MH17தாக்கப்பட்டிருப்பினும், பூகோள அடையாளப்படுத்தப்பட்ட விபத்து வகைப்படுத்தல் எல்லையின் கீழ், இவ் விபத்து உள்ளடக்கப்படவில்லை. இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஏதாவதொரு அளவிடுகையினால் ஏற்படுத்தப்பட்டதாகும் என்ற வலுத் தாக்குகைச் செயற்பாடாக கருதப்படுகின்றது. இவ் விபத்தானது சிவில் விமானப் போக்குவரத்திற்கு பாதுகாப்பு மற்றும் ஆபத்துத்தன்மை பற்றிய நெருக்கடி மிக்க தகவலின் திறமைமிக்க பரிமாற்றத் தேவையினை வெளிப்படுத்தியிருந்தது. சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பறப்புக்கள் இரண்டிலுமான பயணிகள் எண்ணிக்கையில் 5.6% வருடத்தின் மீதான வருடவளர்ச்சியொன்றினை பதிவு செய்து 2014 இல் 3.3 மில்லியனிலும் அதிகமான மக்கள் 38 மில்லியன் பறப்புக்களில் தமது பயணத்தினை தொடர்ந்திருந்தனர். முழுமையில், 2013 மற்றும் 2014 இல் பெருமளவிலான பொருளாதாரங்கள் முற்றுகையிடப்பட்டதான பூகோள நிச்சயமற்ற தன்மைக்கு முகங்கொடுக்க நேரிட்டதில் பயணிகள் நெரிசலானது விரிவாற்றலைக் கொண்டிருந்தது. குறிப்பாக (சர்வதேச சுற்றுலாத்துறையானது) கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்குப் போன்ற உலகின் சில பகுதிகளில் நிலையானதான தன்மையினை கொண்டதாக இருந்த புவியியல் ஆபத்துத் தன்மையை கருத்திற் கொள்கையில் 2014 இல் கட்டுப்படுத்தக் கூடியதொன்றாகவுமாகக் காணப்பட்டது. மேலும் தொற்று நோய் என்பதும் விமானப் போக்குவரத்துத் துறைக்கு குறிப்பிடத்தக்களவு அச்சுறுத்தலைக் கொண்டிருந்தது. அதுமட்டுமன்றி, பெரியளவில் 2014 இல் சர்வதேச பயணிகளும் அவ்வாறான முக்கிய ஆபத்துக்களுக்கு நோய்த்தடுப்பாற்றலை கொண்டிருக்க வேண்டியவர்களாத்தோற்றம் பெற்றிருந்தார்கள்.

சர்வதேச பொருளாதாரத்தில் சீரற்ற வெளிப்பாட்டினை நிவர்த்தி செய்யும் பொருட்டு, 2014 இல் வெளிநாட்டுப் பொருட்கள் மற்றும் பண்டங்களுக்கான பூகோளத் தேவையில் தேறிய அதிகரிப்பொன்று தென்பட்டது. இது சீரான வளர்ச்சியைக் கொண்ட பல ஆண்டுகளின் பின்னர் 2013 இறுதிக் காலாண்டும் 2014 ஆம் ஆண்டும் வான் சரக்குச் சந்தையில் அதிகரித்த கேள்விக்கு உறுதுணையானது. பொருட்களின் உலக வர்த்தக அளவினை மதிப்பீடு செய்வதற்கிணங்க, கடல், தரை, மற்றும் ஆகாய மார்க்கங்களினால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளின் மொத்த ரீதியான அசைவானது அதிகரித்த வளர்ச்சிப் போக்கொன்றிற்கு வழிவகுத்துள்ளது. வான் சரக்கின் அளவானது முழுமையான வருடத்தில் 4.7% அதிகரிப்பொன்றைக் காட்டியுள்ளது.

பாதுகாப்பு, செயற்பாடு, பொருளாதாரம், மற்றும் முக்கியத்துவங்கள் என்பனவற்றை விருத்தி செய்தலில் பூகோள இணக்கப்பாடு,சூழலியல் நட்பு, மற்றும் கிரய வினைத்திறன் என்பவற்றில் வான் நெரிசல் வளர்ச்சியில் எப்போதுமில்லாத அதிகரிப்பினைக் கையாளும் பொருட்டு (இது ஒவ்வொரு 15 ஆண்டுகளுக்கும் இரு தடவைகளுக்கு விஸ்தரித்துள்ளது.), ICAOஆனது முழுமையான பூகோள விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலின் வழிகாட்டலாக 15 ஆண்டுகளுக்கான திட்டமிடற் சக்கரமொன்றாக விமானப் போக்குவரத்து முறைமை கூட்டுத் தரமுயர்த்தலை (ASBU) அறிமுகஞ் செய்துள்ளது. 2013 முதல் 2028 வரையான ICAO பூகோள வான் வழிகாட்டுகை இயலளவு மற்றும் வினைத்திறன் திட்டம் என்பன இணக்கப்பாடுடைய பூகோள வான் போக்குவரத்து முறைமைக்கு துணைபுரியும் முழுமையான திட்ட கருவியொன்றை அனைத்து நாடுகளுக்கும் வழங்கியுள்ளது. இது (நாடுகள் தமது தனிப்பட்ட திட்டமிடல் நோக்கங்களுக்கான தந்திரோபாயத் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு அந் நாட்டுக்கான விஷேட தேவைப்பாடுடைய முதலீடுகளை வழங்கல்) தற்போது கிடைக்கக் கூடிய அனைத்து முக்கியமாக செயற்பாட்டு முன்னேற்றம், உலகம் முழுவதனையும் ஓரணிப்படுத்தும் தள மற்றும் பறப்பு மின்னணுவியற் தொழிநுட்பத்தில் அடுத்த தலைமுறை என்பனவற்றை இனங்கண்டு கொள்கின்றது. பூகோள திட்டமிடலின் கூட்டான தரமுயர்த்தல் திட்ட அணுகுமுறையானது மேலும் பாவனையாளர் தேவை, நியதிச் சட்டத் தேவைப்பாடு மற்றும் வான் வழிகாட்டற் சேவை வழங்குனர் மற்றும் விமான நிலையங்களின் தேவைகள் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றது. அதிகமான அளவு நாடுகள் அவர்களின் விமானப் போக்குவரத்து கீழ் கட்டுமான அபிவிருத்தியில் கூட்டுத் தரமுயர்த்தலில் அமைப்பினை நோக்கி தமது கவனத்தை திருப்பியுள்ளது.

ICAOஆனது,தேசியபாதுகாப்புத் திட்டமொன்றின் (SSP) அமுலாக்கலுக்கான முன்நிபந்தனைகளில் ஒன்றாக அளவிடுகை பாதுகாப்பு மேற்பார்வைத் திட்டமாக உருவாகியுள்ள பூகோள விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புத் திட்டத்தின் (GASP) அமுலாக்கலுக்கு உதவுமாறு நாடுகளுக்குப் பணித்துள்ளது. விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பினை முன்னெடுத்துச் செல்வதற்கு மூன்று பூகோள முன்னுரிமைப்படுத்தல் விடயங்கள் காணப்படுகின்றன. அவையாவன ஓடுபாதையின் பாதுகாப்பினை முன்னேற்றுதல், நிலப்பகுதி (CFIT) விபத்துக்களின் கட்டுப்பாட்டுப் பறப்புக்களின் எண்ணிக்கையினைக் குறைத்தல் மற்றும் பறப்பில் விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் ஏற்படக்கூடிய கட்டுப்பாட்டு இழப்புக்களின் எண்ணிக்கையைக் குறைத்தல் என்பனவாகும். மேலும், ICAO ஆனது வெவ்வேறுபட்ட பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் நெருங்கிய தொடர்பினை பேணக்கூடிய GASP இல் உள்ளவாறான எண்ணக்கருக்கள்/விடயங்கள் சிறந்த முறையில் கையாளக்கூடிய பிராந்திய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புக்

குழுக்களை தாபித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

உலகத்தில் மிகப் பெரிய வானூர்தி உற்பத்தியாளர்கள் தமது வாடிக்கையாளர் விமான சேவைக்கு வானூர்திகளை வினியோகிப்பதில் 2014 இல் மிக ஈடுபாடு உடையனவாகக் காணப்பட்டன. 2014 இல் போயிங் கம்பனியினால் வினியோகிக்கப்பட்ட 723 வர்த்தக ஜெற் ரக வானூர்திகளில் B787 டீம்லைனஸ் வானுர்திகள் 114 மற்றும் B737 சிங்கிள் ஐசல் வானுர்திகள் 485 இதனுள் அடங்கும். ஏயார்பஸ் கம்பனியானது 30 A-380 வானூர்திகள் மற்றும் 306 A320 வானூர்திகள் உள்ளிட்ட 629 வானுர்திகளை வினியோகித்திருந்தது.

### பிராந்திய நிலைமை

ஆசியா/பசுபிக் பிராந்தியமானது உலக RPKs களின் பிரகாரம், 31% ஆன பங்கினைக் கொண்டு 2014 இல் உலகத்தின் மிகப் பெரிய வான் போக்குவரத்துச் சந்தையாகத் தரப்படுத்தப்பட்டது. இது முன்னைய ஆண்டில் 5.8% ஆல் வளர்ச்சியடைந்து 27% உடனாக இரண்டாவது மிகப் பெரிய பங்கினை கொண்டுள்ளது. ஆசியா/ பசுபிக் உள்நாட்டுச் சந்தையானது பிராந்திய மொத்த உள்நாட்டு பறப்புக்களில் ஏறத்தாழ 60% ஐப் பதிவாக்கி பிரதானமாக சீன எயார்லைன்ஸ் மூலம் பெற்று 2013 உடன் ஒப்பிடுகையில் 7.9% ஐ கொண்ட விரைவான வளர்ச்சியைப் பதிவாக்கியுள்ளது. ஆசியா/ பசுபிக் பிராந்தியமானது உலக RPKs களின் பொருட்டு 40% பங்குடன் கூடியதாக 2014 இல் உலகின் மிகப் பெரிய வான் சரக்குச் சந்தையாக அமைந்திருந்தது.

2014 இல், வானூர்திப் புறப்பாடுகளைக் கருத்திற் கொண்ட உலகின் 30 அதிகூடிய நெரிசலைக் கொண்ட விமான நிலையங்களில் 15 விமான நிலையங்கள் 3.2 மில்லியன் புறப்பாடுகளைப் பதிவாக்கிக் கொண்ட சீனாவுடன் கூடிய ஆசியா/ பசுபிக் பிராந்தியத்தில் அமைந்தவையாகக் காணப்பட்டன.

ஆசியா/ பசுபிக் விமான நிலையங்கள் முழுமையாக குறித்த வருடத்திற்காக அதிகபடியாக 6% ஐக் கொண்ட நெரிசலை ஒட்டுமொத்த வளர்ச்சியாகப் பதிவாக்கியுள்ளது. பிராந்தியத்தின் பிரதான வர்த்தக விமான நிலையங்களில் பெரும்பாலானவை இயலளவில் நிலையானவையாக மற்றும் மெதுவான வளர்ச்சி எனும் இரண்டையும் அடைந்து, 2014 இல் சில விமான நிலையங்கள் மெதுவான வளர்ச்சியை அனுபவமாகக் கொண்டிருந்தன. பிராந்தியத்தில் மிகப் பெரிய விமான நிலையமான பீஜிங் (PEK) 2.9% ஆல் வளர்ச்சியடைந்தது. அதேவேளை பிராந்தியத்தில் மிகப்பெரிய இரண்டாவது விமான நிலையமாக ஜப்பான் ஹெனெடா (HND) 5.3% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது.

2014 இல் APAC பிராந்தியத்தில் இடம்பெற்ற 20 விபத்துக்களில் ஒரு விபத்து 162 மரணங்கள் சம்பவித்த விபத்தாகக் காணப்படுகின்றது.

தொடர்ச்சியான பாதுகாப்பினை உயர்த்துதல், கிரய வினைத்திறன் கட்டமைப்பு, மற்றும் சூழலியல் பொறுப்புக்கூறல் என்பன ஆசியா/ பசுபிக் விமான சேவைக் கைத்தொழிலுக்கான நெருக்கடியான காரணங்களுக்கிடையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட விமானப் போக்குவரத்து என்பன ஆசியா/ பசுபிக் பிராந்தியமானது 24 மில்லியன்களுக்கு மேலான வேலைவாய்ப்புக்களையும், 500 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களையும் பொருளாதாரச் செயற்பாடு பூராகவும் பதிவாக்கியுள்ளது. மேலும், இது வளர்ச்சிக்கு மிகச் சிறந்த முக்கியத்துவம் கொண்டதாகக் காணப்படுகின்றது. அடுத்து வரும் 20 ஆண்டுகள் பூராகவும் ஆசியா/ பசுபிக் ஆனது உலகளாவிய வளர்ச்சியில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆசியா/ பசுபிக் வான் காவுகையாளர்கள் அவர்களது விரைவான விரிவாக்கலைத் தொடர்ந்து குறைந்த கட்டணக் காவுகையாளர்களாக அடுத்த இரண்டு பத்தாண்டுகளில் கேள்வியில் மிகக் கூடிய தொகையினைப் பெற எதிர்பார்க்கப்படுகின்றார்கள். குறிப்பாக, தென்கிழக்கு ஆசியாவில், சீனாவானது உலகின் மிகப் பெரிய விமானப் போக்குவரத்துச் சந்தையினை கொண்டிருக்குமென்பதுடன், இந்தியாவில் நடுத்தர வகுப்பு விரிவாக்கலானது அதன் உயர்விற்கு இட்டுச்செல்லும்.

### உள்நாட்டு நிலைமை

2014 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரபையின் நியதிச் சட்டப் பரப்பெல்லையின் பெரும்பாலும் அனைத்துப் பகுதிகளில் குறிப்பிடத்தக்கதொரு அளவிலான விரிவாக்கத்தினை அவதானிக்க முடிந்தது. சிவில் பதிவேட்டின் வானூர்திகளின் எண்ணிக்கை 63 இலிருந்து 71 ஆக வளர்ச்சி பெற்று சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் 13% வளர்ச்சியைக் கொண்ட சாதகமானதொரு நிலைமையினை வெளிப்படுத்தியது. ஏனைய தொடர்புபட்ட பரப்பெல்லைகளின் எண்ணிக்கையில் தொடர்ச்சியான அதிகரிப்பானது DGCA ஆல் வழங்கப்படும் நீர் விமானத்தளங்கள், உள்நாட்டு வான் செயற்பாட்டாளர்கள், பறத்தற் பயிற்சியளித்தற் பாடசாலைகள், போக்குவரத்து

முகவர்கள், மற்றும் ஆள்சார்ந்த உரிமங்கள் மிகச் சிறப்பானதாக அமைந்தது.

2014 இன் முடிவில் இலங்கைக்குச் செயற்படுத்தப்பட்ட வெளிநாட்டு விமான சேவைகளின் எண்ணிக்கை 24 இலிருந்து 26 ஆக உயர்வடைந்தது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நாற்பத்தைந்து (45) நகரங்கள் விமான சேவைகளின் மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு நேரடியாக இணைக்கப்பட்டன. கொழும்பிற்கு வெளியிலான ஐந்து மிகவும் விரும்பப்படும் நகரங்களான மலேசியா, சென்னை, டுபாய், சிங்கப்பூர், மற்றும் டோகா என்பன காணப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் BIA இல் நகர்ந்த வானூர்திகளின் எண்ணிக்கை 55,228 ஆக உயர்ந்ததுடன், இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 9% அதிகரிப்பினைப் பதிவாக்கியது. BIA ஆனது 7.8 மில்லியன் பயணிகள் நகர்வினையும், 192,000 மெற்றிக்தொன் வான் சரக்குகளையும் கையாள்வதுடன், இது 2013 உடன் ஒப்பிடுகையில் முறையே 7% மற்றும் 1% வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் BIA இல் சராசரி 53.5% பயணிகள் நகர்வினைப் பதிவாக்கியதுடன், 46% உள்வருகை சரக்கினையும், 55% வெளியேறுகைச் சரக்கினையும் கையாண்டுள்ளது.

BIA இனுடாக பரிமாற்றிக் கொள்ளப்பட்ட பயணிகள் 1.2 மில்லியனில் 82% ஆன பயணிகள் (925,000) சிறிலங்கன் எயார்லைன்ஸினால் காவுகை செய்யப்பட்டனர்.

2014 இல் MRIA 20,474 சர்வதேசப் பயணிகளையும், 69 மெற்றிக்தொன் வான்சரக்குகளையும் கையாண்டது. 2014 இல் MRIA உள்ளும், வெளியிலுமான வானூர்தி நகர்வுகள் 2,984 ஆகக் காணப்பட்டது. MRIA ஐப் பிரசித்தப்படுத்தும் நோக்கில், அரசாங்கமானது தரையிறக்கல் மற்றும் தரித்து நிற்றற் கட்டணங்களில் வழங்கப்பட்ட நியாயமான கட்டணங்களுக்கு மேலாக, வெளிநாட்டு விமான சேவைகளுக்கு MRIA இலிருந்து மூன்றாவது, நான்காவது, மற்றும் ஐந்தாவது சுதந்திரமான விமானப் போக்குவரத்து உரிமைகள் தொடர்பில் "திறந்த வானம்" கொள்கையினை உள்வாங்கிக் கொண்டுள்ளது.

உள்நாட்டு வான் பிரயாணம் தொடர்பில், 5,445 எண்ணிக்கை கொண்ட வர்த்தகப் பறப்புக்கள் வேறுபட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட செயற்பாடுகளை முன்னெடுத்தன. உள்நாட்டு வான் பயணிகளுக்கான கேள்வி 2013 உடன் ஒப்பிடுகையில் 2014 இல் 16% ஆல் அதிகரித்திருந்தது அவ்வாறே, அவ்வாறான பறப்புக்களில் பயணித்த பயணிகளின் எண்ணிக்கை 2013 உடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்காக (10,590) காட்டி 31,527 ஆக அதிகரித்திருந்தது. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் நிலையான இறக்கைகளைக் கொண்ட தரை விமானங்களின் பறப்பின் பயன்பாடு 33% ஆல் குறைவடைந்திருந்தது. அதேவேளை மிதப்பு விமானப் பறப்பு மற்றும் ஹெலிகொப்டர் பறப்புக்கள் முறையே நான்கு தடவைகள் மற்றும் 26% ஆகக் காணப்பட்டன. உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் ஈடுபட்ட பயணிகளில் 67% ஆனோர் நிலையான இறக்கை வானூர்திகளை பயன்படுத்தியிருந்ததுடன், 18% ஆனோர் மிதப்பு விமானங்களைப் பயன்படுத்தியிருந்தனர். எனினும் ஹெலிகொப்டர்களின் பயன்பாடானது மீள்பார்வைக்கு உட்படுத்திய ஆண்டில் 5% ஆகக் காணப்பட்டன. கண்காட்சிக்கான பறப்புக்களுக்கான வெப்பவாயு பலுன்களின் பயன்பாடானது சுற்றுலாத்துறையினருக்கிடையில் பிரபல்யம் மிகுந்து காணப்பட்டது.

2014 ஆனது வான் பிரயாணத்தில் எந்தவொரு மரண சம்பவிப்பு நிகழ்வுகளைக் கொண்டிராத வகையில் 2009 இலிருந்து ஐந்தாவது தொடர்ச்சியான வருடமாக இருந்து வருகின்றது.

கட்டாயமான அறிக்கையிடல் முறைமையின் கீழ்,CAASL க்கு 2014 இல் அறிக்கையிடப்பட்ட 243 பல்வேறுபட்ட விமானப் போக்குவரத்து நிகழ்வுகளில், 222 நிகழ்வுகள் இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகளுடன் தொடர்புபட்டிருந்தது. மிகுதியானவை இலங்கையின் ஆட்புல வான்பரப்பினுள் செயற்படுத்தப்படும் வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்ட வானூர்திகளுடன் தொடர்புபட்டவையாகும். BIA மற்றும் MRIA ஆகிய இரு விமான நிலையங்களிலும் வானூர்தியுடன் பறவைகள் மோதல் வீதத்தின் அதிகரிப்பானது 2014 இல் அடிப்படை முதன்மையான பாதுகாப்பு விடயமாகக் காணப்பட்டது.

மேலும் 2014 இல் CAASL ஆனது செயற்பாட்டாளர்கள் சான்றுப்படுத்துகை மற்றும் சோதனை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அதனது நியதிச்சட்டக் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை மேற்கொள்ள உடைய தகைமை மற்றும் திறனுள்ள தொழிநுட்ப ஆளணியினரை உள்வாங்கிக் கொள்வதிலும் அவர்களைத் தக்க வைத்துக் கொள்வதிலும் அதனது பிரதான இயலாமையினை வெளிக்காட்டியிருந்தது. விஷேட தொழில்சார் படிகளை வழங்கிக் கொள்வதில் திறைசேரி அனுமதிக்கான CAASL இன் மீள் கோரிக்கைகள் விடையளிக்கப்படாத விடயமாகத் தொடர்ந்துள்ளது. 2014 இல் CAASL இன் ஒரு தொகை பயிற்றப்பட்ட ஊழியர்கள் வெளியேறியிருந்ததுடன், ஆகக்

குறைந்தளவு ஒரு சோதனையாளரையாவது உள்வாங்கிக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுலாக்கஞ் செய்யும் தேசிய நிறுவனமொன்றாக CAASL தொழிற்படுவது குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டிய தேவையுடையதாக இருப்பதுடன், CAASLஆனது சிவில் விமானப் போக்குவரத்தில் ஈடுபடும் ஏனைய நாட்டு நிறுவனங்களுக்கு இணையாக அதனது கடமைகளை வினைத்திறனான வகையில் மேற்கொள்ளக் கூடியதான தகைமைமிக்க, திறனான தொழிநுட்ப ஊழியர்களை உள்வாங்கிக் கொள்ள, பயிற்றுவித்துக் கொள்ள, மற்றும் அவர்களைத் தக்கவைத்துக் கொள்ளக் கூடிய தளவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2014 இல் CAASL இன் மொத்தச் செலவில், 49% ஆனவை ஊழியர் செலவாகவும், 3% ஆனவை ஊழியர் பயிற்சியளித்தற் செலவாகவும், 4% ஆனவை CAASL இன் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புடைய வேறுபட்ட கூட்டடங்கள் மற்றும் வேலைப்பட்டறைகளில் பங்கு பற்றலுக்கு மென செலவு செய்யப்பட்டவையாகும்.

விமான நிலையங்களின் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு நியதிச்சட்டங்களுக்கிணங்க, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் CAASL இன் பிரசன்னம் மிகவும் அத்தியாவசியமானதாக இருப்பதுடன், இத் தேவைப்பாட்டினைத் திருப்தி செய்யும் பொருட்டு, CAASL ஆனது ரூபா 39 மில்லியன் செலவில் MRIA இல் அதன் அலுவலகதொன்றினை நிர்மாணித்தது. மேலும் இது 2014 யூன் மாதம் திறந்து வைக்கப்பட்டது. CAASL ஆனது தெற்கு, கிழக்கு, மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் சிவில் விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள CAASL இன் ஊழியர்களின் பயன்பாட்டிற்கென ரூபா 42 மில்லியன் செலவில் வீரவிலவில் விடுதியொன்றின் நிர்மாணத்தினை முடிவுறுத்தத் தீர்மானித்தது. இவ் விடுதியானது ஒவ்வொன்றிலும் இரண்டு அலகுகளுடனான நான்கு வீடுகளை உள்ளடக்கியுள்ளது.

CAASL ஆனது கட்டுநாயக்க நைகந்தவில் அதனது தலைமைக் கட்டட நிர்மாணத்திற்கான அதனது வேலைகளை முன்னெடுத்து வந்துள்ளது. அரசாங்க கொள்வனவு முறைமையைப் பின்பற்றி திறந்த கொள்வனவுச் செய்முறையொன்றினூடாக நிர்மாணத்திற்கான ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். கட்டட நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்யும் பொருட்டு கேள்வி மனுக்கள் வரவழைக்கப்பட்டன. CAASL ஆனது இந் நோக்கத்திற்குப் பயன்படுத்தும் பொருட்டு அதனது சேமிப்பிலிருந்து ரூபா 1,150 மில்லியன் நிதியொதுக்கீடொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு பொதுத் திறைசேரியிலிருந்து அனுமதியினைப் பெற்றுக் கொண்டது.

2014 இல் CAASL இன் வருமானம் தேறிய இலாபத்தில் ரூபா 813 மில்லியன் நிதியியற் பெறுபேற்றுடனான ரூபா 347 மில்லியன் மொத்தச் செலவிற்கு எதிராக ரூபா 1,473 மில்லியனை கொண்டிருந்தது. 2014 இல் CAASL ஆனது ரூபா 250 மில்லியனைப் பொதுத் திறைசேரிக்கு அனுப்பியிருந்தது.

2014 இல் கொங்கொங்கில் நிகழ்ந்த 51வது DGCA மாநாட்டில், இலங்கை நாட்டின் DGCA அவர்கள் மூன்று வருட காலப் பகுதிக்கான ஆசியா–பசுபிக் பிராந்திய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேலும் ICAO ஆனது கொழும்பில் 2016 இல் 53 ஆவது ஆசியா– பசுபிக் பிராந்திய DGCA மாநாட்டை நடாத்துவதற்கும், 2017 இல் ICAO பூகோள வான் சேவைகள் பேரம்பேசலுக்கான 10 ஆவது மாநாட்டை நடாத்துவதற்கும் இலங்கைக்கு அனுமதித்திருந்தது.

இந்த அலுவலகத்தில் நான் எனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தமது உதவிகள் மற்றும் ஆதரவினை வழங்கியதற்காக சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சர், செயலாளர், மற்றும் அதன் ஊழியர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், எனது தொழிற்பாடுகளில் உதவிபுரிந்த மற்றும் வழிப்படுத்திய சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர், உபதலைவர், மற்றும் அதன் உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இறுதியாக தமது கடமைகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தமைக்காக, உயர்ந்தளவு ஊக்குவிக்கப்பட்ட, ஒழுக்கப்படுத்தப்பட்ட, மற்றும் நம்பகத்தன்மை மிக்க CAASL இன் ஊழியர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றியை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



எச்.எம்.சீ.நிமல்சிறி
சிவில் விமான போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.

# பக்கத்தோற்றம் மீள்பார்வை

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 27 டிசம்பர் 2002 இல் தாபிக்கப்பட்டதுடன், இது இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பின் 154வது வாசகத்திற்கமைய கணக்குகளின் கணக்காய்வு நோக்கங்களுக்காக நியதிச் சட்ட நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான தொழிற்பாடு என்பது காப்பு, பாதுகாப்பு, வினைத்திறன், மற்றும் தொடர்ச்சித்தன்மை என்பனவற்றை சிவில் விமானப் போக்குவரத்தில் ஒழுங்கு செய்தலாக இருப்பதுடன்,இலங்கைப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தி, அதன் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பிரதான பங்காளியாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை வழிப்படுத்தும் அதேவேளை 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம் மற்றும் 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் கீழ்,சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பால் (ICAO) ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளின் பிரயோகத்துடன் இணங்குதலில் சூழல் மீதான அதன் தாக்கத்தையும் ஒழுங்கு செய்வதுமாக அமைகின்றது.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை எட்டு (08) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அவர்களில் ஐவர் (05) சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் நியமனம் பெறுகின்றனர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதியொருவர், மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் என்போர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை பதவிவழி நியமனம் பெற்ற ஏனைய மூன்று உறுப்பினர்களாகக் காணப்படுகின்றனர். இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் மற்றும் உபதலைவர் என்போர் இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்துத்துறைக்கு பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களால் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் அவர்கள் சட்டத்தால் CAASL இன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகத் தொழிற்படுகின்றார்.

நியமனம் பெற்ற உறுப்பினரது உத்தியோக பூர்வ காலமானது நியமனம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களாகும்.

அதிகாரசபையானது தற்போது சிவில் விமானப் போக்குவரத்துத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் தொழிற்படுவதாக அமையும்.

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உறுப்பினர்கள்

அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாக 2014 இல் பின்வரும் உறுப்பினர்கள் செயற்பட்டனர்.

ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த (தலைவர்)
திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யூ.ஜயசுந்தர (உபதலைவர்)
திரு.ஷஹி அலீப் (உறுப்பினர்)
திரு.எல்.டி.எஸ்.பாலசூரிய (உறுப்பினர்)
திரு.ஏ.டப்ள்யூ.சைடியுல் அமீன் (உறுப்பினர்)

பதவி வழி நியமனம் பெற்ற உறுப்பினர்கள்

திரு. கோட்டாபேய ராஜபக்ஷ,பாதுகாப்புச் செயலாளர்
திரு.பீ.அல்கம – பணிப்பாளர் நாயகம், பொது நிதித் திணைக்களம்
திரு. எச்.எம்.சீ.நிமல்சிறி,சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம்

பக்கத்தோற்றம் மீள்பார்வை

தலைவர் ஜெனரல் றொஹன் டி.சில்வா தளுவத்த,WWV, RWP, VSV, USP, LOM,ndc, psc அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை பன்னிபிட்டிய தர்மபாலா வித்தியாலயத்தில் பெற்றிருந்ததுடன் அவர் தனது இரண்டாம் நிலைக் கல்வியினை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் பெற்றிருந்தார். அவர் இங்கு கல்வியிலும், விளையாட்டிலும் திறமை காட்டினார்.

இவர் இலங்கைத் தரைப்படையில் 1961 இல் இணைந்துகொண்டார் என்பதுடன் அவர் தமது உத்தியோகத்தர்– படைப் பயிற்சி மாணவருக்கான பயிற்சியின் பொருட்டு றோயல் இராணுவ அக்கடமிக்கும் மற்றும் இங்கிலாந்து சன்ட்கியூஸ்ற் இற்கும் அனுப்பிவைக்கப்பட்டார். இலங்கை இராணுவப் பயிற்சி மாணவர்களில் முதலாவதாக வெளியேறிய இவர், கவசப்படைப்பிரிவில் 2வது லெப்டினன்ற் பதவிக்கு அமர்த்தப்பட்டார். மேலும் இவர் தனது இளம் உத்தியோகத்தர் பயிற்சியின் பொருட்டு இங்கிலாந்து – பௌங்ரன் (Bowington, UK) இல் உள்ள றோயல் கவசப்படைப்பிரிவு நிலையத்திற்கு அனுப்பப்பட்டார். அதன் பின்னர் அவர் இந்தியா –வெலிங்ரனில் புகழ் பெற்ற உத்தியோகத்தர் கல்லூரிக் கற்கைநெறி, இந்தியா–புதுடெல்லியில் தேசிய பாதுகாப்புக் கற்கை நெறி உள்ளடங்கிய பல கற்கை நெறிகளைப் பெற்றார். இவரது 41 வருட கால முன்னுதாரணம் மிக்க சேவைக் காலத்தில் இவர் பல்துறை செயற்பாட்டுகள் கொமாண்டர் (கட்டளை அதிகாரி), ஊழியர் பிரதானி, பகுதி கொமாண்டர், பிரிகேட் கொமாண்டர் மற்றும் இராணுவ பயற்சிக் கல்லூரி கட்டளை அதிகாரி என பல முக்கிய கட்டளையிடல், உத்தியோக, மற்றும் கற்கைநெறி நியமனங்களை தன்னகத்தே கொண்டிருந்தார்.

மேலும் இவர் வடக்கு மற்றும் கிழக்கு அனைத்துச் செயற்பாடுகளுக்குமான கட்டளை அதிகாரியாக பணிபுரிந்த வேளை 1995 இல் யாழ்ப்பாணம் குடாநாடு விடுவிக்கப்படுவதற்கான சூரியக்கதிர் நடவடிக்கை எனப்படும் மிக முக்கிய இராணுவ நடவடிக்கை உள்ளடங்கலாக பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

மேலும் இவர் ஜெனரல் தளுவத்தயாலும் அமெரிக்காவின் பசுபிக் இராணுவ கட்டளை அதிகாரியாலும் இணைந்து நடாத்தப்பட்ட பசுபிக் இராணுவ முகாமைத்துவக் கருத்தரங்கு உள்ளடங்கலாக பல சர்வதேச கருத்தரங்குகளில் பங்குபற்றினார் என்பதுடன், இந் நிகழ்வில் இவருக்குவெளியார்ந்த சேவைகளின் செயற்பாடுகளில் செயற்பட்டுக்கொண்ட தனிச் சிறப்பு மிக்க செயலாற்றுகைக்காகஅமெரிக்க அதிபரால் LEGRON OF MERIT எனும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இராணுவ கட்டளை அதிகாரியாக அவரது சேவையின் மகுடத்தினை அடைந்த நிலையில், அவர் 1998 டிசம்பரில் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றார். இவரது பெறுமதி மிக்க சேவையை கௌரவிக்கும் பொருட்டு, இவர் ஜெனரல் நிலைக்கு உயர்த்தப்பட்டதுடன், இணைந்த செயற்பாட்டுச் செயலகத்திற்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். இராணுவம் வன்னி பகுதியை இழந்து கொண்டு வரும் போதும், யாழ்ப்பாணம் குடாநாட்டை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதும், இவர் பாதுகாப்பு செயலணிக்கான பிரதானியாக நியமிக்கப்பட்டதுடன் நிலமையினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரும் பொருட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். வெற்றிகரமாக இலக்கு



## தலைவர்

**ஜெனரல் றொஹன் டி. சில்வா தளுவத்த,** WWV, RWP, VSV, USP, LOM, ndc, psc

முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பொருட்டு, இவர் இறுதியாக 2002 இல் இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர், அவர் பிரேஸிலுக்கு துதுவராக நியமனம் பெற்றார். அது வரை அந் நாட்டில் துதுவராலயமொன்று இல்லாததன் பொருட்டு, இவரே துதுவராலயமொன்றை அங்கு நிறுவவேண்டியிருந்தது. துதுவராக இருந்த அவரது கடமைப்பயண முடிவில் இலங்கைக்கும் பிரேஸிலுக்கும் இடையிலான சிறந்த தொடர் பின் முன்னோடியில் அவரது வெளியார்ந்த பங்களிப்பினை இனங்கண்டு பிரெஸில் ஜனாதிபதியினால் GRAND CROSS OF THE NATIONAL ORDER OF THE SOUTHERN CROSS எனும் வெகுமதியளித்து கௌரவிக்கப்பட்டார். இவர் இலங்கைக்கு திரும்பிய போது 2011 இல் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார். 2012 இல் இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டார் மேலும், இவர் கொத்தலாவ பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் வேந்தராக நியமிக்கப்பட்டார். இவர் ஆர்வம் மற்றும் பல்துறை பயிற்சித் திறன் மிக்கவிளையாட்டு வீரனாக இருந்து மெய்வல்லுநர் போட்டிகள், கூடைப்பந்து, கிரிக்கெட், பற்மின்டன் மற்றும் ரெனிஸ் என்பவற்றில் வர்ணங்களை பெற்று வெற்றியீட்டினார். இவர் இருபது வருடங்களாக தேசிய கூடைப்பந்தாட்ட அணியினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன், அவ் அணியின் தலைமைப் பொறுப்பினையும் ஏற்றிருந்தார். மெய்வல்லுநர் போட்டியில் மிக முக்கிய அடைவு மட்டமாக பிரிட்டிஸ் இராணுவவெற்றி வீரர்கள் நிகழ்வில் மும்மடங்கு பாய்தல் நிகழ்வில் வெற்றியீட்டியதனையும், பிரிட்டிஷ் தேசிய மெய்வன்மைக் கூட்டங்களில்,மெய்வன்மையில் பிரிட்டிஷ் இணைந்த சேவைகளில் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றிருந்தார். இவர் மெய்வன்மையாளருக்கான பிரிட்டிஷ் இணைந்த சேவைகள் வர்ணங்களை வெற்றியீட்டக் கூடியவராகவும் திகழ்ந்தார். அவர் தனது சேவைக்காலம் முழுமையிலும், அவர் பொறுப்பேற்றிருந்த ஒவ்வொரு கடமையிலும் தனது முகாமைத்துவ திறனை வெளிக்காட்டியிருந்தார்.

பக்கத்தோற்றம் மீள்பார்வை



## திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யு'.ஜயசுந்தர
## உபதலைவர்

திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யு'.ஜயசுந்தர அவர்கள், அவரது ஆரம்பக் கல்வியினை கண்டி தர்மராஜாக் கல்லூரியில் பெற்றுக் கொண்டார் என்பதுடன், இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். இவர் 1971 இல் பொலிஸ் திணைக்களத்தில் தன்னை இணைத்துக் கொண்டதுடன், அவரது 37 வருடகால சேவையின் பின்னர் ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஓய்வு பெற்றார். இவர் அவரது முன்னுதாரணம் மிக்க சேவைக் காலத்தில் பயிற்சியின் நிமிர்த்தம் ஜப்பான், மலேசியா, ஸ்கொட்வான்ட் யாட், அமெரிக்க ஐக்கிய இராச்சியம், மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தார். மேலும் இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் உதவித் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினராக கடமைகளை ஏற்பதற்கு முன்னர், வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் (இலங்கை) கம்பனியில் விஷேட நடவடிக்கைப் பணிப்பாளராக இருந்தார்.

## திரு கோட்டாபேய ராஜபக்ஷ, RWP,RSP

### பாதுகாப்புச் செயலாளர் - பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு - (பதவிவழி உறுப்பினர்)



திரு கோட்டாபேய ராஜபக்ஷ RWP, RSP அவர்கள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைப் பெற்றார். இவர் தியத்தலாவ இராணுவப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியினை நிறைவு செய்ததுடன், 26 மே 1972 இல் இவர் இலங்கைத் தரைப்படையின் சமிஞ்ஞைப் பிரிவிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

1974 இல் இலங்கைத் தரைப்படையின் சிங்க படைப்பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டார். இவர் மேலும் 1980 களில் ராஜரட்ட ரைபிள் படைப்பிரிவிலும், 1983 களில் கஜபா படைப்பிரிவிலும் இவர் ஒரு லெப்டினற் கேர்ணல் பதவி நிலையில் 1991 இல் தனது முதிர்வு பெறாத ஓய்வுறுத்தற் காலம் வரை பணிபுரிந்தார்.

திரு ராஜபக்ஷ அவர்களின் முன்னுதாரணம் மிக்க இராணுவ சேவைக் காலத்தில், அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் தரைப்படை வீரருக்கான உயர்நிலைப் பாடநெறி மற்றும் இந்தியாவின் வெலிங்டனிலுள்ள பாதுகாப்பு சேவைகள் ஆளணியினர் கல்லூரி உள்ளடங்கலாக மிக முக்கியம் மிக்க பயிற்சி நெறிகளைத் தொடர்ந்தார்.

திரு ராஜபக்ஷ அவர்கள் வடமராட்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்ட ஒரு இராணுவவீரராவர். இவர் இந்த நடவடிக்கைகளின் போது கஜபா ரெஜின்மென்ற் முதலாவது படைப்பிரிவிற்குக் கட்டளையிடும் அதிகாரியாகத் தொழிற்பட்டார்.

இவர் 1990 இல் “முப்படைப் பலம் மற்றும் ஜயசக்தி இராணுவ நடவடிக்கைகளின் போது வெற்றிகரமாகத் தனது அதே படைப்பிரிவிற்கு கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்டார். மேலும் இவர் கொத்தலாவல பாதுகாப்புப் பயிற்சி நிலையத்தின் பிரதிக் கட்டளையதிகாரி எனும் பதவி வகித்ததுடன், இவரது தன்னிகரற்ற சேவையைப் பாராட்டி இவருக்கு “ரண விக்கிரம” மற்றும் “ரணசு‘ர” பதக்கங்கள் அணிவிக்கப்பட்டார்.

## திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி

### சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர். (பதவிவழி உறுப்பினர்)



திரு.எச். எம். சீ.நிமல்சிறி அவர்கள் 2002 இல் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஏற்படுத்தப்பட்ட காலத்திலிருந்து அதனது பணிப்பாளர் நாயகமாகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பணியாற்றிவருகின்றார். இவர் 1987 இல் இருந்து சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தில் செயற்பாட்டுகள் பிரிவின் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்துள்ளதுள்ளார். இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வளர்ச்சிக்காக புதிய சட்டவாக்கல் அமைப்பினை வரைவதற்கும், 1950 இன் 50 ஆம் இலக்க வான் செலவியற் சட்டத்தினைப் பிரதி நிதித்துவப்படுத்தும் 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் உருவாக்கலுக்கும் பங்களிப்புச் செய்த உத்தியோத்தர்களில் ஒருவருமாவார். திரு. நிமல்சிறி அவர்கள் தனது பணித்துறை முன்னேற்ற காலத்தில், தனிநபர் உரிமம் வழங்குகை, வான் போக்குவரத்து, வான் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் தற்பாப்பு, வான்செலவு சேவைகள், பாதுகாப்புச் சோதனை, மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள் விமான விபத்து விசாரணை என பலதரப்பட்ட பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டுள்ளார் என்பதுடன், சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் பரந்தளவான அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் மேலும் ICAO உலகளாவிய பாதுகாப்பு சோதனை ஆய்வாளருக்கான பயிற்சிநெறி, பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள், தேசிய பாதுகாப்பு திட்ட பயிற்சிநெறிகளிலும் பங்குகொண்டிருந்தார்.

திரு. நிமல்சிறி அவர்கள் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் முன்னைய சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் என்பனவற்றைப் பிரதிநிதித்துவம் செய்து வெளிநாடுகளுடன் பல்வேறுபட்ட இருதரப்பு வான் சேவைகள் கலந்துரையாடல்களிலும், சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான வெவ்வேறுபட்ட பிராந்திய மற்றும் சர்வதேச

மாகாநாடுகளிலும் பங்குகொண்டுள்ளார். 2007 இல் இவர் இலங்கை அரசாங்கம் இவருக்கு வழங்கிய விடுமுறையொன்றின் கீழ், மூன்று வருடங்கள் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் கீழ் ஏழு தெற்காசிய நாடுகளினால் உருவாக்கப்பட்ட பிராந்திய கூட்டுறவினூடாக குறித்த நாடுகளின் பாதுகாப்புச் மேற்பார்வைக் கொள்ளளவின் அபிவிருத்தி COSCAP-SA இன் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளராக ICAO இல் இரண்டாந்தர நியமனத்தினைப் பெற்றிருந்தார்.

திரு.நிமல்சிறி அவர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞானமாணி (B.SC) பெற்றிருந்தார் என்பதுடன், அதே பல்கலைக்கழகத்தில் கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி (M.SC) பட்டத்தினையும் பெற்றிருந்தார். மேலும் இவர் ரஷ்யா அல்லிறோவிஸ்க்இல் தகைமைமிக்க கற்கை நெறியொன்றைத் தொடர்ந்த பின்னர், பறப்பு செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப் பத்திரமொன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார். மேலும் திரு. நிமல்சிறி அவர்கள் 2014 இல் அமெரிக்காவின் ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு முகாமைத்துவ சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்திருந்தார் என்பதுடன் 2006 இல் அதே பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு மீதான சர்வதேச உச்சநிலையில் பங்குகொண்டிருந்தார்.

விமானப் போக்குவரத்தினை ஒரு பாடவிதானமாகக் கொண்ட விமானப் போக்குவரத்துடன் கூடியதான போக்குவரத்து மற்றும் உதவிப் போக்குவரத்து முகாமைத்துவத்தினை விஞ்ஞானமாணி விஷேட பாடமாகக் கொண்ட மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் ஒரு வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

திரு. நிமல்சிறி அவர்கள் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிராந்திய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு குழுவின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார் என்பதுடன், ஏசியா மற்றும் பசுபிக் வலயத்திலுள்ள நாடுகளின் வான் செலவு விடயங்களின் திட்டமிடல் மற்றும் அமுலாக்கலுக்கென ICAO இனால் ஒழுங்குபடுத்தப்படும் ஏசியா மற்றும் பசுபிக் வான் செலவு திட்டமிடல் மற்றும் அமுலாக்கற் குழு (APANPIRG) இன் இரண்டாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## திரு. ஷஹி அலிப்
### உறுப்பினர்

திரு. ஷஹி அலிப் அவர்கள் தம்பதெனிய அபிவிருத்தி நிதியத் தலைவராகவும், ஸ்ராஷன் குழுமத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக அம்பாந்தோட்டை அபிவிருத்தி நிதியத்தின் நம்பிக்கை முகாமையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.



## திரு.ஏ.டப்ள்யு . சைடியுல் அமீன்
### உறுப்பினர்

திரு.ஏ.டப்ள்யு'.சைடியுல் அமீன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியினை சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியில் கற்றிருந்ததுடன், அவர் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடம் மற்றும் இலங்கைச் சட்டக் கல்லூரி என்பனவற்றில் தனது உயர் கல்விகளை மேற்கொண்டார். திரு. அமீன் அவர்கள் எஸ்.டி.ஆர். ஜெயரத்ன ஸ்தாபனத்தில் சட்டப் பணிப்பாளராகப் பணியாற்றுவதுடன், சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவராகவும் செயற்பட்டுவருகின்றார்.

பக்கத்தோற்றம் மீள்பார்வை



## திரு. திரு.எல்.டி.எஸ்பாலசூரிய
உறுப்பினர்

திரு.எல்.டி.எஸ்.பாலசூரிய அவர்கள் ஓய்வுபெற்ற பொறியியலாளர் ஆவார். மேலும், அவர் BOI கம்பனியொன்றான வரையறுக்கப்பட்ட லங்கா கின்ற்வெயார் (தனியார்) கம்பனியின் ஸ்தாபகத் தலைவருமாவார்.

திரு.எல்.டி.எஸ்.பாலசூரிய அவர்கள் தேங்காய் கொப்ரா மற்றும் அதனோடிணைந்த உற்பத்திகளின் ஏற்றுமதியுடன் தொடர்புபட்ட கம்பனியொன்றான ஷம்சிகோ ஏற்றுமதியாளர்களின் முகாமைப் பணிப்பாளரும் ஆவார்.



## திரு.பிரியங்க அல்கம
உறுப்பினர்
நிதியமைச்சின் பிரதிநிதி(பதவிவழி உறுப்பினர்)

திரு. பிரியங்க அல்கம அவர்கள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பொது நிதிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆவார். அவர் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தில் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளராகவும் (2000-2007), பொது நிறுவனங்கள் திணைக்களப் பணிப்பாளராகவும் (2012), குயின்ஸ்லான்ட் அரசாங்கத்தின் பங்குச் சேவைகளின் சிரேஷ்ட நிதி அலுவலராகவும் (2008-2012) என வேறுபட்ட இயலளவுகளுடன் பணியாற்றியுள்ளார்.

இவர் சிங்கப்பு'ர் நன்யாங் தொழிநுட்பப் பல்கலைக்கழகத்திலும், ஐக்கிய அமெரிக்காவின் MIT பொஸ்ரன் பல்கலைக்கழகத்திலும் வியாபார நிர்வாக முதுமாணிப்பட்டத்தை மேற்கொண்டிருந்தார் என்பதுடன், அவுஸ்ரேலியா CPA இன் கனிஷ்ட உறுப்பினருமாவார். திரு.பிரியங்க அல்கம அவர்கள் சுதந்திரத்தன்மையற்ற, நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளராக திறைசேரியின் செயலாளரால் CAA இன் பணிப்பாளர் சபைக்கு 08 ஒக்டோபர் 2013 இலிருந்து நியமிக்கப்பட்டார்.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆளுகையும் பொறுப்புடமையும்

## அதிகாரசபையின் பொறுப்பு

அதிகாரசபையின் பிரதான பொறுப்புகள், ஆனால் அவற்றுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதாக அன்றி, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்துத்துறையினை திட்டமிடுதலில் கௌரவ அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்கப்பங்காளர்களின் கருத்துக்கள் பிரதிபலித்துக் காட்டப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் கருத்துப்பரிமாறிக் கொள்ளல்.

- சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்ளக் கூடியதாக தகைமைகள் மற்றும் தேர்ச்சி கொண்ட ஊழியர்களைப் பணிக்கு அமர்த்துதல் மற்றும் சம்பளம் உள்ளடங்கிய அவர்களது சேவை நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளைத் தீர்மானித்தல்.

- சிவில் விமான போக்குவரத்துத் துறையின் கொள்கை மற்றும் இலக்குகளைத் தாபித்தல் மற்றும் சிவில்விமானப்போக்குவரத்து அதிகார சபையின் நோக்கங்களை அடைவதற்காக ஒழுங்கமைப்பு செயற்சாதனை மேற்பார்வைகளை மேற்கொள்ளல்.

- உரியநோக்கினைநிறைவேற்றுவதற்காக சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துஅதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்குப் பொறுப்புக்களை ஒப்படைத்தல்.

- **CAA** இன் கூட்டாண்மைத் திட்டத்தினை அமுலாக்குவதனை நோக்கிய திட்டங்கள் மற்றும் செயலாற்றுகைதொடர்பாக அமைச்சருக்குப் பொறுப்புக்கூறல். உள்ளக நிர்வாக முறைகள் முன்னெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

## பணிப்பாளர் சபை

அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது, கொள்கை விடயங்களில் பரந்தளவிலான எண்ணங்களை வெளிக்கொணரும் பொருட்டு வியாபாரம், சட்டம், விமானப் போக்குவரத்துத்துறையில் பரந்தளவிலான ஆற்றல் மற்றும் அனுபவத்தினைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கி உருவாக்கப்படுகின்றது. இச் சபையானது நியமிக்கப்பட்டதும், அதன் அனைத்து உறுப்பினர்களும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் மீது அதி கூடிய விருப்பத்தினை வெளிப்படுத்தும்படியும், அதிகாரசபையானது அதன் தீர்மானங்கள் அனைத்திலும் ஒன்றாக செயற்படுவதாக தெரியப்படுத்தும் படியும், தனிப்பட்ட உறுப்பினர்கள் அதிகாரசபையின் செயற்பாடுளுக்கு அப்பால் வேறுபட்ட ஒழுங்கமைப்பினை கொண்டிருக்கவில்லை என்பதையும் உறுதிசெய்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

அதிகாரசபையானது கொள்கைகளை உருவாக்குவதனூடாக CAASL இன் இலக்குகளை அடைவதற்கான அதிகாரங்களையும், செயற்பாடுகளையும் பகிரிந்தளிப்பதனூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை வழிப்படுத்துகின்றது. அதிகாரசபையின் முன்னோக்கிய திட்டங்கள் அதன் முழுமையான கூட்டாண்மைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றதுடன், ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும் அதிகாரசபையால் அனுமதியளிக்கப்படும் வருடாந்த வேலை

நிகழ்ச்சித்திட்டம், பயிற்சியளித்தற் திட்டம், மற்றும் நிகழ்ச்சித்திட்டப் பாதீடு என்பன மூலம் வினைத்திறனான முறையில் கண்காணிக்கப்படுகின்றது. மேலும், அதிகாரசபையானது, குறிப்பிட்ட ஏற்பாடுகளைத் தற்போது கொண்டிராத எல்லா அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு சபையினூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு வழிகாட்டலை வழங்குகின்றதுடன், அவ்வாறான தீர்வுகளை நடைமுறைப்படுத்திக் கொள்வது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரது கடமையாகவும் காணப்படுகின்றது.

### அதிகாரசபையின் நிறைவேற்று அதிகாரம்

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் நியதிகளின் பிரகாரம், அமைச்சரவை அமைச்சர்களால் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகமே சட்டத்தால் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருந்து செயற்படுவார்.

அமைச்சரவை அமைச்சர்களால் தீர்மானிக்கப்பட்ட ஊழியர் விதிகள், நிபந்தனைகளுக்குப் பொறுப்புள்ளவராக இருப்பதுடன், அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் பொதுவான நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருப்பதுடன், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம் அல்லது ஏனைய எழுதப்பட்ட சட்டங்களின் கீழ் அல்லது அவற்றால் அவருக்கு வழங்கப்பட்ட தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை முன்னெடுப்பார். அதிகாரசபையானது கொள்கைகளை வகுத்துக் கொள்வதனூடாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் இலக்குகளை அடைவதற்கென அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை வழிப்படுத்துகின்றது.

## அதிகாரசபைக் குழுக்கள்

அதிகாரசபையானது சம்பந்தப்பட்ட விடயங்களின் மீது தீவிர கவனம் செலுத்தும் நோக்கில் ஊழியர் குழு, நிதிக் குழு, திட்டமிடற் குழு, கணக்காய்வுக் குழு, மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு என ஐந்து குழுக்களை ஸ்தாபித்துள்ளதுடன் அபிவிருத்தித் திட்டங்கள் வடிவாக்கம் செய்யப்பட்டு அமுல்ப்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு குழுவிற்கும் அதிகாரசபையின் இலக்குகளை அடைவதனை நோக்காகக் கொண்டு, நிறுவனத்தின் செய்முறை உருவாக்கத்திற்கு மற்றும் மேற்பார்வை செய்வதற்குமான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் பின்வரும் எந்தவொரு குழுவிற்குமான வலு மற்றும் தொழிற்பாடுகளின் பங்கீட்டினை பொறுத்தவரையில், சபையானது தேவைக்கேற்ப ஏதாவது அல்லது அவ்வாறான அனைத்து விடயங்களின் மீதும் தனது அதிகாரத்தினைப் பிரயோகிப்பதைத் தொடர்ந்து முன்னெடுக்கும்.

## ஊழியர் குழு

ஊழியர் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

- நிர்வாகக் கட்டமைப்பொன்றினை அல்லது தேவையேற்படின் அதில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பொன்றினை அங்கீகரித்தல்.
- ஊழியர்களது பணிநிலைப்பிரிவு மற்றும் சம்பள அளவுத்திட்டங்களைத் தீர்மானித்தல்.
- தெரிவு செய்தல், ஆட்சேர்த்தல், நியமனம் வழங்குதல், பதவியுயர்த்துதல், பதவியிறக்குதல், ஓய்வுறுத்துதல், மற்றும் சேவை முடிவுறுத்துதல் போன்றன தொடர்பான விடயங்களைக் கையாளல்.
- ஊழியர் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- **CAA** இன் கூட்டாண்மைத் திட்டத்தினை மேம்படுத்துதல்
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வருடாந்த வேலைத் திட்டத்தினை மேற்பார்வை செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான நிர்வாக சட்ட திட்டங்கள் மற்றும் செய்முறைகளை விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களுக்கான ஒழுக்காற்றுச் செய்முறைகளை விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் அலுவலகச் செய்முறைகளை மேம்படுத்துதல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் புலமைப்பரிசில்களை வழங்குதல்.

- அசையும் மற்றும் அசையாச் சொத்துகளின் கொள்வனவிற்கான அனுமதியினை வழங்குதல் மற்றும் / அல்லது அவ்சொத்துகளை திட்டமிடல் மற்றும் விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்கள ஊழியர்களுக்கான முன்கூட்டிய ஓய்வுறுத்தல்களுக்கான நஷ்டஈட்டுத் திட்டத்தை விருத்தி செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஊழியர்களின் சமூக மற்றும் நலன்புரித் திட்டத்தை மேம்படுத்தல்.

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த,தலைவர்.
2. திரு.சரத் ஜெயசுந்தர, உபதலைவர்.
3. திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
4. திரு.எல்.டீ.பாலசூரிய, உறுப்பினர்.

## நிதிக் குழு

நிதிக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

- வருடாந்த பாதீட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான நிதிச் சட்டதிட்டங்கள் மற்றும் செய்முறைகளை உருவாக்குதல்.
- உபகரணங்களின் கொள்வனவு, வசதிகள், மற்றும் சேவைகளின் கொள்வனவுகளை மேற்பார்வை செய்தல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கான வருமான வழிவகைகளை மேற்பார்வை செய்தல்.
- அவ்வாறான விடயங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுடன் தொடர்புடைய விதிகள் மற்றும் செய்முறைகளை விருத்தி செய்தல்.
- ரூபா 10,000,000 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளை அங்கீகரித்தல்.
- ஏதாவது விடயங்களை பதிவழிப்பதற்கான அனுமதியினை வழங்கல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையில் சிக்கன முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துதல்.

நிதிக் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. ஜெனரல் றொஹான் டி. சில்வா தளுவத்த, தலைவர்.
2. திரு.எச்.எம்.சீ.நிமல்சிறி, சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.
3. திரு.பிரியங்க அல்கம, நிதியமைச்சின் பிரதிநிதி.

## திட்டமிடற் குழு

திட்டமிடற் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

- தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கையை வகுத்தல்
- தேசிய சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டமொன்றினை வகுத்தல்
- சிவில் விமானப் போக்குவரத்து சம்பந்தமான அடிப்படை மற்றும் இரண்டாந்தரச் சட்டங்களை மேற்பார்வை செய்வதுடன், தேவையேற்படின் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- தேசிய சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு திட்டங்களை அமுலாக்கம் செய்தல்.
- தேசிய வான் போக்குவரத்து வசதியளித்தல் செயற்றிட்ட அமுலாக்கலை மேற்பார்வை செய்தல்.
- சிவில் மற்றும் இராணுவ கூட்டிணைவினை மேற்பார்வை செய்தல்.
- வான் சேவைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
- வானியல் சேவை வழங்குனர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

## கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு பொறுப்புக் கூறலைக் கொண்டுள்ளது.

- உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டம் என்பவற்றிற்கு பொறுப்புடமையினைத் தீர்மானித்தல்.
- நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பிட்டு மேற்பார்வை செய்தல்.
- சீரான கால இடைவெளியில் செலவுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் வீணான செலவுகளைத் தவிர்த்தல் என்பதான செயற்றிறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.
- வெளியகக் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணுவதுடன், கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவ ஆவணங்களைப் பின்பற்றல்.
- நியாயாதிக்க நியதிச் சட்ட விதிமுறைகள் மற்றும் சுற்று நிருபங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.
- கணக்கியல் நியமங்கள் பின்பற்றப் படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுகளை மீளாய்விற்குட்படுத்தல்.
- பரிகார நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளியகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவ ஆவணங்கள் போன்றனவற்றை மீளாய்வு செய்தல்.
- அரச தொழில் முயற்சிக் குழுவின் பரிந்துரைகளின் வழிப்படுத்தல்களின் அமுலாக்கலை மீளாய்வு செய்தல்
- ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு குழுவின் கண்டுபிடிப்புகள் தொடர்பான அறிக்கையினை மீளாய்வு செய்தல்.
- சேவைக்கேற்ப அதிகாரசபையால் கேட்கப்படும் போது அனைத்துக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடல்.

ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திரு.பிரியங்க அல்கம,தலைவர் (நிதியமைச்சின் பிரதிநிதி).
2. திரு.ஜே.எம்.எஸ்.டப்ள்யு . ஜயசுந்தர, உபதலைவர்.
3. திரு.எல்.டீ.எஸ்.பாலசூரிய, உறுப்பினர்
4. திரு.எஸ்.அமீன், உறுப்பினர்
5. திரு.றொஹான் செனிவிரத்ன, உறுப்பினர்
6. திரு.எஸ்.எம். சந்திரபாலா, விமானப் போக்குவரத்து, அமைச்சின் பிரதிநிதி

## சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC)

சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழுவானது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பின்வரும் ஊழியர்களை தன்னகத்தே கொண்டதாக, சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளில் பொதுமக்கள் விழிப்புணர்வை அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு விஷேட செயற்திட்டங்களில் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் அமுலாக்கத்திற்கென ஆகஸ்ட் 2010 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இக் குழுவானது சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான உத்தியோகத்தரின் தலைமையிலும் சிரேஷ்ட பணிப்பாளர் மற்றும் கூட்டாண்மைப் பணிப்பாளரினதும் வழிகாட்டலிலும் தொழிற்படுகின்றது.

1. திரு. தேவ் கௌசல சமரவீர, உபதலைவர்.
2. திரு.நிலந்த தென்னக்கோன், செயலாளர்.
3. திருமதி மஞ்சுளா விக்கிரமநாயக்க, பொருளாளர்.

### உறுப்பினர்கள்

4. திரு.எஸ்.பி.பீ.வத்தேவவ
5. திரு.எம்.ஐ.கே.குணவர்த்தன
6. திருமதி. ஜீ.ஈ.மில்லவிதானாராச்சி
7. திருமதி சீ.எஸ்.கொடித்துவக்கு
8. திரு.சீ.ஜீ.பீ.தபரேரா
9. திருமதி துலாஞ்சலி மாப்பிற்றியஹே
10. திரு.ஆர்.எல்.தலாஹல்ல
11. திரு. ரீ.எம்.வை.பீ.தென்னக்கோன்

## நிறுவனத்தில் அக்கறை கொண்டோருடனான தொடர்பு

குறிப்பாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்தின் கௌரவ அமைச்சரின் எதிர்பார்ப்புக்களை இனங்கண்டு முன்னிலைப்படுத்துவதற்கு நிறுவனத்தில் அக்கறை கொண்டோர் தொடர்பில் கொண்டுள்ள அதனது பதில் கூறும் பொறுப்பினை அதிகாரசபையானது தெரிந்துகொள்கின்றது.

## அதிகாரசபையினதும் சிரேஷ்ட முகாமையினதும் பொறுப்பு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் வினைத்திறன் மிக்க தொழிற்பாடுகளின் பிரதானமாக இருப்பது யாதெனில்,பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் தலைமை வகிக்கப்படும் சிரேஷ்ட முகாமை மற்றும் அதிகாரசபையின் வகிபாகம் என்பனவற்றிற்கிடையில் தெளிவானதொரு வேறுபாடு ஆகும்.

அதிகாரசபையானது உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை அமைத்தலில்கரிசனை கொண்டுள்ளதுடன், அதன் பின்னரான மற்றும் இலக்குகள் அடையப்படுதலை நோக்காகக் கொண்டதான செய்முறை மேற்பார்வை செய்கின்றது.

பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை தலைமையிற் கொண்ட சிரேஷ்ட முகாமைத்துவமானது அதிகாரசபையால் வகுக்கப்பட்ட உயர்மட்ட கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களின் அமுலாக்கலைக் கருத்திற் கொண்டுள்ளது.

2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம்,வான் செலவுச் சட்டத்தில் அல்லது அதனால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள் அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டங்களின் பிரகாரம் சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கு விஷேடமாக வழங்கும் குறிப்பிட்ட நியதிச்சட்டக் கடமைகளின் வெளிப்பாட்டிற்கான பொறுப்புக்கூறலை கொண்டிராத மற்றும் அதற்கு வேறுபாடு கொண்டதை அதிகாரசபை கொண்டு காணப்படுகின்றது. எனினும்,அதிகாரசபையானது அவ்வாறான நியதிச்சட்டக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தினால் வேண்டப்படும் ஆளணியினர், கருவிகள், வசதிகள், மற்றும் சேவைகளை உள்ளடக்கிய ஆனால் வரையறுக்கப்படாத அனைத்து வளங்களையும் வழங்கும்.

அதிகாரசபையானது சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரப்பகிர்வு மற்றும் கடமைகளை உறுதிசெய்வதன் மூலம் மேற்கூறிய வகிபாகத்தினை தொளிவாக எடுத்துக்கூறியுள்ளதுடன், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் வரைவிலக்கணப்படுத்தப்பட்டு, முழுமைப்படுத்தப்படுகின்றார்.

## பொறுப்புடமை

அதிகாரசபையின் தந்திரோபாய இலக்குகளை இலக்காகக் கொண்ட தொழிற்பாட்டை மேற்பார்வை செய்யும் நோக்குடன், அதன் மூன்றாண்டு வியாபாரத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளவாறு அதனது கொள்கைகள், தந்திரோபாய வழிகாட்டல்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றிற்கிணங்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் செயற்பாடுகள் முகாமைப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதி செய்யும் நோக்குடன் அதிகாரசபையும் அதனது உப குழுக்களும் தொடர் கூட்டங்களை நடாத்திவருகின்றன.

## ஆர்வ ரீதியான முரண்பாடுகள்

அதிகாரசபையானது ஆர்வலர் பதிவேடொன்றினைப் பராமரித்து வருவதுடன், அதிகாரசபையின் உறுப்பினர்கள் ஆர்வத்துடன் வெளிப்படுத்துவதற்குரிய அவர்களது கடமை பற்றி அறிந்துகொண்டுள்ளனர் என்பதனை உறுதிசெய்து கொள்கின்றது. மேலும் இந்த அணுகுமுறையானது ஊழியர்களுக்காக ஆர்வலர் பதிவேட்டின் முரண்பாடொன்றைப் பராமரிப்பதனை வெளிப்படுத்துகின்றது.

## உள்ளகக் கணக்காய்வு

பெருமளவிலான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள போதிலும், நிறுவனக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மிக்க முறைமையொன்றினைப் பராமரிப்பதற்கான பொறுப்பு அதிகாரசபையையே சாரும்.

அதிகாரசபையினது முக்கியத்துவம் மிக்க இலக்குகள் அடையப்படுகின்றன என்பதனை உறுதிசெய்து கொள்வதற்கு உருவாக்கிக் கொள்ளப்படும் கொள்கைகள், முறைமைகள், மற்றும் செய்முறைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக உள்ளகக் கட்டப்பாடு காணப்படுகின்றது. அதிகாரசபை மற்றும் சிரேஷ்ட முகாமை என்பன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டவாறு பொறுப்புடமைக் கூற்றில் கையொப்பமிடுவதன் மூலம் தனது

பொறுப்புடமையினைத் தெரியப்படுத்தியுள்ளார்கள். இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை கண்காணிப்பதற்கான பொறுப்புடமை கொண்டதாக உள்ளகக் கணக்காய்வுப் பகுதியை அதிகாரசபை கொண்டுள்ளது. இவ் அலகானது சீ.ஏ.ஏ.எஸ்.எல் ஆல் வழங்கப்படும் அனைத்து சேவைகளின் தரத்தினை கருத்திற் கொள்வதுடன், அதிகாரசபைக்கு அறிக்கையிடப்பட்ட நிதி மற்றும் ஏனைய தகவல்களின் நடடிக்கைகளையும் கருத்திற் கொள்கின்றது.

உள்ளகக் கணக்காய்வானது சிரேஷ்ட முகாமையின் அழுத்தங்கள் இன்றி சுயாதீனமாகச் செயற்படுவதுடன், அதன் கண்டுபிடிப்புகள் உடன்பட்ட வழிமுறைகளினூடாக நேரடியாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகத்திற்கும் கணக்காய்வுக் குழுவிற்கும் அறிக்கையிடப்படுகின்றது.

## சட்டக் கடப்பாடு

நிறுவனம் அனைத்துச் சட்டப் பிரமாணங்களையும் பின்பற்றுகின்றது என்பதனை உறுதி செய்வதற்கான அதன் பொறுப்புடமையினை அதிகாரசபை வெளிப்படுத்துகின்றது. அதிகாரசபையானது உடன்பாட்டு விடயங்களை முறை ரீதியாக அடையாளங்கண்டு கொள்ள நிகழ்ச்சித்திட்டச் செய்முறையொன்றின் மேம்பாடு மற்றும் செயற்படுத்துகை போன்றனவற்றிற்காக, சிரேஷ்ட முகாமைக்குப் பொறுப்புடமையினைப் பகிர்ந்தளித்துள்ளதுடன், அனைத்து ஊழியர்களும் அவர்களுடன் குறிப்பாகத் தொடர்புடைய சட்டத் தேவைப்பாடுகள் பற்றிய அறிவினைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் உறுதி செய்கின்றது.

தனித்தனி விடயங்களாக அதிகாரசபையால் தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அரசாங்க நிறுவனங்களால் விடப்படும் பொதுவான மற்றும் விஷேடமான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள் எவ்வளவிற்கு அதிகாரசபையால் அமுலாக்கப்பட வேண்டும் என்பதனை அதிகாரசபையே தீர்மானிக்குமென அதிகாரசபை இணங்கியுள்ளது. எனவே அரசாங்கத்தினால் விடுக்கப்படும் எவ்வாறானதொரு சுற்றறிக்கைகளையும் அதிகாரசபை அவ் வழிகாட்டலின் உள்ளடக்கத்தினைப் பரிசீலனை செய்து, அவ் வழிகாட்டலின் பிரயோகத்தன்மையின் எல்லை மற்றும் அளவுகளைத் தீர்மானித்தாலன்றி, அவை தன்னிச்சையாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முகாமையின் அமுலாக்கலுக்கு உள்ளடங்கமாட்டாது. ஊயுயுளுடு இன் கூட்டாண்மைப் பிரிவானது அதனது தொழிற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்க சுற்றறிக்கைகளின் பிரயோகத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் திருத்தஞ் செய்யப்பட்ட பட்டியலொன்றினைக் பேணிவரும்.

## ஒழுக்க விழுமியங்கள்

உருவாக்கப்பட்ட ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில், அதிகாரசபையானது சிறந்த கூட்டுத்தாபன ஆழுகைத் தத்துவத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்க விழுமிய நடத்தைகளின் உயரிய நியமங்களை அனைத்து ஊழியர்களும் பின்பற்றுகின்றார்களா என்பதனை ஒரு ஒழுங்குமுறையில் கண்காணித்து வருகின்றது. ஒழுக்க விழுமிய சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள தத்துவங்களுடன் இணங்காதிருப்பவற்றை வெளிக்காட்டக் கூடியதான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பின்பற்றல் போக்கை கண்காணித்தல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஏதாவது அறிக்கைகள் அல்லது அறிகுறிகள் போன்றனவற்றினூடாக ஒழுக்க விழுமிய நியமங்களுடன் உடன்பாடுகளைக் கண்காணித்தலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிறந்த கூட்டிணைவானபிரஜைகள் அதகாரசபையில் ஈடுபாடுகொண்டுள்ளனர், அதாவது பல்வேறுபட்ட சமூகங்களிலுமுள்ள அனைத்துப் பிரஜைகளின் நெறிமுறைகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகள், மற்றும் பொறுப்புகள் போன்றனவற்றுடன் இயைவாக்கமடைந்த மனநிலையொன்றுடன் செயற்படும் வகையிலான அர்ப்பணிப்பொன்றினை மேற்கொள்ளல் மற்றும் அதிகாரசபை முன்னெடுக்கும் கைத்தொழில் மற்றும் அதற்கும் அப்பால் அனைத்து சமூகங்களின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் என்னும் அறிவுடன் கூடிய அதன ஊழியர்களை உள்ளடக்கியதாக அதிகாரசபை காணப்படுகின்றது.

# இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

## தூரநோக்கு

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையானதொரு இயைபியக்க உள்ளாக்கியாக இருத்தல்.

## குறிக்கோள்

தந்திரோபாயத் திட்டமிடல், பயனுறுதிமிக்க ஒழுங்குவிதிகள்,இடர் அற்ற பாதுகாப்பானதொரு செயற்பாடு, மற்றும் சர்வதேச நியமங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை உறுதி செய்து கொள்ளும் திறன்மிக்க தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் என்பனவற்றினூடாக வசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

## குறிக்கோள் வாசகம்

“அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்”

### தத்துவம்

“இலங்கையின் வான்பரப்பு, இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பொதுச் சொத்தாக முகாமை செய்யப்படல் வேண்டும்”

### இலக்குகள்

- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு விளைவு நோக்கங்கள் அடையப்படல் அல்லது மிகைப்படுத்தப்படல்.
- பொருத்தமான விதத்தில் வளமாக்கப்படல்.
- தொழில் வல்லுனராக மற்றும் தகுதி வாய்ந்தவராக இருத்தல்.

- பரந்தளவான நம்பிக்கை மற்றும் அங்கீகாரத்தைப் பெறல்.
- அதன் அடைவு மட்டங்களை நிலைநிறுத்திக் கொள்ளல்.
- சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட பரிந்துரைகளுடன் இணங்கிச் செல்லும் வேண்டப்படும் அடைவு மட்டத்தினை பராமரித்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்தின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டின் பலம்மிக்க ஒரு அனுசரணையாளராக இருத்தல்.

## தந்திரோபாயங்கள்

- நியதிச் சட்டத் தொழிற்பாடுகளின் அமுலாக்கலை முன்னேற்றுதல் மற்றும் அதனுடன் நிலைப்படுத்துதல் அத்துடன் சமூக கடப்பாடுகளை நிறைவு செய்தல்.
- மிக முக்கியமான விமானப் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வினை அடையாளங்கண்டு அமுலாக்குதல்.
- குறிப்பிட்ட கலாச்சார மாற்றத் தூண்டுதல்களை அறிமுகப்படுத்துதல்.
- விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலுடன் கூட்டிணைவுடனும் பங்குபற்றலுடனும் தொழில் புரிதல்.
- ஒரு தெளிவான நோக்குடன் தொழிற்படலும், உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்தவர்களுடன் வினைத்திறனான வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளல்.
- அனைத்து ஆவணங்கள், மூலங்கள், மற்றும் உள்ளக செய்முறைகளை பயனுறுதி மிக்க வகையிலும் மாறாத தன்மை கொண்டதாகவும் பேணுதல்.

## மதிப்பீடுகள்

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைமற்றும்அதன் ஊழியர்கள்

- விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பிற்கு முக்கியத்துவத்தையும் முன்னிரிமையையும் அளித்து பாதுகாப்புக் கலாச்சாரத்தினை மேம்படுத்த ஈடுபடல்.

- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை வாடிக்கையாளருக்குச் சேவை வழங்கலை துரிதப்படுத்துதல்.
- முன்னெடுக்கப்படும் ஒவ்வொருவிடயத்திலும் ''முடியும்'' என்ற நடத்தையினைக் கொண்டிருத்தல்.
- நம்பகத் தன்மை மற்றும் யதார்த்தத் தன்மை கொண்டிருப்பதனை இலக்காகக் கொள்ளல்.
- தொடர்ச்சியான முன்னேற்றப்பணியில் விருப்பங்கொண்டோராகவும், மாற்றத்திற்கு உட்படக் கூடியவராகவும் இருத்தல்.
- வெற்றியை அடைவதற்கு ஒன்றாகப் பணியாற்றல்.
- திறந்த, நேர்மையுள்ள, வெளிப்படைத் தன்மையுள்ளோராக இருத்தல்.
- செய்யப்படும் ஒவ்வொன்றிலும் வினைத்திறனையும் நியதித் தன்மையையும் மேம்படுத்தல்.
- குழுவாக வேலைசெய்வதன் மூலம் தனியொருவரை நம்புதல் மற்றும் மதிப்பளித்தல்
- ஒவ்வொருவரின் பங்களிப்பிற்கும் வெகுமதி சேர்த்தல்.
- சமூக பொறுப்புடமை மற்றும் கடமையுணர்வு என்பனவற்றை அடையாளங்காணல்.
- செய்பவற்றிலிருந்து மகிழ்வடைதல்.
- தொழில்சார் அணுகுமுறையில் பங்குகொள்ளல்
- தொழில் மற்றும் வீட்டுச் சூழல்களுக்கிடையில் சமநிலையொன்றைப் பேணல்.

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முதன்மை இலக்குகள்

- வர்த்தக விமானப் போக்குவரத்துத் துறையில் இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்
- சிவில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளில் கடத்தல் மற்றும் சட்டத்திற்கு முரணான தலையீடுகளைத் தவிர்த்தல்
- பொதுவான விமானப் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படலைத் தவிர்த்தல்
- விமான நிலையங்களில் தளத்தில் ஏற்படக்கூடிய இறப்பு நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்
- பொறியியல் மற்றும் பராமரிப்பு வேலைத்தளங்களில் விபத்துக்களைக் குறைத்தல்
- பறத்தல் நேரங்களில் வர்த்தகப் பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:1000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணுதல்
- பறத்தல் நேரங்களில் பொது விமானப் போக்குவரத்து பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:5000 இற்கும் குறைந்த மட்டத்தில் பேணுதல்
- பறத்தல் பயிற்சிப் பாடசாலைகளில் பறப்புச் சம்பவ வீகிதத்தினை 1:10,000 எனக் குறைத்தல்
- தள உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:20,000 பறப்பு மணித்தியாலங்களாகக் குறைத்தல்.
- தள உதவுகையுடன் ஈடுபாடுடைய பொது விமானப் போக்குவரத்து பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:10,000 பறப்புகளாகக் குறைத்தல்.
- வான் கட்டுப்பாட்டு சேவைகள்(ஏ.ரீ.எஸ்) உதவுகையுடன் ஈடுபாடுடைய பறப்பு சம்பவ எண்ணிக்கை விகிதத்தினை 1:50,000 பறப்பாகக் குறைத்தல்.
- குறிக்கப்பட்ட நேரத்தில் விமானம் புறப்படுதலில் ஏற்படக்கூடிய தாமதத்தைக் குறைத்தல்.
- சராசரி நிலையுடைய மக்களுக்கு வான்வழிப் பயணம் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளை மேற்கொள்ளல்.
- வான்வழிப் பயணத்தில் சேவைத்தரத்தினை அதிகரித்தல்.
- பாதுகாப்புத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, விமானத் தளத்தில் நெரிசலான, விரைவான பயணிகள் செய்முறையைக் குறைத்தல்.
- விமானப் போக்குவரத்தில் செயற்பாட்டுச் செலவீனத்தைக்குறைத்து, வீண்விரயத்தினைத் தவிர்த்தல்.
- சூழல் மீது விமானப் போக்குவரத்தின் மறைமுக/எதிர்மறை விளைவுகளைக் குறைத்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்தின் முழுமையான நன்மைகளை பாடசாலைச் சிறார்களுக்கு அறிவூட்டல்.

## விளைவுகள்

- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் நாட்டிற்காக சர்வதேச தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதுடன், சர்வதேச நியமங்கள் மற்றும் முன்மொழிவுகளின் அமுலவாக்கல் மற்றும் செயலாக்கத்னை நிலைநிறுத்துதல்.
- வரையறைகளிலிருந்து விடுதலை பெற்ற இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமையின் சர்வதேச அங்கீகாரம்.
- சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன் மற்றும் ஒழுங்கு முறைமையொன்றினையும் மற்றும் வான் போக்குவரத்து முறைமையில் தொடர்ச்சியான பொதுமக்கள் நம்பிக்கைத் தன்மையையும் உருவாக்கல்.
- இலங்கைப் பிரஜைகளின் நல்வாழ்விற்காக இலங்கையின் வான்பரப்பை ஆகக் கூடியளவு பயன்படுத்துதல்.
- நாட்டில் சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கல்.
- காரணமற்ற போட்டித்தன்மையால் எழும் பொருளாதார விரயங்களிலிருந்து பாதுகாத்தல்.
- மக்களினதும் பொருட்களினதும் கிடைப்பனவு

மற்றும் நகர்வுகளை மேம்படுத்துதல்.

- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் தங்கியுள்ள சேவைகள்.
- சிவில் விமானப் போக்குவரத்து துறையில் கல்வி
- சிவில் வானியல் சார் அனைத்து விடயங்களையும் மேம்படுத்தல்.
- வினைத்திறன் மிக்க நடைமுறை மற்றும் ஒழுங்கு முறைகளுக்கான சீரான சட்ட வரையறைகள்.
- சூழலின் நிலையான தன்மை.

# வெளியீடுகள்

| வெளியீட்டு வகைகள் | வெளியீடுகள் |
|---|---|
| கொள்கை ஆலோசனை | ▪ அரசாங்கத்திற்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கல்.<br>▪ சட்ட மறுசீரமைப்பு.<br>▪ விதிகளின் உருவாக்கம்.<br>▪ அமுலாக்க நியமங்களின் உருவாக்கமும் பிரசுரித்தலும்.<br>▪ விமானப் போக்குவரத்துக் கொள்கை உருவாக்கம்<br>▪ செய்முறைக் கையேடுகளின் உருவாக்கம்<br>▪ விமானப் போக்குவரத்து கட்டமைப்பின் மூலத்திட்டம் |
| பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் சான்றுப்படுத்துகை | ▪ விமான நிலையம்/வான் துறையின் பாதுகாப்பு<br>▪ விமான சேவைத் துறையினரின் பாதுகாப்பு<br>▪ பொது விமான போக்குவரத்துத் துறையினரின் பாதுகாப்பு<br>▪ தனிநபர் அனுமதிப் பத்திரதாரரின் பாதுகாப்பு<br>▪ விமானப் பறப்புப் பயிற்சிப் பாதுகாப்பு<br>▪ வானூர்தி பராமரிப்புப் பாதுகாப்பு மற்றும்<br>▪ விமான போக்குவரத்து சேவைகள் துறையினரது பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| பாதுகாப்புப் ஆய்வுத் தகவல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | ▪ பாதுகாப்பு விசாரணை<br>▪ பாதுகாப்புப் ஆய்வு<br>▪ பாதுகாப்புத் தகவல், கல்வி மற்றும் மேம்படுத்தல்<br>▪ வானூர்தி விபத்து மற்றும் சம்பவ விசாரணை மற்றும்<br>▪ பாதுகாப்புப் பரிந்துரைகளின் அமுலாக்கங்கள் |
| அதிகாரமளித்தல் | ▪ விமான சேவை அட்டவணை அங்கீகாரம்<br>▪ விமானப் போக்குவரத்துக் கட்டணங்களை அங்கீகாரம்<br>▪ பயண முகவர்களை சான்றுப்படுத்தல்<br>▪ வானூர்திகளைப் பதிவு செய்தல்<br>▪ வானூர்தி உரிதிப்பாகங்களின் இறக்குமதிக்கான அங்கீகாரம்<br>▪ உயர் கட்டட நிர்மானங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்<br>▪ பொது விற்பனை முகவர்களுக்கான (ஜீ.எஸ்.ஏ)அங்கீகாரம் அளித்தல்<br>▪ சர்வதேச செயற்பாடுகளுக்காக உள்நாட்டு சேவை |
| பாதுகாப்பு மதிப்பீடு | ▪ சிவில் விமானப் போக்குவரத்துத் துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| நடைமுறைப்படுத்தல் | ▪ ஒழுங்குமுறை மீறல்கள் மீதான பதில்கள்.<br>▪ பொது சுகாதார மற்றும் சுத்திகரிப்புத் தேவைகளை அமுல்படுத்தல் |
| அரசாங்கத்திற்கு உதவுதல் | ▪ விமானப் சேவை நிறுவனங்களிடமிருந்து தாமத வரியினை அறவிடல் |

## நியதிச் சட்டச் செயற்பரப்பு

சிவில் விமானப் போக்குவரத்தின் நியதிச் சட்ட செயற்பரப்பானது 2013 இன் இறுதிக் காலப்பகுதியில் பின்வருமாறு காணப்பட்டது.

| நியமிச் சட்டப் பரப்பெல்லை | 2014 | 2013 | மாற்றம் % |
|---|---|---|---|
| விமான நிலையங்கள் | | | |
| உள்நாட்டுத் தரை விமான நிலையங்கள் | 12 | 12 | - |
| உள்நாட்டு நீர் விமானத் தளங்கள் | 14 | 12 | +16.6% |
| சர்வதேச விமானத் தளங்கள் (RMA உடன்) | 03 | 03 | - |
| விமான சேவைகள் | | | |
| உள்நாட்டு வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமான சேவைகள் | 08 | 06 | +33% |
| சர்வதேச வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமான சேவைகள் | 03 | 03 | - |
| சர்வதேச வெளிநாட்டு விமான சேவைகள் | 24 | 24 | - |
| பயிற்சியளித்தல் நிறுவனங்கள் | | | |
| பறத்தற் பயிற்சிப் பாடசாலைகள் | 08 | 05 | +60% |
| பொறியியல்/ பராமரிப்புப் பாடசாலைகள் | 05 | 05 | - |
| வான் போக்குவரத்து நெரிசலுடன் தொடர்புபட்டது | 01 | 01 | - |
| வானியல் சேவைகள் வழங்குனர்கள் | | | |
| விமானத்தளங்கள் | 01 | 01 | - |
| வான் போக்குவரத்து நெரிசல் சேவைகள் | 01 | 01 | - |
| வானியல் சார் தளச் சேவைகள் | 01 | 01 | - |
| வானியல் சார் தொலைதொடர்புச் சேவைகள் | 01 | 01 | - |
| வான் போக்குவரத்து பாதுகாப்புத் சேவைகள் | 01 | 01 | - |
| தளப்பராமரிப்புச் சேவைகள் | 01 | 01 | - |
| உபசரணைச் சேவைகள் | 01 | 01 | - |
| வானூர்தி எரிபொருள் மீள்நிரப்பல் மற்றும் எண்ணெய் விநியோகம் | 01 | 01 | - |
| பராமரிப்பு மற்றும் திருத்தம் | 01 | 01 | - |
| வானூர்தி | | | |
| 136,000 கி.கி. அல்லது அதற்கு மேற்பட்ட எடையுடைய வகைகொண்ட பாரிய வானூர்திகள் | 16 | 14 | +14% |

| | | | |
|---|---|---|---|
| 136,000 கி.கி. (300,000 இறாத்தல்கள்) க்கு குறைந்ததும் 7,000 கி.கி. (15,500 இறாத்தல்கள்) க்கு உயர்வானதுமான நடுத்தர எடையுடைய வானூர்திகள் | 22 | 18 | +22% |
| 7,000 கி.கி. (15,500 இறாத்தல்கள்) க்கு குறைவான குறைந்த எடையுடைய வானூர்திகள் | 33 | 31 | +4% |
| பறத்தற் பயிற்சி உபகரணங்கள் | | | |
| உள்நாட்டு முழு அளவான பறப்பு மாதிரிகள் -A 320 | 03 | 01 | +200% |
| வெளிநாட்டைத் தளமாகக் கொண்ட முழு அளவான பறத்தல் மாதிரிகள் | 03 | 05 | -40% |
| தனிநபர்கள் | | | |
| மாணவ விமானி அனுமதிப்பத்திரதாரர் | 211 | 231 | -9% |
| தனிநபர் விமானி அனுமதிப்பத்திரதாரர் | 151 | 123 | +23% |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரதாரா | 394 | 339 | +16% |
| வான் போக்குவரத்து விமானி | | | |
| அனுமதிப்பத்திரதாரர் | 350 | 498 | -30% |
| வான் நெரிசற் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரதாரர் | 85 | 74 | +15% |
| வானூர்திப் பராமரிப்பு பொறியியலாளர் | | | |
| அனுமதிப்பத்திரதாரர் | 5 | 5 | - |
| வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திரதாரர் | 436 | 474 | -8% |
| பறப்பு அனுப்புகை அனுமதிப்பத்திரதாரர் | 190 | 189 | +0.5 |
| வானியல் நிலைய செயற்பாட்டாளர் | | | |
| அனுமதிப்பத்திரதாரர் | 04 | 04 | - |
| விமான அறை உறுப்பினர் சான்றிதழ்தாரர் | 1198 | 1186 | 1% |
| பறத்தற் போதனையாசிரியர்கள் | 12 | 05 | +77% |
| உதவி பறத்தற் போதனையாசிரியர்கள் | 24 | 09 | +166% |
| தளப் போதனையாசிரியர்கள் | 22 | 23 | -4% |
| பறப்புப் பரீட்சகர் | 12 | 12 | - |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட சோதனையிடல் விமானிகள் | 34 | 34 | - |
| ஒதுக்கீடு செய்யப்பட்ட வானியல் | | | |
| மருத்துவ பரீட்சகர்கள் | 06 | 05 | +20% |
| சான்றுப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து | | | |
| பாதுகாப்பு திரைப்படுத்துநர்கள் | 571 | 504 | +13% |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநர்கள் | | | |
| உலகளாவிய வினியோக சேவை வழங்குநர்கள் | 4 | 4 | - |
| வான் போக்குவரத்து சேவை வழங்குநர் | | | |
| அனுமதிப்பத்திரம்- வகை A வான் போக்குவரத்து சேவை வழங்குநர் | 550 | 493 | +11% |
| அனுமதிப்பத்திரம்- வகை B வான் போக்குவரத்து சேவை வழங்குநர் | 38 | 19 | +100 % |
| பொது விற்பனை முகவர்கள் | 23 | 22 | +4% |
| உயர்ந்த நிர்மாணங்கள் தொலைதொடர்புக் கோபுரங்கள் | 6126 | 6090 | 0.6% |

# விபத்து விசாரணை அலகு

CAASL ஆனது விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பின் வினைத்திறனான முகாமைத்துவமொன்றின் செயற்பாட்டிற்கு அடிப்படையில் அமையும் உண்மைத் தரவு மற்றும் தகவல்களின் சேகரிப்பினை இலக்காகக் கொண்டு கட்டாய நிகழ்வு அறிக்கையிடல் மற்றும் தன்னிச்சையான அறிக்கையிடலூடாக விமானப் போக்குவரத்து நிகழ்வுகளை அறிக்கையிடும் இரண்டு வழிமுறைகளை உருவாக்கியுள்ளது.

CAASL இன் கட்டாய அறிக்கையிடலின் கீழ், 2014 இல் அறிக்கையிடப்பட்ட 243 பல்வேறு வகையுடைய விமானப் போக்குவரத்து நிகழ்வுகளில், 222 நிகழ்வுகள் இலங்கையிற் பதிவு செய்யப்பட்ட வானூர்திகளுடன் தொடர்புடையவையாகவும், மிகுதி நிகழ்வுகள் இலங்கையின் ஆட்புல வான்பரப்பினுள் செயற்படுத்தப்படும் வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட வானூர்திகளுடன் தொடர்புபட்டுள்ளன.

2014 இல் 86 பறவை மோதல்கள் அறிக்கையிடப்பட்ட அதேவேளை, முறைமை; பாகங்களின் இயலாமை அல்லது தவறான வழிநடத்தல்கள் 61 ஆக அறிக்கையிடப்பட்டன. இவ்வாறு அறிக்கையிடப்பட்டவற்றில், 37 பறவை மோதல்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிகழ்ந்ததுடன், 16 பறவை மோதல்கள் மத்தள சர்வதேச விமான நிலையத்தில் நிகழ்ந்தன.

நிகழ்வுகளில் உண்மைத்தன்மை மற்றும் மீண்டெழும் சந்தர்ப்பங்களை அடிப்படையிற் கொண்டு, CAASL ஆனது தேர்வு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் மீது விரிவான விசாரணையினை மேற்கொண்டிருந்தது. அதன் பிரகாரம், நிகழ்வொன்று விமான ஒத்துகை பார்த்தற் காலப்பகுதியில் எயார் பஸ் A330 வானூர்தியால் செயற்படுத்தப்பட்ட UL 503 சிறிலங்கன் எயார்லைன்ஸிற்குச் சொந்தமான பறப்பில் விமானத்தின் முன்புறக் கண்ணாடியில் வெடிப்பு ஏற்பட்டது. தனிச் சுற்றுப் பயிற்சியின் போது 4R-DJD பதிவிலக்கங்கொண்ட செஸ்னா 152 வகையுடைய மிலேனியம் எயார்லைன்ஸிற்குச் சொந்தமான வானூர்தியொன்று வீழ்ந்து நொறுங்கியது.

2013 இல் சிறிலங்கன் பறப்புகளுடன் தொடர்புடையதாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்ற முக்கியதொரு சம்பவம் தொடர்பிலான விசாரணை வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வந்ததுடன், விரைவில் முடிவுறுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

வானூர்தி விபத்து விசாரணைக்கான இயலளவு அதிகரிப்பின் ஒரு பகுதியாக, பதிவு செய்யப்பட்ட இரு விசாரணையாளர்கள் சிங்கப்பூரில் நிகழ்ந்த உயர்தர வானூர்தி விபத்து விசாரணைகள் மீது பயிற்றுவிக்கப்பட்டனர்.

CAASL இல் அமுலாக்கப்பட்ட தற்போதைய ECCAIRS தரவு அடிப்படை முறைமையானது (விமானப் போக்குவரத்து விபத்து அறிக்கையிடல் முறைமைக்கான ஐரோப்பியக் கூட்டிணைவு நிலையம்) பதிப்பு 5 இற்கு தரமுயர்த்தப்பட்டதுடன், இதனைத் தொடர்ந்து தரமுள்ள உள்நாட்டு செயற்பாட்டாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. 2010 இல் CAASL இல் உருவாக்கப்பட்ட ECCAIRS முறைமையானது 2014 முடிவில் 802 நிகழ்வுகளின் பதிவுகளை உள்ளடக்கியிருந்தது. பின்வரும் அட்டவணை 2014 இல் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளின் பிரதான வகைப்படுத்தலை வெளிப்படுத்துகின்றது.

All reported occurrences into aircraft registered in Sri Lanka and into foreign registered aircraft within the territory of Sri Lanka in 2014




| | |
|---|---|
| ADRM | விமானத்தளங்கள் |
| ATM/CNS | வான் நெரிசல் முகாமைத்துவம் (ATM) அல்லது தொடர்பாடல்கள், வழிகாட்டல்கள் அல்லது சோதனை (CNS) சேவை விடயங்கள் |
| BIRD | பறவைத் தாக்கம் |
| CABIN | வானறைப் பாதுகாப்பு நிகழ்வுகள் |
| FUEL | எரிபொருள் சம்பந்தப்பட்டது |
| LALT | குறைந்த நடத்தைச் செயற்பாடு |
| MAC | ACAS எச்சரிக்கை/ பகுதியாக்கல் இழப்பு/ நடுக்காற்று மோதுகை |
| MED | மருத்துவம் |
| RAMP | தளக் கையாள்கை |
| RE | ஓடுபாதை பயணம் |
| SCF-NP | முறைமை/ பாகத்தின் செயலிழப்பு/ தவறான செயற்பாடு (வலுவற்ற இயந்திரம்) |
| SCF-PP | வலுவூட்டற் பாகத்தின் செயலிழப்பு அல்லது தவறான செயற்பாடு |
| SEC | பாதுகாப்பு சம்பந்தப்பட்டது |
| TURB | கொந்தளிப்பினை எதிர்கொள்ளல் |
| WSTRW | காற்று ஊடறுப்பு அல்லது இடிமுழக்கம் |
| WILD | காட்டுப் பிராணிகளின் மோதுகை |
| OTHER | ஏனையவை |

# உள்ளகக் கணக்காய்வுப் பகுதி

உள்ளகக் கணக்காய்வுப் பகுதியானது கணக்கியல் மற்றும் நிதி அறிக்கையிடல் முறைமையின் அங்கீகரிக்கப்பட்ட தன்மையினையும், விபரமான முறை ரீதியான மீளாய்வினூடாக ஊயுயுளுடு இன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பயனுறுதித்தன்மையையும், மற்றும் செய்முறையொன்றின் அடிப்படையில் அம் முறைமைகள் கண்காணிக்கப்படுவதனையும் உறுதி செய்து கொள்வதற்குத் தேவையான படிமுறைகளை எடுத்து வந்துள்ளது. மேலும் இப் பகுதியானது ஊயுயுளுடு இன் சட்டங்கள் ஒழுங்குகள் உருவாக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் முறைமைகளுடன் தொழிற்பாடுகள் இணங்கிப் போகின்றன என்பதனையும் உறுதி செய்தது. 2014 இல் 07 தொழிநுட்பக் கணக்காய்வுகளையும், 20 நிதிக் கணக்காய்வுகளையும் மேற்கொண்டு மொத்தமாக 39 இணங்கிச் செயலாற்றல் கண்காணிப்புக் கணக்காய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இக் கணக்காய்வின் மூலம் 148 கண்டுபிடிப்புக்கள் அல்லது முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டு சிரேஷ்ட முகாமைக்கு சீராக்கலுக்காக அவை தொடர்பிலான தகவல்கள் வழங்கப்பட்டன.

# வானியல் சேவைகள் பிரிவு

## விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பகுதி 2014இன் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வேலைத் திட்டத்தின் பிரகாரம்,விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புடன் தொடர்புடைய செயற்பாடுகளின் தொடர்ச்சியான சோதனைகள் மற்றும் ஆரம்ப சான்றுப்படுத்தல்களில் ஈடுபட்டிருந்தது.

விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புச் சேவை வழங்குனரான வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனியின் முறைசார்ந்த சான்றுப்படுத்தற் செய்முறை ஆரம்பமானது. 09 விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு முகாமையாளர்கள், 81 விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புத் திரையிடலாளர்கள், மற்றும் 04 விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புவழிப்படுத்துநர்கள் சான்றுப்படுத்தப்பட்டதுடன், 490 விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புத் திரையிடலாளர்கள் இவ் ஆண்டில் மீள் சான்றுப்படுத்தப்பட்டார்கள். மேலும் 25 சோதனை நடவடிக்கைகள், 01 பரீட்சை, மற்றும் 18 மிக மிக முக்கியத்தர்களின் பறப்புகள் தொடர்பான பாதுகாப்புக் கண்காணிப்பு என்பன முன்னெடுக்கப்பட்டன.

சிறிலங்கன் எயார்லைன்ஸின் பாதுகாப்புத் திட்டம் மற்றும் 28 வெளிநாட்டு விமான சேவைகளின் பாதுகாப்புத் திட்டங்கள், குறிப்பிட்ட விமான சேவைச் செயற்பாட்டாளர்களால் தேசிய சிவில் விமானப் போக்குவரத்துத் திட்டத்திற்கமைவான கட்டுப்படுத்தல்களின் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பாதுகாப்பு அளவீடுகளின் அமுலாக்கல் நிலையினை மதிப்பிட்டுக் கொள்ளும் பொருட்டு மதிப்பீடு செய்யப்பட்டன.

இவ் ஆண்டில் மொத்தமாக 160 அனுமதிகள் வர்த்தக சிவில் விமானங்களில் ஆயுதங்களைக் காவுகை செய்வதற்காக வழங்கப்பட்டிருந்தன.

## விமானத் தளங்கள் மற்றும் வான் வழிகாட்டற் சேவைகள் பகுதி

### பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமானத்தள சான்றுப்படுத்துகை புதுப்பித்தற் சோதனை

சர்வதேச பறப்புகள் செயற்படுத்தப்படும் அனைத்து விமானத்தளங்களையும் சான்றுப்படுத்துவது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் தேவையாக அமைகின்றது. சர்வதேச விமான நிலையங்களின் சான்றுப்படுத்தல்கள், விமானத்தள கைநூலினையும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களையும் மீளாய்வு செய்தல், விமானத்தளப் பாதுகாப்பு முறைமையொன்றினை அமுலாக்குதல், மற்றும் விமானத்தள வசதிகள், சேவைகள், உபகரணங்கள், மற்றும் செய்முறைகளைப் பரிசீலிப்பதற்குரிய நேரடிச் சோதனை முறையொன்றினை நடாத்துதல் என்பன உள்ளடங்கியதான பாதுகாப்புச் சோதனையொன்றினை முன்னெடுத்ததன் பின்னர், தேசிய சிவில் விமானப் போக்குவரத்து நியதிச்சட்ட ஒழுங்குபடுத்துநர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமானது 05 நாட்களைக் கொண்ட நேரடிச் சோதனைகளின் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் செல்லுபடிக் காலத்தைக் கொண்டதாக 2010 இல் முதன் முறையாகச் சான்றுப்படுத்தப்பட்டது. இதன் நிமிர்த்தம் இரண்டாவது விமானத்தளச் சான்றுப்படுத்துதலுக்கான புதுப்பித்தற் சோதனையானது 2014 மார்ச்சில் நான்கு நாட்களைக் கொண்டதாக முன்னெடுக்கப்பட்டது. சோதனைகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகளைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்ததன் பின்னர், விமானத்தளச் சான்றுப்படுத்துகை மேலும் இரண்டு வருடங்களுக்கு புதுப்பிக்கப்பட்டது.

### சோதனை நடவடிக்கைகள்

விமானத்தளங்கள் மற்றும் வான்வழிகாட்டற் சேவைகளுடன் தொடர்புபட்ட சோதனை நிகழ்வானது மாதாந்த ரீதியான வான் வழிக்

கட்டுப்பாட்டு நிலையங்கள், விமானத்தளங்கள், வானியற் தகவற் சேவை நிலையங்கள் மீதான சோதனைகளை உள்ளடக்குகின்றது.

இரத்மலானை பிராந்தியக் கட்டுப்பாட்டு நிலையம், BIA அணுகுகைக் கட்டுப்பாட்டு நிலையம், BIA கட்டுப்பாட்டுக் கோபுரம், MRIA கட்டுப்பாட்டுக் கோபுரம், மற்றும் RMA கட்டுப்பாட்டுக் கோபுரங்களை உள்ளடக்கிய வான் நெரிசற் கட்டுப்பாட்டு நிலையங்களில் 35 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

விமானத்தளப் பரப்பெல்லையில், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம், மற்றும் இரத்மலானை சர்வதேச விமான நிலையம் எனும் இலங்கையிலுள்ள அனைத்து விமானத் தளங்களையும் உள்ளடக்கி, இவ்வாண்டில் 38 விமானத்தளச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக 02 நீர் விமானத்தளங்களும், 05 ஹெலிகொப்ரர் தளங்கள் மீதான சோதனைகளும் முன்னெடுக்கப்பட்டன. வைத்தியசாலைகளில் நிறுவப்பட்டுள்ள இரண்டு ஹெலிகொப்ரர் தளங்கள் செயற்பாடடின் பொருட்டு அனுமதிக்கப்பட்டன.

வானியற் தகவற் சோதனைகள் தொடர்பில், BIA, MRIA, மற்றும் RMA என்பனவற்றில் அமைந்துள்ள வானியற் தகவற் சேவை நிலையங்கள் மீது 27 சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இச் சோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சேவை வழங்குனரான வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது. தொடர்ச்சியாகத் தேவைப்படும் நடவடிக்கைகளானவை அவ்வாறு அடையாளங்காணப்பட்ட குறைபாடுகள் குறித்த காலத்தினுள் சீர்செய்யப்பட்டதென்பதனை உறுதி செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டன.

## செயற்பாட்டை அடிப்படையிற் கொண்ட வழிகாட்டலை அமுலாக்கல் (PBN)

செயற்பாட்டை அடிப்படையிற் கொண்ட வழிகாட்டலின் அமுலாக்கலாக்கமானது (PBN) தற்போது உலகளாவிய வான் வழிகாட்டலைக் கருத்திற் கொள்கையில் அது முன்னிலையான விடயமாக காணப்படுகின்றது. PBN ஆனது கிடை ரீதியான வழிகாட்டலுடன் கூடிய அதிகப்படியான சீரான கருவிகள் அனுகுகையினூடான முன்னேற்றப்படுத்தப்பட்ட பாதுகாப்பு, அதிகரிக்கப்பட்ட வான்வெளி இயலளவு அதிகரிக்கப்பட்ட விமான நிலையப் பெறுகைத்தன்மை, மிக வினைத்திறனான செயற்பாடுகள், குறைக்கப்பட்ட கீழ்க் கட்டுமானச் செலவுகள், மற்றும் குறைக்கப்பட்ட சூழலியற் தாக்கம் உள்ளடங்கிய முக்கிய நன்மைகளை வழங்குகின்றது.

ஒன்றுகூடலின் 37 ஆவது கூட்டத்தொடரில் 2010, 2014, மற்றும் 2016 இல் முறையே 30%, 70%, மற்றும் 100% ஆகக் காணப்படும் துல்லியமான அணுகுதல்களுக்கான பாதுகாப்பான சேமிப்பாகவோ அல்லது பிரதான அணுகுமுறையாகவோ அனைத்துக் கருவிகள் ஒடுபாதை முடிவில் ஆகக் குறைந்த மட்டுமான வெளிநோக்குகை வழிகாட்டு அணுகுமுறை (LNAV) உள்ளடங்கலான கிடை ரீதியான வழிகாட்டல் (APV) (Baro – VNAV மற்றும் அல்லது அதிகரிக்கப்பட்ட GNSS) உடனான அணுகுமுறைச் செய்முறையின் அமுலாக்கல் விகிதாசாரத்தின் பொருட்டு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன.

இருப்பினும், நான்கு கருவிகள் ஒடுபாதைகளுடன் இலங்கையில் இரண்டு சர்வதேச விமான நிலையங்களைச் செயற்படுத்தும் (வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை கம்பனி) வான் வழிகாட்டல் நியதிச்சட்ட சேவை வழங்குனர்களால் பிராந்திய இலக்கினை அடைந்து கொள்ள முடியவில்லை. எனவே PBN அமுலாக்கல் தொடர்பில் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் உதவி தேவைப்படும் போதும் மீள் நினைவாக்கலை ஏனைய நாடுகளுக்கும் உதவுவதற்கு ICAO ஆல் உருவாக்கப்பட்ட ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பறத்தற் செய்முறைத் திட்ட அங்கத்தவராக இருந்து கொள்வதற்கு நிதி உதவியை வழங்கி ஆக இருந்தபோதிலும் கூட, நியதிச் சட்ட உதவியாளராக இருப்பதற்கு ICAO வான் வழிகாட்டற் பிராந்திய தரவுத்தளத்தில் சித்தரிப்புச் செய்யப்படுகின்றது.

## மேலாகப் பறத்தல் மற்றும் தரையிறங்கல் அனுமதியின் வழங்குகை

2014 காலப்பகுதியில், CAASL ஆனது கொழும்பு பறப்புத் தகவற் பிராந்தியத்திற்கு மேலான பறப்பதற்கு 31,816 சர்வதேச பறப்புக்களுக்கு அனுமதியினையும், இலங்கை வான் பரப்பில் பறப்பினை மேற்கொள்வதற்கு 21,576 சர்வதேச பறப்புக்களுக்கு அனுமதியினையும், இலங்கையில் தரையிறக்கலுக்கு 789 சர்வதேச அட்டவணைப்படுத்தப்படாத பறப்புக்களுக்கும் அனுமதியினை வழங்கியிருந்தது.

## ஹெலிகொப்டர்கள் மூலமான வான்சார் வேலைகள்

வேறுபட்ட வர்த்தக ஹெலிகொப்டர்கள் கூட்டாண்மை உருவாக்கலின் வியாபார நோக்கங்களுக்கான வான்சார் படப்பிடிப்பு, வான்சார் காணொளி படப்பிடிப்பு, இலத்திரனியல் நிழற் பிரதிகளுக்கான வான்சார் வேலைகள், மலர்ப் பொழிவுகள், வியாபார அட்டைப் பொழிவுகள், மற்றும் வர்த்தக நாம மேம்படுத்தல் வேலைகள் போன்ற வான்சார் வேலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டன. இவ்வாறான

பறப்புக்களுக்கான 42 அனுமதிகள் இவ் வருட காலத்தில் ஏனைய தொடர்புடைய முகவர்களின் பொருட்டு வழங்கப்பட்டன.

## ஏனைய செயற்பாடுகள்

பிரயோகிக்கக் கூடியதான வலய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் உயரிய கட்டமைப்புடைய கட்டுமானங்களுக்கான உயர அனுமதி வழங்கல், தராதரங்களை வழங்குவதற்கான வான் நெரிசற் வழகாட்டுனருக்கான (ATC) பரீட்சைகள், வான் நெரிசல் வழிகாட்டுநர்களுக்கு அவர்களது நியமங்களை பராமரித்துக் கொள்ளும் பொருட்டு பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் ஆரம்ப வழங்குகை மற்றும் தொடர்ச்சியான சீராக்கங்களை வானியல் தகவல் வெளியீடுகள் (AIP) பொதியில் உள்ளடங்கல்களை/ பகுதிகளை அனுமதித்தல் என்பன உள்ளடங்கிய விமானத் தளங்கள் மற்றும் வான் வழிகாட்டற் சேவைகளின் ஏனைய பிரதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

## விஷேட செயற்றிட்டப் பகுதி உட்கட்டுமான விருத்தி

2013 இல், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது நிறுவனத்தின் வினைத்திறனான செயற்பாடுகளுக்காக உட்கட்டுமானத்தினை விருத்தி செய்து கொள்வதற்கு அதனது முயற்சிகளை மேற்கொண்டது. இதன் பிரகாரம், விசேட திட்டங்கள் பகுதியானது அவ்வாறான நிர்மாணங்களின் திட்டமிடல் மற்றும் மேற்பார்வைகளில் பிரதான பணிகளை முன்னெடுத்திருந்தது.

## CAASL இற்கான தலைமையலுவலகக் கட்டட நிர்மாணம்

CAASL கட்டுநாயக்க நைகந்தவில் அதற்கான தலைமையலுவலகக் கட்டட நிர்மாணத்திற்கென அதனது வேலைகளை தொடர்ந்திருந்தது. அரசாங்க கொள்வனவு செய்முறைகளுக்கு அமைய திறந்த கொள்வனவுச் செய்முறையினூடாக நிர்மாணத்திற்காக, நிர்மாண ஒப்பந்தக்காரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2016 இல் இத் தலைமையலுவலக கட்டட நிர்மாணங்களை நிறைவுறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## CAASL ஊழியர்களுக்கான வீரவிலவில் விடுதிகளின் நிர்மாணம்

CAASL ஊழியர்களுக்கான விடுதிகள் வீரவிலவில் ஒவ்வொன்றும் நான்கு படுக்கையறைகளுடனான இரண்டு தட்டுக்களைக் கொண்ட நான்கு கட்டடங்களின் நிர்மாணத்திற்கென 2013 இல் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கக் கொள்வனவுச் செய்முறைகளினூடாக நிர்மாணத்திற்கென, நிர்மாண ஒப்பந்தக்காரரொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2014 ஒக்டோபர் மாதத்தில் நிர்மாணங்கள் நிறைவடைந்ததுடன், அதன் முடிவுறுத்தல் வேலைகள் நிறைவடைந்தவுடன் 2014 இன் இறுதியில் 2015 இன் ஆரம்பத்தில் ஊழியர்கள் தங்கும் பொருட்டு இவை தயாராக இருந்தன.

## மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் CAASL அலுவலகத் திறப்பு

விமான நிலையங்களின் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு நியதிச்சட்ட ஏற்பாட்டாளர்களான CAASL அலுவலகமானது மத்தள சர்வதேச விமான நிலையத்தில் மிக முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. 2014 இல் CAASL இன் கடமைகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு MRIA இல் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதற்கான அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

## தேசத்திற்கு மகுடம் தேசியக் கண்காட்சி

2014 ஆம் ஆண்டு உள்ளடங்கலாக ஒவ்வோராண்டும் CAASL தேசத்திற்கு மகுடம் தேசியக் கண்காட்சியில் கண்காட்சிக் கூட்ட மொன்றினை நிறுவிவருகின்றது. இதன் பிரகாரம், மாதம்ப, கருக்குவா குளியாப்பிட்டி மகாவித்தியாலயத்தில் நிகழ்ந்த கண்காட்சியிலும் பங்கு கொண்டது. இதற்கு மேலாக, மாதம்பயிலுள்ள கருக்குவா சுகதானந்தா மகாவித்தியாலயத்தின் விளையாட்டரங்கு CAASL இன் சமூகப் பொறுப்பின் ஓர் அங்கமாக 2014 இல் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் சமாந்தர அபிவிருத்தித் திட்டமாக முன்னெடுக்கப்பட்டது. மேலும், 21-23 ஜனவரி 2014 இல் பொறலுவேவாவில் அமைந்துள்ள வெவ்பொத்துவேவா மகாவித்தியாலயத்தில் நிகழ்ந்த கண்காட்சியொன்றிலும், 27 ஜனவரி முதல் 01 பெப்பரவரி 2014 வரையில் மாத்தறையிலுள்ள மகன்துறை மகாவித்தியாலயத்தில் நிகழ்ந்த வர்த்தகக் கண்காட்சியிலும் குறித்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் பங்குகொண்டது.

### வேலைப்பட்டறைகள்/ பயிற்சியளித்தற் திட்டங்களை நடாத்துதல்

### CAPS-CA வேலைப்பட்டறை

பாங்ஹொங்கில் நடைபெற்ற 50வது DGCA மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றிற்கமைய, CAASL ஆனது 20-23 மே 2014 வரையில் இலங்கை, கொழும்பில் CAPSA-AP (சிவில் விமானப் போக்குவரத்தில் பொதுமக்கள் சுகாதார நிகழ்வுகளில் தடுத்தல் மற்றும் முகாமைத்துவத்திற்கான கூட்டிணைக்கப்பட்ட ஏற்பாடு- ஆசியா- பசுபிக்) இன் 7வது கூட்டம் இடம்பெற்றது. 7வது CAPSCA-AP கூட்டமானது விமானப் போக்குவரத்துத் துறையினை தாக்கும் பொதுமக்கள் சுகாதார அவசர ஏற்பாடுகளிலிருந்தான ஆபத்துக்களைச் சமநிலைப்படுத்துவதற்கான மேலதிக கூட்டிணைவிற்கு உதவும் பொருட்டு, விமானப் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் சுகாதாரத்துறையினரின் உரிமைதாரர்களை ஒன்றுகூட்டுவதிலான வெற்றிகரத்தன்மையினை

வானியல் சேவைகள் பிரிவு

கட்டியெழுப்புவதனை நோக்காகக் கொண்டிருந்தது. ICAO, உலக சுகாதார நிறுவனம் (WHO), பங்களாதேஷ், சீனக் குடியரசு, கொங்ஹொங் சீனா, இந்தோனேசியா,மாகோ சீனா, மாலைதீவு, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், இலங்கை சுகாதார அமைச்சு, CAASL, விமானத்தளச் செயந்பாட்டாளரான AASL, மற்றும் வான் வான்வழிகாட்டற் சேவை வழங்குனர், விமான நிலைய மருத்துவ அலுவலர்கள், விமான நிலையப் பாதுகாப்பு ஊழியர்கள், இலங்கை சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், மற்றும் பிரதிநிதிகள் உள்ளடங்கிய 50 பங்குபற்றுனர்கள் இதில் கலந்து கொண்டனர்

## விமானிகளுக்கான பறத்தற் செல்லுபடியாக்கற் கற்கைநெறி

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) ஆசிய-பசுபிக் பறத்தற் செய்முறைத் திட்டமானது CAASL இன் வேண்டுகோளின் பேரில் 17 ஒக்டோபர் முதல் 05 நொவம்பர் 2014 வரையில் கொழும்பில் பறத்தற் செல்லுபடியாக்கற் கற்கைநெறியொன்றை முன்னெடுத்திருந்தது.

இக் கற்கைநெறியின் நோக்கமானது பறத்தற் செய்முறை வடிவமைப்பாளர்களால் விருத்தியாக்கப்பட்ட செய்முறை அடிப்படையில் அமைந்த வழிகாட்டல் (PBN) பறத்தற் செய்முறைகளின் பறத்தற் செல்லுபடியாக்கலில் விமானிகளைப் பயிற்றுவிப்பதாக இது அமைந்திருந்தது. ICAO தேவைப்பாடுகளின் படி, அமைத்து நாடுகளும் பிராந்திய PBN அமுலாக்கலின் பிரகாரமான அமுலாக்கலினை 2016 அளவில் நிறைவு செய்துகொள்ள வேண்டப்படுகின்றன.

மேலும், இப் பயிற்சியளித்தல் நிகழ்வில் சீனா, தாய்லாந்து, மாலைதீவு, பிலிப்பைன்ஸ், மற்றும் பங்களாதேஷ் எனும் ஐந்து நாடுகளிலிருந்தான வெளிநாட்டவர்கள் பங்குகொண்டிருந்தனர். சிறிலங்கன் எயார்லைன்ஸை சேர்ந்த இரண்டு விமானிகள் மற்றும் மிஹின் லங்காவைச் சேர்ந்த ஒரு விமானியும் இப் பயிற்சிநெறியில் பறத்தற் செல்லுபடியாக்கலில் பயிற்றப்பட்டனர்.

## தேசிய பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான வேலைப்பட்டறை

ICAO தேவைப்பாடுக்கமைவாக, ICAO ஆல் வழங்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் நாடுகளில் சிவில் விமானப் போக்குவரத்தில் பாதுகாப்பினை விருத்திசெய்யும் பொருட்டு "தேசிய பாதுகாப்பு திட்டம்" (SSP) ஒன்றினை விருத்தி செய்து கொள்ள அனைத்து நாடுகளும் வேண்டப்படுகின்றன. அதன் ஒரு அங்கமாக சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது பிராந்திய நாடுகளுக்காக ICAO தொழிநுட்ப கூட்டிணைவு சம்மேளனத்திவிருந்தான (ICAO -TCA) நிபுணர்களின் உதவியுடன் 15 – 19 டிசம்பர் 2014 வரையில் இலங்கையில் இப் பயிற்சி நெறியினை நடாத்தியிருந்தது. அனேகமாக, இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஊயுயுளுடு இன் அனைத்து தொழிநுட்ப ஊழியர்களும் SSP இல் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## வெளியீடுகள்/ அறிக்கைகள்

கௌரவ சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் பாராளுமன்றில் 2013 ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பித்துக் கொள்ளும் பொருட்டு, அவ் அறிக்கையானது 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டது. பௌதீக மற்றும் செயன்முறை அறிக்கைகள், குழுநிலை பாதீட்டு அறிக்கை, திட்டங்கள் விருத்தி அறிக்கைகள் என்பன சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் மத்திய வங்கி போன்றனவற்றிற்கு அவற்றால் அவை வேண்டப்படும் போது சமர்ப்பிக்கப்பட்டன.

## சிவில் விமானப் போக்குவரத்து விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

மேலும், CAASL ஆனது சிவில் விமானப் போக்குவரத்துக் கைத்தொழிற் துறைக்கு எதிர்காலத்தில் தேவைப்படும் மனித வலுவினை விருத்தி செய்யும் செயற்திட்டமொன்றினை முன்னெடுத்துள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோக்கிய நிகழ்வாக, CAASL ஆனது சிவில் விமானப் போக்குவரத்துத்துறையில் பாடசாலைச் சிறுவர்களின் அறிவாற்றலை விருத்தி செய்வதற்கு விஷேட செயற்றிட்ட பகுதியின் கீழ் சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழுவினை (CADEC) தாபித்திருந்தது.

CADEC ஆனது பாடசாலைகளில் விமானப் போக்குவரத்து விழிப்பூட்டல் நிகழ்வுகளை முன்னெடுத்தல், பாடசாலை மட்டத்தில் வானியற் கழகங்களை உருவாக்கிக் கொள்ள ஊக்குவித்தல், மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத்துறையில் பாடசாலை மாணவர்களின் அறிவாற்றலினை விருத்தி செய்யும் நோக்குடன் காலாண்டு விமானப் போக்குவரத்து கல்விச் சஞ்சிகையாகப் பெயரிடப்பட்ட "குவான்ஷர" எனும் சஞ்சிகையினை வெளியிடல் என்பனவற்றினை முன்னெடுத்து வருகின்றது. 2014 காலப்பகுதியில், இரண்டு பாடசாலை நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், 2014 முடிவு வரையில் மொத்தமாக. 584 வானியற் கழகங்களின் உருவாக்கலுக்குத் துணைபுரிந்துள்ளது. மூன்று (03) குவான்ஷர சஞ்சிகைகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அவை 3,100 பாடசாலைகளுக்கிடையில் இலவச அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

# விமானப்பறப்புற் பாதுகாப்புப் பிரிவு

## செயற்பாட்டுப் பகுதி

### வான் செயற்பாட்டாளர்களைச் சான்றுப்படுத்தல்

உள்நாட்டு வர்த்தக வான் செயற்பாடுகளில் ஈடுபடும் பொருட்டு, IWS ஏவியேஷன் மற்றும் ஸ்கைலார்க் ஏவியேஷன் எனும் ஹெலிகொப்டர் செயற்பாடுகளுக்கான இரண்டு (02) விண்ணப்பதாரர்களின் வான் செயற்பாட்டுச் சான்றுப்படுத்தல்கள் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவர்களுக்கான அனுமதியும் வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2015 இல் வான் செயற்பாட்டாளர் சான்றிதழ்கள் (AOC) வழங்கும் எதிர்பார்ப்புடன் ஆவண மதிப்பீடு மற்றும் சோதனைத் தொடர் செய்முறைகளின் கீழ் காணப்படும் கு- எயார்வேய்ஸ் மற்றும் பி(f)ளை சதேன் எனும் வேறு இரு விமான சேவைகளின் சான்றுப்படுத்தல் செய்முறைகளும் முன்னெடுக்கப்பட்டன. ஆவண மதிப்பீடு மற்றும் சோதனைச் செய்முறைகள் என்பன அவர்களின் முழுமையான நிறுவனமொன்றிற்கான பிரதிபலிப்பு, பறத்தற் செயற்பாடுகளில் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை முறைமை, பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம், நிலமை மற்றும் குறிக்கப்பட்ட செயற்பாடுகளின் விரிவாக்கத்தினை உள்ளடக்கியதான தளக்கையாள்கை மற்றும் பராமரிப்பு ஒழுங்கு என்பனவற்றில் தங்கியுள்ளது.

பி(f)ளை சதேன் ஏவியேஷன் AOC இனை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பமொன்றினை வழங்கியுள்ளதுடன், அது செய்முறைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. AOC ஒன்றினை வழங்குவதற்காக விண்ணப்பதாரி ஒருவரின் உறுதித்தன்மையினை மதிப்பிட்டுக்கொள்ளும் பொருட்டு, CAASL ஆனது முன்மொழிவு செய்யப்பட்ட செயற்பாடுகளில் ஆழமானதொரு மதிப்பீடொன்றினை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறான மதிப்பீடானது ஆகக் குறைந்தது நிறுவனம், ஊழியரிடல், உபகரணங்கள் மற்றும் வசதிகள், முன்மொழியப்பட்ட பாதைகள், மட்டங்கள் மற்றும் சேவையின் வகை, மற்றும் நிதியியல் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது.
மேலும், சர்வதேச செயற்பாடுகளுக்கான மூன்று (03) AOC மற்றும் உள்நாட்டுச் செயற்பாடுகளுக்காக ஆறு (06) AOC என்பனவற்றின் புதுப்பித்தல் வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலதிகமாக, AOC களின் செயற்பாட்டு விதந்துரைகள் மீதான சீராக்கங்களுக்காக இருபத்தாறு (26) விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டதுடன், அவற்றிற்கான அனுமதிகள் முழுமையானதொரு மதிப்பீட்டின் பின்னர் வழங்கப்பட்டன. மேலும், அவ்வாறான AOC உரிமைதாரரின் பறத்தற் செயற்பாட்டுக் கையேடுகள் மற்றும் பயிற்சியளித்தற் திட்டங்கள் மீளாய்வு உள்ளடங்கிய ஆவணங்கள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டதுடன், CAASL இன் சான்றுப்படுத்தல் ஏற்பாடுகளுக்கிணங்க அனுமதியளிக்கப்பட்டன.

புதிய வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர்கள் தொடர்பில், ரஷ்யாவிலிருந்தான ரான்ஸ்ஏறோ எயார்லைன்ஸ் புதிதாக சான்றுப்படுத்தப்பட்டதுடன், அபுதாபியிலிருந்தான றொற்றானா ஜெற் ஏவியேஷன் இலங்கைக்கு செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொள்ளும் பொருட்டு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேலும், இலங்கையில் நடைமுறையிலுள்ள ICAO இணைப்பு 17 இன் 13வது சீராக்கத்துடன் இணங்கி அமையாத விமான சேவைகளுக்கு சர்வதேச விமான சேவை அனுமதிப்பத்திரமொன்றினை அல்லது தற்காலிக அங்கீகாரமொன்றினை வழங்கும் பொருட்டு இருபத்தைந்து (25) சர்வதேச வான் செயற்பாட்டாளர்களின் புதுப்பித்தற் சான்றுப்படுத்தல் வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

### வான் மூலமான ஆபத்தான பொருட்களை (DG) நகர்த்துவதற்கான அனுமதி

2014 இல், ஜெற் எயார்வேய்ஸ்ற்கு வான் மூலமாக ஆபத்தான பொருட்களை நகர்த்துவதற்கான அனுமதியொன்று வழங்கப்பட்டிருந்த அதேவேளை, பதின்மூன்று (13) வெளிநாட்டு எயார்லைன்ஸ்களினதும், இரண்டு (02) உள்நாட்டு சர்வதேச விமான சேவைகளினதும் ஆபத்தான பொருட்களை வான் மூலமாக நகர்த்துவதற்கான அனுமதி புதுப்பிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ஆபத்தான பொருட்களை நகர்த்துவதற்கான விஷேட DG அனுமதிகள் விமான சேவைகளுக்கு வழங்கப்பட்டன.

## சோதனை நடவடிக்கைகள்

ICAO–SARPs இன் அமுலாக்கலை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு, சீரான சோதனை நடவடிக்கைகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர்கள் மீது முன்னெடுக்கப்பட்டன. நாற்பத்தெட்டு (48) ரம்ப் சோதனைகள், ஐந்து (05) பறத்தலின் போதான சோதனைகள், இருபத்திநான்கு (24) DCP மேற்பார்வைச் செயற்பாடுகள், ஏழு (07) பிரதான தளச் சோதனைகள், மற்றும் பயிற்சிநெறி மேற்பார்வை உள்ளடங்கலான இருபத்தாறு (26) ஏனைய சோதனைகள் என மொத்தமாக 115 சோதனை நடவடிக்கைகள் 2014 இல் முன்னெடுக்கப்பட்டன.

சோதனை நடவடிக்கைகளின் முன்னுரிமை மற்றும் 2015 ஆண்டுக்கான ஆய்வு என்பன உள்ளடங்கலாக, ஆபத்தை அடிப்படையிற் கொண்ட பாதுகாப்புச் சோதனைச் செய்முறைகளை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேலும் முன்னெடுக்கப்பட்டன. இந்த எதிர்பார்ப்பில், விமானியின் செயற்பாடுகளுக்கான செயற்பாட்டாளர் பின்பற்றுதல்கள், பறத்தலுக்கு முன்னரான செயற்பாடுகள், பறத்தலின் போதான செயற்பாடுகள், மற்றும் கூட்டிணைக்கப்பட்ட ஆபத்துக்களின் வகைப்படுத்தலுக்கான சம்பவ அல்லது விபத்திற்குப் பின்னரான ஆயத்தங்களுக்காக தரவு சேகரித்தல் முறையொன்றினை விருத்தியாக்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டது. இது CAASL இன் எதிர்கால சோதனைத் திட்டமிடலுக்கான மிக விரிவானதொரு ஆபத்து அடிப்படையில் அமைந்த சோதனை எண்ணக்கருவினை விருத்தி செய்வதற்கு வழிவகுக்கின்றது. அத்துடன், AOC உரிமைகளின் பாதுகாப்புச் செயற்றிறனின் மதிப்பீடுகளுக்கிணங்க வளங்களின் ஒதுக்கீட்டிற்கு வசதியளிக்கின்றது.

## ஒதுக்கீடு செய்யப்பட்ட பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர்கள் (DFOIS)

இலங்கை விமானப் போக்குவரத்துக் கைத்தொழிற் துறையின் பரப்பளவு மற்றும் விஸ்தீரணம் என்பனவற்றின் விரைவான விருத்தி காரணமாக, CAASL இன் பறத்தற் செயற்பாட்டுப் பரிசோதகர்களின் (FOIS) வேலைப்பளு கணிசமான அளவு அதிகரித்துள்ளது. எனினும், விஷேடமான சோதனை நடவடிக்கைகளில் நியதிச்சட்ட செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொள்வதற்கு தேவையான எண்ணிக்கையில் CAASL உடன் பணிக்கமர்த்தப்பட்ட தகுதி வாய்ந்த குழுஐள களின் பற்றாக்குறை காரணமாக, ஒதுக்கீடு செய்யப்பட்ட பறப்புச் செயற்பாட்டுப் பரிசோதகர்கள் (DFOIs) பணிக்கு அமர்த்திக் கொள்வதற்கான செயற்பாடொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. DFOI ஒருவர் ஒரு விமான சேவைச் செயற்பாட்டாளராகவோ அல்லது பரிசோதகர் ஒருவரின் கடமைகளை முன்னெடுப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவான பறப்பு அனுபவத்தினையும் மற்றும் கணிசமான பறப்புச் செயற்பாட்டுப் பின்னணியினையும் கொண்ட தகுதிவாய்ந்த நபர்களாகவோ காணப்படலாம். DFOI ஒருவர் தேவைப்படும் போது அல்லது தேவையான நேரத்தில் CAASL இன் சார்பில் அல்லது அதற்கு குறிப்பிடப்பட்ட நியதிச்சட்ட கடமைகள் அல்லது செயற்பாடுகளை முன்னெடுக்க பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரம் CAASL இனால் வழங்கப்படும்.

## தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதி அமுலாக்கல் நியமங்கள் 035 இன் வழங்குகை

“சிவில் விமானப் போக்குவரத்துடன் தொடர்புடைய பாதுகாப்பு மற்றும் அல்லது தற்காப்புத்தன்மை விடயங்களுடன் தொடர்புபட்ட அனுமதிப்பத்திரங்கள், தரப்படுத்தல்கள், அல்லது சான்றிதழ்களை வைத்திருக்கும் நபர்களால் மதுபானம் அல்லது உளவியற் செயற்பாட்டு நிகழ்வுகளை உருவாக்கும் பயன்பாடுகளைத் தவிர்த்தல்” மீதான அமுலாக்கல் நியமங்கள் 2014 யுலையில் பணிப்பாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்டன. இந்த உண்மை ஆவணமானது ஒரு நியதிச்சட்ட void existed thus far ஆகவும் வான் போக்குவரத்தின் பாதுகாப்பு மற்றும் தற்காப்பை மேம்படுத்த உதவிபுரியும் ஆவணமாகவும் கோவைப்படுத்தப்படுகின்றது.

இவ் ஆவணத்திற் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளானவை வானூர்தியில் அல்லது வேறு ஏதாவது ஏலவெநவவைஉ உபகரணத்திலான பயிற்சி உள்ளடங்கலான சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அல்லது தற்காப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தாலோ அல்லது வேறு ஏதாவது ஒப்பந்தத்திற் கையொப்பமிட்ட நாட்டினாலோ வழங்கப்பட்ட அல்லது செல்லுபடியாக்கப்பட்ட உரிமத்தினை அல்லது தரத்தினை அல்லது சான்றிதழை வைத்திருக்கும் ஒவ்வொரு விமானப் போக்குவரத்து ஆவண சொந்தக்காரர்களுக்கும் பிரயோகிக்கப்படும் விஷேட நிபந்தனைகளாக மதிப்பளிக்கப் படுகின்றன.

## கணனி மயப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திர வழங்குகை முறைமையின் அமுலாக்கம்

அனுமதிப்பத்திரங்கள் மற்றும் CAASL ஆகிய இரு சாராருக்கும் நன்மைபயக்கக் கூடியதாக,

விமானி அனுமதிப்பத்திரங்கள், வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திரங்கள், வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர் அனுமதிப்பத்திரங்கள், மற்றும் வானறை உறுப்பினர் சான்றிதழ்கள் என்பனவற்றின் வழங்குகை மற்றும் புதுப்பித்தல்களுக்கான தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியில் புதியதொரு கணனி மயப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திர முறைமை செயற்படுத்தப்பட்டது.

புதிய கணணியுடன் நேரடித் தொடர்பு முறைமையில், விண்ணப்பதாரியொருவர் CAASL இற்கு வருகை தராமல் விண்ணப்பமொன்றினை கணணியுடன் நேரடித் தொடர்பு மூலமாக சமர்ப்பித்துக்கொள்ள முடியும். பிரத்தியேகக் கோவை உருவாக்கப்பட்டவுடன், CAASL உடன் பின்னரான அனைத்துத் தொடர்புகளுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதான பிரத்தியேகமான குறியீட்டு இலக்கமொன்றினை விண்ணப்பதாரி பெற்றுக்கொள்வார். குறித்த விண்ணப்பதாரி கணணியுடன் நேரடித் தொடர்பு மூலம் தனது சொந்த வசதிக்கேற்ப கணணியுடன் நேரடித் தொடர்பு மூலமாக தனது பிரத்தியேகக் கோவை இனைப் பார்ப்பதற்கு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என்பதுடன், தனது சொந்தத் தகவல்களை மீளச் சமர்ப்பிப்பது தேவையற்றதொன்றாகக் கொள்ளப்படுகின்றது. புதுப்பித்தல் அறிவிப்பு மற்றும் அனுமதிப்பத்திரத்தினை மீளப் புதுப்பித்துக் கொள்வதற்கான முன்கூட்டிய ஞாபகப் படுத்தல்கள் தன்னிச்சையாகச் செயற்படுத்தப்படுகின்றது. குறித்த முறைமையானது எந்த நேரத்திலும் விண்ணப்பப்படிவத்தின் நிலையினை இனங்கான அனுமதிக்கின்றது.

## புதிய பயிற்சியளித்தற் பாடசாலைகளினைச் சான்றுப்படுத்தல்

குறித்த வருடத்தில், பறத்தற் பயிற்சியளித்தற் பாடசாலையொன்று சான்றுப்படுத்தப்பட்டதுடன், மேலும் இரண்டு பாடசாலைகள் சான்றுப்படுத்தற் செய்முறைக்கு உட்படுத்தப்பட்டன.

இது தொடர்பில், பறத்தற் பயிற்சியளித்தற் பாடசாலை அனுமதிப்பத்திரமானது தனிநபர் விமானி அனுமதிப்பத்திரம், வர்த்தக விமானி அனுமதிப்பத்திரம், உபகரண தரப்படுத்துகை, உதவிப் பறத்தல் வழிப்படுத்துனர் தரப்படுத்துகை, மற்றும் மிதக்கும் வானூர்தி தரப்படுத்துகை என்பனவற்றின் வழங்குகைக்கான பறத்தற் பயிற்சியளிப்புக்களை நடாத்துவதற்கு மிலேனியம் gp(f)ளைட் அக்கடமி (MFA) க்கு வழங்கப்பட்டது. பெ(f)யார்வேய்ஸ் gp(f)ளைட் அக்கடமி (FAA) இன் சான்றுப்படுத்தற் செய்முறையானது 2014 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், தளப் பாடசாலை வசதிகளின் சோதனை மற்றும் முக்கிய பதவிநிலைதாரருக்கான அனுமதி என்பன நிறைவடைந்துள்ளன. சதேன் ஏசியேஷன் சேர்வீஷஸ் (SAS) வகைத்தரப்படுத்தல் பயிற்சியளித்தல் நிறுவனமொன்றினை உருவாக்கிக் கொள்வதற்கு விண்ணப்பப்படிவத்தினை அனுப்பியிருந்ததுடன், அதற்கான முறைசார் கூட்டமும் நடாத்தப்பட்டது.

## பறத்தற் பயிற்சியளித்தற் பாடசாலைகள் விமானப் போக்குவரத்துப் பயிற்சியளித்தல் அமைப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட வைத்திய நிலையங்கள் மீதான சோதனை நடவடிக்கைகள்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பரப்பெல்லையானது CAASL ஆல் 2014 இல் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகள் ஐந்து (05) செயற்பாட்டு பறத்தற் பாடசாலைகள் மற்றும் ஒரு பறத்தல் வழிகாட்டுநர் செய்முறை பயிற்சியாளர், சான்றுப்படுத்துகை செய்முறைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு பறத்தற் பயிற்சியளித்தற் பாடசாலை, இரண்டு விமானப் போக்குவரத்து பயிற்சியளித்தல் அமைப்புக்கள் மற்றும் தனிநபர் அனுமதிப்பத்திர மருத்துவப் பரிசோதகர்கள், மற்றும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மூன்று ஒதுக்கீடு செய்யப்பட்ட வைத்தியசாலைகள் என்பவற்றினை உள்ளடக்குகின்றது.

## மருத்துவ பரிசோதனைகள்/ மருத்துவச் சபைக் கூட்டங்கள்

மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் விமானிகளுக்கு, வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர்களுக்கு, மற்றும் வானறைப் பறப்பு உறுப்பினர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் மற்றம் சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு 179 ஆரம்ப மருத்துவப் பரிசோதனைகளும் 793 மீண்டெழும் மருத்துவப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. வானியல் மருத்துவச் சபையானது மருத்துவ தராதரங்களுடன் தொடர்புபட்ட எல்லை விடயங்களை மீள ஆராய்ந்து கொள்வதற்கு இவ் வருடத்தில் நான்கு தடவைகள் கூடியிருந்தன.

### ஒதுக்கீடு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுடனான ஒப்பந்தம்

CAASL ஆனது மருத்துவப் பரிசோதனைகளையும் மற்றும் வெளியிலிருந்து பெறப்பட வேண்டிய மருத்துவச் சோதனைகளையும் விமானிகள், வான்நெரிசற் கட்டுப்பாட்டாளர்கள், மற்றும் வானறை பறத்தல் உறுப்பினர்களுக்கு மேற்கொள்வதற்கென டேடன்ஸ் வைத்தியசாலை, ஆசிறி சேயிக்கல் வைத்தியசாலை, ஹேமாஸ் வைத்தியசாலை, மற்றும் லங்கா வைத்தியசாலை என்பனவற்றுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை புதுப்பித்துக் கொண்டது. மேலும் CAASL வரையறுக்கப்பட்ட சென்றல் வைத்தியசாலையுடன் புதிய ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக் கொண்டதுடன், வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படவேண்டிய சேவைகளை வழங்கிக் கொள்வதற்கு ஒதுக்கீடு செய்துகொள்ளப்பட்ட வைத்தியசாலையொன்றாக நியமித்துள்ளது.

### சிவில் விமானப் போக்குவரத்து மருத்துவப் பரிசோதனைகளுக்கான புதுப்பித்தற் பயிற்சியளிப்பு

தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியின் வானியல் மருத்துவ நிலையத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட மூன்று சிவில் விமானப் போக்குவரத்து மருத்துவப் பரிசோதகர்கள், தனிநபர் அனுமதிப்பத்தர மருத்துவப் பரிசோதகர்களுக்கான சீரான இடைவேளையில் முன்னெடுக்கப்பட வேண்டியதான புதுப்பித்தற் பயிற்சியளித்தற் தேவைப்பாடுகளை ISAM அமைப்பால் ஒன்றுபடுத்தப்பட்டு பெங்களூரில் இந்திய வான்வெளி மருத்துவ சங்கத்தினரின் 54வது மாநாட்டில் பங்குபற்றினார்கள்.

### புதிய அனுமதிப்பத்திர வழங்குகைகள்

CAASL குறித்த வருடத்தில் 225 விமானிகளுக்கான அனுமதிப்பத்திரங்களையும், 12 வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர்களுக்கான அனுமதிப்பத்திரங்களையும், 32 வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திரங்களையும், 01 பறத்தற் செயற்பாட்ட உத்தியோகத்தினருக்கான அனுமதிப்பத்திரத்தினையும், மற்றும் 77 வானறை பறத்தல் உறுப்பினர்களுக்கான சான்றிதழையும் வழங்கியிருந்தது.

### வெளிநாட்டு விமானிகளை ஆட்சேர்த்தல்

ஒவ்வொரு விடயங்களின் தேவைகளையும் மதிப்பீடு செய்து கொண்ட பின்னர் வெளிநாட்டு விமானிகளை ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதற்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான சேவைகளுக்கு இருபத்திநான்கு அனுமதிகள் CAASL இனால் வழங்கப்பட்டன.

### மாலைதீவில் விமானி அனுமதிப்பத்திர நிலையமொன்றினை அமைத்தல்

மாலைதீவு சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் (CADM) சார்பில் (இது பின்னைய காலங்களில் மாலைதீவு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (MCAA) என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. CAASL இன் தனிநபர் அனுமதிப்பத்திரப் பகுதியால் விமானி அனுமதிப்பத்திர அறிவியற் பரீட்சைகளை நடாத்துவதற்கு CAASL இற்கும் CADM இற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

2014 இல், CAASL ஆனது மாலைதீவில் நடாத்தப்படும் விமானி அனுமதிப்பத்திரப் பரீட்சைகளில் தகுதிவாய்ந்த மாணவர்கள் தோற்றுவதற்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, தற்போதைய சேவைகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கு மாலைதீவு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை விருப்பந் தெரிவித்திருந்தது.

இதன் பிரகாரம், CAASL இணையத்தளம் மூலமான வினாத்தாள்களினை விநியோகிப்பதன் மூலம் மாலைதீவின் கென் தீவில் அவ்வாறானதொரு செய்முறையினை அமுலாக்கஞ் செய்வதற்கும் இணக்கங் காணப்பட்டது.

MCAA ஆனது கென் தீவிலுவுள்ள பரீட்சை நிலையத்தின் பரீட்சை மேற்பார்வைக்கு பொறுப்பாகக் காணப்படும் அதேவேளை, CAASL ஆனது மாணவர்களுக்குப் பரீட்சை வினாத்தாள்களை நிர்வகித்தல், முகாமை செய்தல், மற்றும் விநியோகித்தல் போன்றனவற்றிற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இந்தப் புத்துருவாக்கலானது அயல் நாடுகளுக்கிடையிலான விமானப் போக்குவரத்துப் பரீட்சையின் விருத்திக்கான CAASL இன் தந்திரோபாயத்தினை வலுப்படுத்துவதுடன், இது மேலதிக வருமானம் மற்றும் CAASL இன் எல்லை மீறியதான தன்நம்பிக்கை மற்றும் இயலளவினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## வான்தகைமைப் பகுதி

### தொடர்ச்சியான வான்தகைமை

CAASL ஆனது ஒன்பது எயார்பஸ் A320, ஒன்பது எயார்பஸ் A330 மற்றும் 06 எயார்பஸ் A340 என மொத்தமாக 24 வானூர்திகளை தன்னகத்தே கொண்டு செயற்பட்டு வரும் சிறிலங்கன் எயார்லைன்ஸின் பராமரிப்புக்கள் மீது தேவையான சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதற்கு அப்பால், மூன்று எயார்பஸ் A320 வானூர்திகளை தன்னகத்தே கொண்டு செயற்பட்டு வரும் மிஹின் லங்கா மீதும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தது. CAASL ஆனது 2014 இல் 14 ஆரம்ப வான்தகைமைச்

சான்றிதழ்களையும் 52 புதுப்பித்தல் வான்தகைமைச் சான்றிதழ்களையும் வழங்கியிருந்தது. மேலும், உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் கம்பனிகள் மீதும்சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

## வானூர்திப் பதிவு

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில், CAASL ஆனது 16 வானூர்திகளுக்கு ஆரம்பப் பதிவுகளை வழங்கியிருந்ததுடன், 54வானூர்திகளுக்கான பதிவுகளை புதுப்பித்துக்கொண்டது. மேலும், மூன்று வானூர்திகளின் உரிமையானது வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட்டின் வான் செயற்பாட்டாளர் சான்றிதழின் கீழ் செயற்படுத்துவதற்கு உரிமையாளரின் வேண்டுகோளின் பெயரில் மாற்றீடு செய்யப்பட்டது.

## பாதுகாப்பு மேற்பார்வை

அனுமதிக்கப்பட்ட ராம்ப் சோதனை அட்டவணைக்கிணங்க, 2014 இல் 184 ராம்ப் சோதனைகளும், 45 இணைந்த சோதனைகளும் முன்னெடுக்கப்பட்டன. மொத்தமாக, 147 குறைகள் இந்த ரம்ப் சோதனையின் போது அடையாளங்காணப்பட்டதுடன், உடனடிச் சீராக்கங்களுக்காக குறித்த செயற்பாட்டாளர்களுக்கு அவை தொடர்பில் அறிவிக்கப்பட்டன.

## வானூர்தி பராமரிப்பு நிறுவனங்கள்

2014 இல், பத்து வானூர்தி பராமரிப்பு நிறுவனங்களுக்கான ஆரம்ப அனுமதிகள் தேவைப்பட்ட மதிப்பீட்டுச் செயற்பாடுகளை மேற்கொண்ட பின்னர் வழங்கப்பட்டதுடன், 54 வெளிநாட்டு தள மற்றும் தொடர் பராமரிப்பு நிறுவனங்களுக்கும் 13 உள்நாட்டு பராமரிப்பு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

## மூன்றாம் நபர் பராமரிப்பு வேலை

பராமரிப்பு வசதிகள்சோதனையின் பின்னர், CAASL ஆனது இலங்கைக்கும் மற்றும் இலங்கையிலிருந்தும் வானூர்திகளை செயற்படுத்துவதற்கு வெளிநாட்டு விமான சேவைகளுக்காக மூன்றாம் நபர் பராமரிப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எமிரேற்ஸ் எயார்லைன்ஸிற்கும், ஜெற் எயார்வேய்ஸிற்கும் அனுமதிகள் வழங்கியிருந்தது.

## பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரப் பரீட்சை

இரண்டு AML பரீட்சைகள் ஜவுன் மற்றும் டிசம்பர் 2014 இல் நடாத்தப்பட்டன. இதில் முறையே 228 மற்றும் 293 பரீட்சார்த்திகள் தமது தெரிவு செய்யப்பட்ட பரீட்சைப் பாடங்களுக்காக தோற்றியிருந்தனர்.

## வானூர்திப் பாகங்களை இறக்குமதி/ ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிகள

வான்தகைமைப் பகுதியின் சிபார்சுகளுக்கமைய DGCA வானூர்திப் பாகங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை அனுமதித்திருந்தார். மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், பி(f)ற்ஸ் ஏவியேஷனின் 35 விண்ணப்பங்கள், மிலேனியம்.
எயார்லைன்ஸின் 22 விண்ணப்பங்கள், ஏசியன் ஏவியேஷன் சென்ரரின் 05 விண்ணப்பங்கள், தயா ஏவியேஷனின் 05 விண்ணப்பங்கள், கொஸ்மோஸ் ஏவியேஷன் சேவைகளின் 33 விண்ணப்பங்கள், ஸ்க்கை லைன் ஏவியேஷனின் 08 விண்ணப்பங்கள், ஓப்பிண் ஸ்கைஸின் 45 விண்ணப்பங்கள், செணொக் ஏவியேஷனின் 24 விண்ணப்பங்கள், மற்றும் சினமன் எயாரின் 55 விண்ணப்பங்களுக்கு சிபார்சுகள் வழங்கப்பட்டன.

## விஸாவுக்கான பரிந்துரைகள்

CAASL ஆனது இலங்கையிற் பணியாற்றுவதற்கு பதவிநிலைப்படுத்தப்பட்ட அல்லது பணிக்கமர்த்தப்பட்ட வெளிநாட்டுத் தளப் பொறியியலாளர்களுக்கான தரையிறக்கல் புறக்குறிப்பு மற்றும் குடியுரிமை விஸாவுக்கான சிபார்சினை வழங்கியிருந்தது. மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட காலத்தில், 28 தளப் பொறியியலாளர்களுக்கும், 72 பராமரிப்புப் பயிற்சி பெறும் மாணவர்களுக்குமான சிபார்சினை CAASL வழங்கியிருந்தது.

# கூட்டாண்மைப் பிரிவு



## வான் போக்குவரத்து மற்றும் சட்ட விவகாரங்கள் பகுதி

இலங்கையின் வான் போக்குவரத்துத் துறையானது 2014 காலப்பகுதியில், பயணிகள், சரக்குகள் மற்றும் வானூர்தி நகர்வுகள் என்பன அனைத்திலும் சாதகமானதொரு வளர்ச்சியொன்றை அனுபவமாகக் கொண்டுள்ளது. மேலும் இலங்கையானது அதனது இருதரப்பு வான் சேவைகள் ஒப்பந்தங்களில் முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது.

## விமான சேவை செயற்பாடுகள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில்,மூன்று வெளிநாட்டு வான் செயற்பாட்டாளர்கள் தவிர,கடந்த ஆண்டில் செயற்பட்ட ஏனைய அனைத்து வெளிநாட்டு விமான சேவைகளும் இலங்கைக்குச் செயற்பாடுகளை தொடர்ந்திருந்த அதேவேளை ஏப்ரலில் றொற்றானா ஜெற் மற்றும் அபுதாபி எனும் தளக் காவுனர்கள் தமது செயற்பாடுகளை கொழும்பு மற்றும் மத்தள எனும் இடங்களுக்கு ஆரம்பித்தன.

இவ் வருடத்தில், எமிரேற்ஸ், பிரிட்டிஷ் எயார்வேய்ஸ், எதிகற் எயார்வேய்ஸ், கட்டார் எயார் வேய்ஸ், மற்றும் கொரியன் எயார் என்பன போன்ற உலகின் முதற்தர முழுமையான சேவைகளை வழங்கும் விமான சேவைகள் சிறிலங்கன் எயார்லைன்சுடன் இணைந்து இலங்கையிற் பயணிகள் செயற்பாடுகளுக்குக் கணிசமான பங்களிப்பினைச் செய்திருந்தன.

எயார் ஏசியா ஓ, எயார் அரேபியா, பி(f)ளை டுபாய், மற்றும் ஸ்கைப் யெற் என்பன மிஹின் லங்கா விமான சேவையுடன் இணைந்து இலங்கையின் விமானப் போக்குவரத்துத் துறைக்கு அதிகளவான பயணிகள் அசைவினை வழங்கி, இலங்கையின் செலவுச் சிக்கன சேவையானராக தமது செயற்பாடுகளைத் தொடர்ந்தன. மேலே கூறப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு மேலதிகமாக, லொட் பொலிஷ் (போலந்து - வாசோவிலிருந்து), ஒரேன்பேக் ( ரஷ்யா – மொஸ்கோவிலிருந்து), ரான்ஸ் ஏறோ (ரஷ்யா - மொஸ்கோவிலிருந்து), ரவல் சேர்வீஸ் (Czech republic- பிராகூனிலிருந்து), விம் எயார்லைன்ஸ் ( ரஸ்யா – மொக்ஸிகோவிலிருந்து), மற்றும் ரவல் சேர்வீஸ் பொல்ஹா (போலந்து - வாசோவிலிருந்து) சுற்றுலா அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாட்டாளர்களாக 2013/2014 IATA குளிர் காலப்பகுதியில் இலங்கைக்கு அவர்களது செயற்பாடுகளை ஆரம்பித்தது. விம் எயார்லைன்ஸ ானது ஒன்பது ஆண்டுகளின் பின்னர் 2013/2014 IATA குளிர் காலப்பகுதியில் இலங்கைக்கான அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாடுகளை மீள ஆரம்பித்தது.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், றோயல் யோர்தான் (யோர்தான் - அமெனிலிருந்து), எயார் அந்தியா எக்ஸ்பிரஸ் (இந்தியா – சென்னையிலிருந்து), மற்றும் மோல்டீவியன் எயார்லைன்ஸ் (மாலைதீவிலிருந்து) எனும் அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர்கள் இலங்கைக்கான தமது செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்தன.

குறித்த வருடத்தில், அனேகமான முன்னணி சர்வதேச கணணி மூலமான நேரடிச் செயற்பாட்டாளர்கள் தமது வான் சேவை உடன்படிக்கைகளின் பிரகாரம் அதே பங்காள விமான சேவைகளுடன் மற்றும் மூன்றாந் தரப்பு விமான சேவைகளுடன் இலங்கைக்கான தமது பகிர்வு விமான சேவைகளை கணிசமான அளவு அதிகரித்திருந்தன. இது பயணிகளுக்கு இலங்கையிலிருந்து அல்லது இலங்கைக்கான மையக் கிடைப்பனவுகளின் அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. மேலும், இது உலகின் பிரபல்யமற்ற நகரங்களை அறிவதற்கும் தொடர்புபடுத்துவதற்கும் கண்கூடானதொன்றாக அமைந்திருந்தது.
சிறிலங்கன் எயார்லைன்ஸ், எதிகற் எயார்வேய்ஸ், மலேசியா எயார்லைன்ஸ், மற்றும் எமிரேற்ஸ் எனபன மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், செயற்பாட்டுக் காவுனர்களாக, பகிர்வு செயற்பாடுகளில் அதிகளவிலான செயற்பாடுகளை மேற்கொண்டு முதற்தர online விமான

சேவைகளாக விளங்கின.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் மே மாதத்தில் "ஓர் உலகம்" விமான சேவை அணியில் தன்னை இணைத்துக் கொண்டதுடன், அவர்களது பாதை வலையமைப்பினை அவ் அணியின் ஏனைய பங்காள விமான சேவைகளுடன் இணைந்துள்ள இக் குழுவுடன் பல்வேறு புதிய தரிப்பிட மையங்களை இணைக்கும் வகையில் விரிவுபடுத்திக் கொண்டது. மேலும், சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஆனது சீனா- குன்மங் (KMG) க்கு அட்டவணைப்படுத்திய செயற்பாடுகளையும், சீனா – சொனங்கிங் இற்கு அட்டவணைப்படுத்தாத செயற்பாடுகளையும் ஆரம்பித்தது. சொனங்கிங் செயற்பாடானது 2015 மார்ச் வரை தொடரப்படும். இலங்கையைத் தளமாகக் கொண்ட ஒரேயொரு சிக்கனச் செயற்பாட்டாளரான மிஹின் லங்கா புதிய தரிப்பிட மையமொன்றான பாகிஸ்தான் - லாகூர் (LHE) இற்கு தனது செயற்பாடுகளை ஆரம்பித்ததுடன், மேலும் இது பல்வேறு தரிப்பிட மையங்களுக்கு சிறிலங்கன் எயார்லைன்சுடன் அதனது பகிர்வு விமான சேவைச் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

MRIA இற்கு வருகை மேற்கொண்ட மற்றும் MRIA இருந்து புறப்பட்ட சர்வதேச பயணிகளின் மொத்த எண்ணிக்கை முறையே 10,837 மற்றும் 9,637 ஆகஅமைந்திருந்தன. 2014 இல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் (மெற்றிக் தொன்களில்) முறையே 4 மற்றும் 65 ஆகக் காணப்பட்டன.

2014 இல்இல் ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகள் 115,400 (மெற்றிக் தொன்)நிறையுடைய மொத்த சரக்குகளில்,சிறிலங்கன் எயார்லைன்ஸ்53,584 மெற்றித்தொன்களை கொண்ட அதனது சந்தை பங்கில் நாற்பத்தாறு (46%) வீதத்தை கொண்ட ஏற்றுமதி செய்திருந்தது. இறக்குமதிக்கென கையாளப்பட்ட சரக்குகள் தொடர்பில், மொத்தமான 77,040 மெற்றிக் தொன் சரக்குகளில், சிறிலங்கன் எயார்லைன்ஸ் 42,412 மெற்றிக்தொன்களை, அதாவதுமொத்த சந்தைப் பங்கில் ஐம்பத்தைந்து (55%) வீதமானவற்றை கையாண்டிருந்தது.

## இடைத்தங்கற் பயணிகள்

BIA ஆனது பிராந்தியத்தில் மையமான விமான நிலையமொன்றாக விருத்திசெய்யப்பட இருப்பதால், இவ் விமான நிலையத்தினூடாக பிரயாணிகள் செய்யும் இடைத்தங்கற் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொள்வதற்கு முன்னேற்றமாவதற்கும், விருத்தி செய்வதற்குமான மன்னியமான பிரதேசமொன்றாக அமையும். 1,194,270 பயணிகள் இடைத்தங்கற் பயணிகளாக BIA இல் காணப்பட்டனர். சிறிலங்கன் விமான சேவையானது இவ் இடைத்தங்கற் பயணிகளில் 984,532 பேரைக் காவுகைக்குட்படுத்தியதுடன் இது BIA இன் மொத்த இடைத்தங்கற் பயணிகளில் 82% ஆகும்.

| | பயணிகள் | | | சரக்குகள் (மெற்றிக் தொன்களில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | வருகை | புறப்பாடு | மொத்தம் | ஏற்றுமதி | இறக்குமதி | மொத்தம் |
| 2013 | 3,690,047 | 3,621,822 | 7,311,842 | 119,447 | 71,776 | 191,224 |
| 2014 | 3,893,400 | 3,926,447 | 7,819,847 | 115,400 | 77,040 | 192,440 |

## பயணிகள் மற்றும் சரக்குகளின் நகர்வு

2014 காலத்தில் பயணிகள் மற்றும் சரக்குகளின் நகர்வுகளில் குறிப்பிடத் தக்கவாறு முன்னேற்றகரமான பதிவுகள் பதிவுசெய்யப்பட்டன. BIA இற்கு வருகை மேற்கொண்ட மற்றும் BIA இருந்து புறப்பட்ட பயணிகள் முறையே 3,893,400 மற்றும் 3,926,447 ஆக அமைந்திருந்தன. அப் பயணிகள் தொடர்பின் சிறிலங்கன் எயார்லைன் ஸின் சந்தைப் பங்கானது 2,085,698 மற்றும் 2,083,694ஆக அமைந்ததுடன் இது முறையே ஐம்பத்து நான்கு (54%) மற்றும் ஐம்பத்தைந்து (53%) வீதங்களைக் கொண்டிருந்தது.

## பொது விமானப் போக்குவரத்து அபிவிருத்தி

2014 இல் வெப்பவாயு பலூன் செயற்பாடுகள் வெற்றிகரமான செயற்பாடொன்றாக நிறைவுபெற்றது. பலூன் செயற்பாடுகள் தம்புள்ள மற்றும் அகுணுஹல போன்ற பிரதேசங்களில் அப் பிரதேசங்களின் சுற்றுலாத்துறையினை மேப்படுத்தும் ஒரு காரணியாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

2011 இல் பரா மோட்டரிங் செயற்பாடானது இலங்கையில் வரையறுக்கப்பட்ட ஸ்கை கிளப் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் வருடத்தில், கொக்கல, கற்பிட்டி, புத்தளம், பென்தோட்டை மற்றும் முந்தல் ஆகிய

பிரதேசங்களில் வலுவூட்டப்பட்ட பரா மோட்டரிங் செயற்பாடுகளை ஸ்கை கிளப், சவுத் ஏசியா ஏவியேஷன் அக்கடமி, கடல் அட்வென்ஷ கிளப், மற்றும் நீர்கொழும்பு ஏறோ கிளப் என்பன உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றன.

கட்டுக்குரிந்த வான்பரப்பிலிருந்து உள்நாட்டவர்களுக்குச் சொந்தமான இரண்டு அல்ரா லைட் வானூர்திகள் தனியார் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தன. ரிமோட் கொன்றோல் வானூர்திச் சங்கங்கள் நீர்கொழும்பு, கடவத்தை, கட்டுக்குரிந்த, மற்றும் பாணந்துறை ஆகிய அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் பறப்புக்களை மேற்கொண்டிருந்தன.

## உள்நாட்டு விமானப் போக்குவரத்து

நாட்டிலுள்ள அனுமதிக்கப்பட்ட நீர் விமானத்தளங்களில் உள்நாட்டு நிலையான இறக்கைகளைக் கொண்ட அட்டவணைப்படுத்தப்பட்ட பயணிகள் செயற்பாட்டாளர்களாக சினமன் எயார் தொழிற்பட்டது. 2014 வரையில் பி(f)ற்ஸ் ஏவியேஷன் இரத்மலானைக்கும் யாழ்ப்பாணத்திற்கிடையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. வரையறுக்கப்பட்ட தயா ஏவியேஷன் லிமிட்டெட் குறித்த ஆண்டில் தமது தனிப்பட்ட மற்றும் வர்த்தக நிலையான இறக்கைச் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

2004 ஜனில் ஹெலிகொப்டர் செயற்பாடுளை ஆரம்பித்த டெக்கான் ஏவியேஷன் (லங்கா) லிமிட்டெட் என சாதாரணமாகத் தெரிந்து கொண்ட மிலேனியம் எயார்லைன்ஸ் நாட்டின் வேறுபட்ட மையங்களுக்கு செயற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்தது. குறித்த ஆண்டில் கொஸ்மோஸ் ஏவியேஷன் மற்றும் செனொக் ஏவியேஷன் என்பன குறித்த வருடத்தில் தமது ஹெலிகொப்டர் செயற்பாடுகளை முன்னெடுத்தது. IWS ஏவியேஷன் 2014 ஒக்டோபரிலிருந்து தனது உள்நாட்டு ஹெலிகொப்டர் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது.

சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் ஆனது கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களுக்கிடையில் உள்நாட்டு நிலையான இறக்கைகளைக் கொண்ட அட்டவணைப்படுத்தப்பட்ட பயணிகள் சேவைகளை ஆரம்பித்திருந்தது.

கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களுக்கிடையில் சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் பறப்புக்களை முன்னெடுப்பதன் காரணமாக 2013 இல் 5,574 ஆகக் காணப்பட்ட உள்நாட்டுப் பயணிகளின் நகர்வானது 2014 இல் 26,909 ஆன சாதகமான வளர்ச்சியொன்றினை நிலையான இறக்கைகளைக் கொண்ட வானூர்தி செயற்பாடுகளை உள்நாட்டில் காண்பித்திருந்தது. உள்நாட்டு ஹெலிகொப்ரர் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் எவையும் பதிவாக்கப்படவில்லை என்பதுடன், பிரயாணம் செய்த பயணிகள் எண்ணிக்கையானது 2013 இல் 1,984 ஆகவும், 2014 இல் 1,657 ஆகவும் காணப்பட்டன.
உள்நாட்டு விமானப் போக்குவரத்து செயற்பாடுகளின் சுருக்கமானது பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

## பிரயாண முகவர்கள்

### உள்நாட்டு விமானப் போக்குவரத்து செயற்பாடுகளின் சுருக்கமானது பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| வானூர்தி வகை | மொத்தப் பறப்புகளின் எண்ணிக்கை | | மொத்தப் பிரயாணிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | **2014** | **2013** | **2014** | **2013** |
| நிலையான இறக்கைகள் (தரை) | 1224 | 1842 | 21126 | 4239 |
| நிலையான இறக்கைகள் (மிதப்பு விமானம்) | 1629 | 316 | 5783 | 1335 |
| ஹெலி கொப்ரர் | 443 | 351 | 1659 | 1984 |
| பலூன் | 135 | 156 | 945 | 1019 |

1992 இன் 55 ஆம் இலக்க வான்செலவு (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம், இலங்கையில் உள்ள அனைத்து பிரயாண முகவர்கள் மற்றும் ஏனைய வான் போக்குவரத்துச் சேவை வழங்குனர்கள் CAASL இனால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டப்படுவதுடன், அவ் வியாபாரத்தை தொடர்வதற்கு வருடாந்த அடிப்படையில் அவற்றை புதிப்பித்து கொள்ளவும் வேண்டப்படுகின்றனர்.

## 2014 இன் இறுதியில் CAASL

இனால் ஐந்நூற்று எண்பத்செட்டு (588) வான் போக்குவரத்துச் சேவை வழங்குநர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், அனுமதிப்பத்திரங்களின் பட்டியலானது மாதாந்தம் இணையத்தளத்திற் பதிவேற்றஞ் செய்யப்படுகின்றது.
வான் போக்குவரத்துத் துறையினை ஒழுங்குபடுத்தல் பயண முகவர்களின் அனுமதிப்பத்திரச் செய்முறையின் ஒரு பகுதியாக மதிப்பீட்டுக் கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. இம் மதிப்பீட்டுக் கூட்டத்தில் ஊழியர்களின் பொருத்தப்பாடுகள் மதிப்பிடப்பட்டன. மேலும், எதிர்கால முகாமையானது குறித்த துறை மற்றும் பொதுமக்கள் தொடர்பில் பயண முகவர்களின் பொறுப்புக் கூறல் என்பன பற்றிப் போதிக்கப்படுகின்றது.

## வான் போக்குவரத்துத் துறை/வர்த்தகத் துறை என்பவற்றில் ஆர்வமுள்ளவர்களுடனான கூட்டங்கள்

ஒழுங்கமைப்பாளர் கூட்டங்கள் விமான சேவைப் பிரதிநிதிகள் சபை, விமான சேவைப் பிரதிநிதிகளின் இலங்கைக்கான சங்கம், இலங்கை பயண முகவர் சங்கம், IATA முகவர் சங்கம் மற்றும் வர்த்தகத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் என்பன அடங்கலான துறைசார் நிறுவனங்களுடன் வான் போக்குவரத்துக் கைத்தொழிலினை சாதகமாக விருத்தி செய்யும் பொருட்டு முன்னெடுக்கப்பட்டன.

## வான் மூலமான சர்வதேச காவுநர்களுடனான குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் தனித்துவம் மீதான மொன்றியல் உடன்பாட்டின் திருத்தங்கள்

வெகுமதியின் பொருட்டு விமான சேவைகளால் மேற்கொள்ளப்படும் பயணிகள், பொருட்கள், மற்றும் சரக்குகளின் சர்வதேச காவுகை தொடர்பான விதிகளுக்கான சர்வதேசக் கூட்டணியினரால் உருவாக்கப்பட்ட 1999 இன் மொன்றியல் உடன்படிக்கையினை ஏற்றுக்கொள்ள வேண்டுமான படிமுறைகள் இலங்கையால் எடுக்கப்பட்டன. "வான் சட்ட மூலமான காவுகை" என்று தலைப்பிடப்பட்ட சட்ட வரைபொன்று CAASL இன் உள்ளீடுகளின் அடிப்படையில் சட்ட வரைவாளர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டது. சட்ட வரைவாக்கத்தின் பின்னர் 2014 ஆகஸ்ட் இல் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இது அபிப்பிராயங்களுக்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உப குழுவொன்றிற்குப் பரிந்துரைக்கப்பட்டது. "வான் சட்ட மூலமான காவுகை" ஆனது 2015 இல் சட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இருதரப்பு வான் சேவை பேரம்பேசல்

CAASL ஆனது இலங்கையைப் பிரதிநிதித்துவஞ் செய்யுமொரு உறுப்பினராக கடல்கடந்த வானியல் அதிகாரம் பெற்ற நிறுவனங்களுடன் இடம்பெற்ற பல்வேறுபட்ட இருதரப்பு வான்சேவைப் பேரம்பேசல்களில் பங்குகொண்டது. அவ்வாறான ஐந்து பேரம்பேசல்கள் தனிப்பட்ட அரசாங்கங்களுடன் இடம்பெற்றன. மேலும் CAASL ஆனது 2014 நவம்பரில் இந்தோனேசியா பாலீயில் இடம்பெற்ற ICAO இன் வான் சேவைகள் பேரம்பேசல் மாநாட்டிலும் (ICON) பங்குபற்றியது. இக் கலந்துரையாடலின் பெறுபேறுகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

## இருதரப்பு அரசாங்கங்களுடன் நடாத்தப்பட்ட இருதரப்புப் பேரம்பேசல்கள்

சேபியா (பெல்கிறேற் - ஜவுன்) –முதலாவது வான் சேவை உடன்படிக்கையொன்று இலங்கைக்கும் சேபியாவிற்குமிடையில் ஆரம்பிக்கப்பட்டது. ஒப்பந்தமொன்றும் (MOU) இரண்டு அரசாங்கங்களுக்குமிடையில் இணங்கிக் கொள்ளப்பட்ட சேவைகளுக்கிணங்க ஒரு வாரத்தில் ஏழு (07) தடவைகள் வரை செயற்படுத்திக் கொள்ள இரு நாடுகளின் குறித்துரைக்கப்பட்ட விமான சேவைகளை அனுமதித்துக் கொள்வதற்கு கையொப்பமிடப்பட்டது.

## புல்கேரியா ( சோபி(f)யா– ஜீன்)

புதிய வான் போக்குவரத்து ஒப்பந்தமொன்று 1970 இல் வரையப்பட்ட முன்னைய ஒப்பந்தத்தை பதிலீடு செய்து கொள்ள உடன்படிக்கையொன்று உருவாக்கப்பட்டது. ஒப்பந்தமொன்று எந்தவித தடைகளும் இல்லாது மூன்றாம் மற்றும் நான்காம் பறத்தற் சுதந்திர நெரிசல் உரிமையினை செயற்படுத்திக் கொள்ள ஒவ்வொரு நாட்டினதும் குறித்துரைக்கப்பட்ட விமான சேவைகளை அனுமதித்துக் கொள்வதற்கு கையொப்பமிடப்பட்டது.

## போலாந்து (வாசோ – யூலை)

புதிய வான் போக்குவரத்து ஒப்பந்தமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், ஒப்பந்தமொன்று எந்தவித தடைகளும் இல்லாது மூன்றாம் மற்றும் நான்காம் பறத்தற் சுதந்திர நெரிசல் உரிமையினை செயற்படுத்திக் கொள்ள ஒவ்வொரு நாட்டினதும் குறித்துரைக்கப்பட்ட விமான சேவைகளை அனுமதித்துக் கொள்வதற்கு கையொப்பமிடப்பட்டது.

## பிறேசில் (றியோ டே ஜனேறிற்றோ– ஓகஸ்ட்)

முதலாவது வான் சேவை உடன்படிக்கையொன்று இலங்கைக்கும் பிறேசிலுக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது. கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையானது குறித்த விமான சேவைகள் செயற்படுத்தப்படும் அதே மனோபாவத்துடன் சேவைகளை மிக பொறுப்பு வாய்ந்த முறையில் முன்னெடுக்க குறித்துரைக்கப்பட்ட விமான சேவைகளை அனுமதித்துக் கொள்வதற்கான திறந்த வான் உடன்படிக்கையாக அமைந்திருந்தது.

## ஓமான் (கொழும்பு – ஒக்டோபர்)

MOU ஒன்று கையொப்பமிடப்பட்டதுடன், நெரிசல் உரிமை மீதான விரிவாக்கம் தாக்கத்திற்குட்படுத்தப்பட்டது.

## ICAN மாநாட்டில் இடம்பெற்ற இருதரப்புப் பேரம்பேசல்கள்

ICAN 2014 இல் பின்வரும் நாடுகளை இலங்கை பிரதிநிதி சந்தித்துக் கொண்டார்.

## நோடிக் குடியரசு

இணங்கிக் கொள்ளப்பட்ட அறிக்கைகள் நாடுகளுக்கிடையிலான விரிவான கலந்துரையாடலில் கையொப்பமிடப்பட்டன. இலங்கையும் நோர்வேயும் சில விடயங்களை தெளிவாக்கிக் கொள்ள நேரடிக் பிரகடனங்களை வைத்திருந்தமையால் இலங்கை மற்றும் நோர்வே/ சுவீடன்/ டென்மார்க் நாடுகளுக்கிடையில் ஏற்கனவே காணப்பட்ட உடன்படிக்கை பதிலீடு செய்து கொள்வதற்கு புதிய வான் போக்குவரத்து உடன்படிக்கையொன்றை எட்டிக் கொள்வதற்கு கலந்துரையாடல்களை மேற்கொண்டன. இரண்டு தரப்பினரும் மிகக் குறுகிய எதிர்காலத்தில் உடன்படிக்கையினை முடிவுறுத்தல் நோக்கிய செய்முறைக்கு அவர்களது விருப்பத்தினை தெரியப்படுத்தியிருந்தனர்.

## ஈரான்

இணங்கிக் கொள்ளப்பட்ட அறிக்கைகள் நாடுகளுக்கிடையிலான விரிவான கலந்துரையாடலில் கையொப்பமிடப்பட்டன. இரு தரப்பினரும் வாரமொன்றிற்கு ஏழு (7) பறப்புக்களைச் செயற்படுத்திக் கொள்ள உரிமைபெற்றுக் கொள்ள ஒவ்வொரு பகுதியினரின் குறித்தொதுக்கப்பட்ட விமான சேவைகளுக்காக இணங்கிக் கொண்டனர். மூன்றாந் தரப்பு பகிர்வு ஏற்பாடானது வர்த்தகப் பங்காளரை மேம்படுத்திக் கொள்ள குறித்தொதுக்கப்பட்ட விமான சேவைகள் அனுமதித்துக் கொள்ளும்பகுதியினருக்கிடையில் இணங்கிக் கொள்ளப்பட்டது. பகுதியினர் அட்டவணைப்படுத்தப்படாத பறப்புக்களின் செயற்பாடுகளை மேம்படுத்திக் கொள்ள இணங்கிக் கொண்டதுடன், மேலும் தமது ஆட்புல வான்பரப்பினுள் வரையறுக்கப்படாத சரக்கு பறப்புகளை அனுமதித்துக் கொள்ளலும் இணங்கிக் கொள்ளப்பட்டது.

## ஒஸ்ரியா

ஒப்பந்தமொன்று (MOU), இணங்கிக் கொள்ளப்பட்ட விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் இரண்டு அரசாங்கங்களுக்குமிடையில் கையொப்பமிடப்பட்டது. தரப்பினர் மூன்றாந் தரப்பு பகிர்வு ஏற்பாடொன்றிற்கும் திறந்த பாதை அட்டவணையொன்றிற்கும் இணங்கிக் கொண்டனர். வான் சேவை உடன்படிக்கையின் பதிப்பொன்று ஒஸ்ரியன் பிரதிநிதிகளால் இலங்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கையும் இதனை மீளாய்வு செய்து இணங்கிக் கொண்டது.

## ஹங்கேரி

ஒப்பந்தமொன்று (MOU) இரு தரப்பினருக்கும் இடையே நிகழ்ந்த கலந்துரையாடல்களை வெளிப்படுத்தி கையொப்பமிடப்பட்டது. புதியதொரு வான் சேவை ஒப்பந்தம் ஹங்கேரிக்கும் இலங்கைக்குமிடையில் ஏற்படுத்தப்பட்டது. சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா லிமிட்டெட் என்பன இலங்கையை பிரதிநிதித்துவம் செய்து வான் சேவை உடன்படிக்கையின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட சேவைகளை செயற்படுத்துவதற்கு குறித்தொதுக்கப்பட்டன. ஹங்கேரி தனது ஒதுக்கீட்டு விமான சேவையின் பெயரினை குறுகிய காலத்தில் வெளிப்படுத்தும். இரு தரப்பினரும் தமது குறித்தொதுக்கப்பட்ட விமான சேவைகளுக்காக வாராந்தம் மொத்தம் 14 பறப்புக்களுக்கு இணங்கிக் கொண்டனர்.

## ஹென்யா

ஒப்பந்தமொன்று (MOU) இரு தரப்பினருக்கும் இடையே நிகழ்ந்த கலந்துரையாடல்களை வெளிப்படுத்தி கையொப்பமிடப்பட்டது. இலங்கையானது ஏற்கனவே காணப்படும் வான் சேவை உடன்படிக்கையின் கீழ் இடைத்தங்கற் தளமாக சீசெல்ஸின் மஹி சர்வதேச விமபன நிலையத்தினை பயன்படுத்திக் கொள்ள இலங்கையின் குறித்தொதுக்கப்பட்ட விமான சேவைகளை அனுமதிக்க ஹென்யன் பிரதிநிதிக்கு ICAN 2013 கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கையினை மீளத்தெளிவுபடுத்தியது. ஹென்யா, தற்போதைய நிலையில் குறித்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளும் சூழலில் அவர்கள் இல்லை எனக் கூறியது. ஹென்யா தம்முடனான வர்த்தக உறவினை மேம்படுத்திக் கொள்ள தமது குறித்தொதுக்கப்பட்ட விமான சேவைகளுடன் பகிர்வு சேவையினை மேற்கொள்ள இலங்கை விமான சேவைகளை அழைத்திருந்தது.

## இந்தியா

இலங்கைப் பிரதிநிதி பலதடவைகள் மேற்கொண்ட வேண்டுகோளொன்றிற்கிணங்க, தற்போதைய வான் சேவை உடன்படிக்கைகளில் தரப்பினர்களுக்கிடையில் மூன்றாந் தரப்பு பகிர்வு விமான சேவை ஏற்பாடுகளின் உள்ளடங்கலை வேண்டியிருந்தார். இந்தியன் பிரதிநிதி அவ் வேண்டுகோளினை கருத்திற் கொண்டு,அது தொடர்பில் தமது நாட்டிற்கு திரும்பிச் சென்று தொடர்புபட்ட தரப்பினருடன் ஆலோசனை நடாத்திய பின்னர் அடுத்த சில மாதங்களுள் சில சாதகமான முன்னேற்றங்களை கண்டு கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

## ஜமிக்கா

ஒப்பந்தமொன்று (MOU), இரு தரப்பினருக்கும் இடையே நிகழ்ந்த கலந்துரையாடல்களை வெளிப்படுத்தி கையொப்பமிடப்பட்டது. குறித்த தரப்பினர் புதிய வான் சேவை ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டதுடன், கையொப்பமிட்டுக் கொண்டனர். இரு தரப்பினரும் தமது நாட்டுக்கென குறித்தொதுக்கப்பட்ட விமான சேவைகளின் செயற்பாட்டிற்காக திறந்த ஆகாய படையணியொன்றிற்கு இணங்கிக் கொண்டனர்.

## ஐக்கிய அரபு இராட்சியம் (UAE)

ஒப்பந்தமொன்று (MOU), இரு தரப்பினருக்கும் இடையே நிகழ்ந்த கலந்துரையாடல்களை வெளிப்படுத்தி கையொப்பமிடப்பட்டது. நெரிசல் உரிமைகளின் விரிவாக்கமொன்று விமான சேவைகளின் வேண்டுகோளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டது. இலங்கைப் பிரதிநிதி முழுமையான ஐந்தாவது பறத்தல் நெரிசல் சுதந்திரஎரிமையுடன் MRIA க்கு வரையறையற்ற பறத்தற் தடவைகளை UAE விமான சேவைகளுக்கு unilarateral வெகுமதியொன்றினை வழங்கியருந்தார். இதனை UAE பிரதிநிதி அவ் வெகுமதியினை ஏற்றுக்கொண்டார்.

## தாய்லாந்து

கீழே காட்டப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம்

(i) சிலவற்றிற்காக நிதிக்கூற்றுக்களில் மேலதிகமாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், பின்வரும் விடயங்கள் தொடர்பாக மேலதிக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- அதிகாரசபை ஸ்தாபித்தலின் சட்டரீதியான அதிகாரச் சட்டங்கள், மூலாதாரங்கள், அதிகாரசபையின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் தலைமை அலுவலகத்தின் முகவரி

- அதிகாரசபையின் தன்மை மற்றும் பிரதான தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள்

(ii) நிதிக்கூற்றுக்களில் தயாரிக்கும் போது மாற்று கணக்கீட்டு அடிப்படை (Measurement basis used in preparing the financial statement) இடையே ஒவ்வொரு உருப்படிகளுக்காக அதிகாரசபை பின்பற்றிய கணக்கீட்டு அடிப்படை மற்றும் பின்பற்றிய கணக்கீட்டு அடிப்படை

மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் 2008 ஆம் ஆண்டிலிருந்து பெறுமானத்தேய்வு விகிதம் திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 4,417,586 தொகையான மிகை ஒதுக்கீடு முன்னைய முன்னைய ஆண்டுகளுக்கு பின்னோக்கிய ரீதியில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்பாடல்லாத வருமானமாக ரூபா 87,053 தொகையான வாடகை வருமானமொன்று மீளாய்வாண்டில் உழைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ஆதனங்களில் நியாயமான பெறுமதி முதலீட்டு ஆதனங்களாக வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் வரி செலவினம் மற்றும் சபையின் கணக்கீட்டு இலாபத்திற்கிடையே தொடர்பு மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் ஓய்வூதிய நலன்கள் கணக்கு வைப்பின் போது ஓய்வூதிய நலன்திட்டம் தொடர்பான விபரமொன்று, பெறுமதி சீராக்கல் தொடர்பான விபரங்கள், தற்போதைய சேவைக்கிரயம், முதலீட்டு இலாபம் அல்லது நட்டம் (Acturial Gain or Loss) முன்னைய சேவைகள் கிரயம் போன்ற தகவல்கள் இனங்காணப்பட்டு இணக்கம் செய்யப்பட வேண்டிய முறை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் அரசின் மானியங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் பிரகாரம் நிதிச்சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்த நிலையான வைப்புக்கள், ஊழியர் கடன் மற்றும் திறைசேரி உண்டியல் அடிப்படையில் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 1,351,135,481 தொகையான வட்டி உட்படுத்தப்பட்டு அச்சொத்துக்கள் உள்ளவாறான கிரயத்தில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 முறையற்ற வெளிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் கட்டிட நிர்மாண நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 16,497,937 தொகையான மூலதன செலவினமொன்று நடைமுறையல்லாத சொத்தொன்றின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நடைமுறை வேலையாக (Working Progress ) ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக செலுத்தப்பட்ட செலவினம் விற்பனை விநியோக செலவினமாக வகைப்படுத்தப்பட்டு காண்பிப்பதற்குப் பதிலாக நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 2006 ஒக்தோபர் 09 ஆந் திகதிய பீஈடீ 39 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | அதிகாரசபையின் நான்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்களிற்கு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லையினை மீறி எரிபொருளுக்காக ரூபா 1,955,330 தொகை மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 111 (அ) பிரிவு மற்றும் 2011 இன் பாதீட்டு அறிக்கை | சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினால் அவர்களது சம்பளம் மற்றும் ஏனைய உழைப்புக்களிற்காக, உழைக்கும் போதே செலுத்தும் வரியை தமது தனிப்பட்ட சம்பளத்திலிருந்து செலுத்த வேண்டிய போதிலும், 2007 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான 07 ஆண்டுகளிற்காக ரூபா 21,219,419 |

கூட்டுத்தொகையான உத்தியோகத்தர்களினால் செலுத்த வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரித்தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை

(i) உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற 11 உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றிற்கு ரூபா 30,000 வீதம் ரூபா 3,780,000 கூட்டுத்தொகையும் மாத மொன்றிற்கு ரூபா 20,000 வீதம் 43 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 9,774,728 கூட்டுத்தொகையும் 100 உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றிற்கு ரூபா 13,250 வீதம் ரூபா 14,065,177 கூட்டுத்தொகையும் மாதாந்தம் போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்காக ரூபா 27,794,875 தொகையும் மீளாய்வாண்டிற்காக ரூபா 27,619,905 தொகையும் சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தன.

(ii) சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக எரிபொருள் எல்லைக்கு மேலதிகமாக அதிகாரசபையின் ஒரு உத்தியோகத்தருக்கு மாதமொன்றிற்கு ரூபா 50,000 வீதம் மொத்தம் ரூபா 600,000 எரிபொருள் படியாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(iii) சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தற்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 22,680 வீதம் ரூபா 544,320 தொகையும் மேலும் 8 உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 19,440 வீதம் ரூபா 1,749,600 தொகையும் இன்னுமோர்

AGDSL

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

உத்தியோகத்தருக்கு ரூபா 14,440 வீதம் ரூபா 196,320 தொகையுமாக மொத்தம் ரூபா 2,490,240 தொகை எரிபொருள் படியாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை

(i) சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு ஆகக்கூடியது ரூபா 15,000 இற்கு சமனான உபகாரப் படியொன்று செலுத்தப்பட முடியுமான போதிலும், அதற்கு முரணாக ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் மாதாந்தச் அடிப்படை சம்பளத்திற்குச் சமனான தொகை மீளாய்வாண்டில் உபகாரப் படியாக செலுத்தப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டில் உபகாரப் படிகளாக ரூபா 1,359,161 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 206,833 கூட்டுத்தொகையான உபகாரப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஏ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) சுற்றறிக்கைக்கு முரணாக 06 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 25,000 வீதம் தொழில்சார் படிகள் மற்றும் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 10,000 வீதம் விசேட படியாக மொத்தம் 1,860,000 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமை புரிந்தமைக்காக சிரேஷ்ட பணிப்பாளருக்கு 2010 மே மாதம் வரை மாதத்திற்கு ரூபா 17,625 வீதம் பதிற்கடமை படி செலுத்தப்பட்டிருந்ததுடன் அவரை பதிற்கடமை பதவியிலிருந்து நீக்கிய பின்னரும் பதிற்கடமை படியாக

7

| | | |
|---|---|---|
| | | ரூபா 953,750 தொகையும் விசேட படிகளாக மீளாய்வாண்டின் இறுதி வரை முறையான திறைசேரி அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இரண்டு உத்தியோகத்தர்களிற்காக வரையறையை விஞ்சி செலுத்தப்பட்ட முறையே ரூபா 150,149 தொகை மற்றும் ரூபா 6,846 தொகையான செல்லிடத் தொலைபேசி சிட்டைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.12 ஆம் பந்தி | (i) சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகாரசபையின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களிலுள்ள சகல உறுப்பினர்களிற்குமாக வைத்தியசாலை மற்றும் சத்திரசிகிச்சைகளிற்காக முழுமையான காப்புறுதி ஒப்பந்தத்தினை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 7,551,640 உதவுதொகை செலவிடப்பட்டிருந்தது. இக் காப்புறுதி ஒப்பந்தத்திற்கான வருடாந்த காப்புறுதி தவணைப்பணம் ரூபா 38,400 முதல் ரூபா 60,600 வரையான வீச்சில் காணப்பட்டது.<br><br>(ii) மேலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட 08 உத்தியோகத்தர்களுக்கும் அவர்களின் குடும்பங்களிலுள்ள சகல உறுப்பினர்களிற்குமாக வைத்தியசாலை மற்றும் சத்திர சிகிச்சைகளிற்காக காப்புறுதி செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 385,540 உதவுதொகை அதிகாரசபைக்கு செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஏ) | 2007 பெப்ரவரி 28 ஆந் திகதிய சீ.எஸ்.ஏ/பீ.1/40 ஆம் இலக்க சனாதிபதியின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக சிவில் விமான சேவைகள் அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் சொகுசு ஹோட்டல்களில் நடாத்தியமைக்காக ரூபா 1,938,240 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2006 பெப்ரவரி 10 ஆந் திகதிய சீஎஸ்ஏ 1/1/2006 ஆம் இலக்க சனாதிபதியின் சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் அதிகாரசபையின் உப தலைவர், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஓய்வுபெற்ற 13 உத்தியோகத்தர்கள் உட்பட வெளிநாட்டுப் பிரயாணங்களிற்காக ரூபா 4,737,836 கூட்டுத்தொகை அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்ததுடன், அவ்வெளிநாட்டு சுற்றுலா உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு உரித்தல்லாததாக இருந்துடன், அதன் மூலம் அதிகாரசபைக்கு எந்தவொரு நலனொன்றும் கிடைக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

---------------------------

## 3.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 1,123,432,376 மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 813,671,859 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 309,760,517 சாதகமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் மற்றும் செயற்பாடல்லாத வருமானம் என்பன முறையே 279,207,504 ஆலும் ரூபா 15,872,726 ஆலும் அதிகரித்திருந்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

AGDSL

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகளின் செயன் முன்னேற்றம் தொடர்பான பகுப்பாய்வு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| விடயம் | விபரம் | 2014 | 2012 | 2012 | 2011 |
|---|---|---|---|---|---|
| (i) விமான போக்குவரத்து | • வாடகைப் பயணங்கள் | 3,391 | 2,556 | 2,118 | 1,782 |
| | • நிரந்தர பயணங்கள் | 51,892 | 48,413 | 46,616 | 41,891 |
| (ii) பூரணப்படுத்தப்பட்ட பரிசோதனைகள் (எண்ணிக்கை) | • விமான திருத்தச் சேவைகள் | 35 | 32 | 01 | 01 |
| (iii) மேற்கொள்ளப்பட்ட திறந்த/பாதுகாப்பான பயிர் கண்காணிப்பு நடவடிக்கைகள் (எண்ணிக்கை) | • ரூமப் பரிசோதனை எண்ணிக்கை (விமான தகைமை) | 48 | 53 | -- | 65 |
| | • மிதக்கும் இறங்குதுறை | 38 | 39 | 19 | 20 |
| | • அபாயகரமான பொருட்கள் | 02 | 09 | 18 | 35 |
| | • பறக்கும் பாடசாலைகள் பரிசோதனை (தனிப்பட்ட அனுமதிப்பத்திரம்) | 09 | 08 | 14 | 13 |
| | • நிலைய வசதிகள் செயற்பாடுகள் | 00 | 07 | 02 | 04 |

- ஆண்டுதோறும் தொடர்ச்சியாக இலங்கைக்கு வருகை தருகின்ற விமானங்களும் விமானச் செயற்பாடுகளும் அதிகரித்துள்ள போதிலும், சிவில் விமான சேவைகள் கண்காணிப்புக்குரிய பரிசோதனைகள் போதியளவில் அதிகரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- விமான செயற்பாட்டு நடவடிக்கைகளில் இடம்பெறுகின்ற விமான விபத்துச் சம்பவங்களை அறிவித்தல், விசாரணை செய்தல் மற்றும் அச் சம்பவங்களைக் குறைத்துக் கொள்வதற்காக அதிகாரசபை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அதிகாரசபையின் செயற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பில் விரிவான பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள முடியவில்லை.

(ஆ) சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் நிறைவேற்றப்படுகின்ற சேவைகளிற்கான கட்டணங்கள்

(i) கட்டண அறவீடுகள்

அதிகாரசபையால் விமான ஓட்டுனர் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், தொலைத் தொடர்பு சமிக்ஞை கோபுரங்களுக்காக அங்கீகாரம் வழங்குதல், உயரமான கட்டிடங்களிற்காக அங்கீகாரம் வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளையும் வழங்கியமைக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் என்பவற்றிக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் அதிகாரசபையின் கோவைகளைப் பேணிச்செல்வதற்காக செலவிடப்படுகின்ற பணத்தை தீர்ப்பதற்கோ போதியதாக இல்லதிருந்தமை அவதானிக்கப்பட்டது. தற்போது செலவிடப்படுகின்ற கட்டணங்கள் பின்வருமாறு

| அனுமதிப்பத்திர வகை | ஆரம்ப அனுமதிப்பத்திர கட்டணம் | மதிப்பீட்டுக் கட்டணம் | புதுப்பித்தல் | புதுப்பித்தலை மதிப்பிடுதல் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| விமானஓட்டி – மாணவர் | 2,500 | 5,000 | 1,250 | 2,500 |
| விமானஓட்டி – தனியார் | 3,000 | 6,000 | 1,500 | 3,000 |
| விமானஓட்டி – வர்த்தகம் | 3,500 | 7,000 | 1,750 | 3,500 |
| விமானஓட்டி – விமானப் | 4,000 | 8,000 | 2,000 | 4,000 |

11

| | | | | |
|---|---|---|---|---|
| போக்குவரத்து | | | | |
| தொலைத்தொடர்பு கட்டுப்பாடு | 3,500 | 7,000 | 1,750 | 3,500 |
| விமானச் செயற்பாட்டு பொறியியலாளர் | 3,000 | 6,000 | 1,500 | 3,000 |

(ii) அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் புதுப்பித்தலும்

இலங்கையின் சிவில் விமான சேவைத்துறையில் பாரிய தொழில்வாய்ப்புக்கள் ஆண்டுதோறும் உருவாகாமல் இருந்தமை அதிகாரசபை அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் செய்யப்பட்டுள்ள எண்ணிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

| அனுமதிப்பத்திர வகை | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| விமானஓட்டி – மாணவர் | 211 | 231 | 155 | 115 | 142 |
| விமானஓட்டி – தனியார் | 151 | 110 | 94 | 98 | 76 |
| விமானஓட்டி – வர்த்தகம் | 394 | 339 | 264 | 317 | 300 |
| விமானஓட்டி – விமானப் போக்குவரத்து | 350 | 498 | 414 | 382 | 359 |
| தொலைத்தொடர்பு கட்டுப்பாடு | 50 | 26 | 44 | 81 | 91 |
| விமானச் செயற்பாட்டு பொறியியலாளர் | 04 | 05 | 113 | 173 | 283 |

**(இ) விமான சம்பவங்கள்**

இலங்கையில் சிவில் விமான சேவைகளை கண்காணிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள சிவில் விமான சேவைகள் அதிகாரசபை தனது கண்காணிப்பு நடவடிக்கைகளை வினைத்திறனாகவும் சர்வதேச நியமங்களிற்கு அமைவாகவும் மேற்கொள்கின்றதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்ட விமான சம்பவங்கள் மற்றும் அந்த சம்பவங்களை விசாரணை செய்தல்,

அதிகாரசபையால் பராமரிக்கப்பட்டிருந்த கோவைகள் மற்றும் அதிகாரசபை காலத்திற்கு காலம் அறிவித்திருந்த வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அதிகாரசபையின் செயலாற்றல் தொடர்பான பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள முடியவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சரியான முறையில் கணிப்பிடாமல் கொடுப்பனவு செய்தமை காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக பெறுமதிசேர் வரி ரூபா 32,688,455 தொகையை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த குத்தகை தொகையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது ஈடுசெய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியதிச்சட்ட சட்ட விதிகளை மீறியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் முன்னைய கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுவினாலும் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இப் பலவீனத்தை தவிர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிவில் விமான சேவைகள் பிரதிப் பணிப்பாளர் (ஆகாய விமானங்கள்) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (விமான ஓட்டுனர்) போன்ற பதவிகளிற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் படி விமானப் பயணக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் (Air Traffic Controller License) கட்டாயமாக வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும், அத் தகைமைகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றுக்கு ரூபா 25,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 1,200,000 படிகள் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த உத்தியோகத்தர்களால் விமானப் பயண கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பல ஆண்டுகளாக புதுப்பித்திருக்கவில்லை.

(ஆ) அமைச்சரின் பதவியணிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் அங்கு முழுநேரச் சேவையில் இருக்கையில் அவ் உத்தியோகத்தருக்கு அதிகாரசபையின் நிரந்தர பதவிக்கு நியமனமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒரு நாளேனும் சேவைக்குச் சமூகமளிக்காதிருந்த போதிலும், சம்பளம், எரிபொருள், மருத்துவ காப்புறுதி மற்றும் வெளிநாட்டுப் பயணங்கள் என்பவற்றிற்காக முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 3,261,983 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த நபரிடமிருந்து அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் பதவியணி நடைமுறையில் உள்ளடக்கப்படாத மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமலும் ரூபா 80,000 ஆன மாதச் சம்பளத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் விற்பனை மேம்படுத்தல் மதியுரையாளரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். இந்த உத்தியோகத்தர் ஒரு நாளேனும் சேவைக்குச் சமூகமளிக்காதிருந்த போதிலும், சம்பளமாக மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 720,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சரின் எரிபொருள் பட்டியலுக்காக அமைச்சிலிருந்து மீள் நிரப்பப்பட்டிருக்கையில் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு எந்தவொரு சம்பந்தமும் இல்லாத அமைச்சரின் எரிபொருள் பட்டியல் தீர்ப்பனவிற்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 2,0606,546 தொகை முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபைக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த கட்டிடத்தின் வாடகை உடன்படிக்கையின் படி வருடாந்தம் அதிகரிக்கின்ற இறைவரிக் கட்டணம் அதிகாரசபையால் செலுத்தப்படுதல் வேண்டுமென்ற பாதகமான நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் ரூபா 285,390 மேலதிக இறைவரிக் கட்டணம் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மத்தளை விமான நிலையத்தை திறந்து வைக்கும் விழாவிற்காக சமூகமளித்தமைக்காக 19 உத்தியோகத்தர்களுக்கு விமானப் பயணச்சீட்டிற்காக ரூபா 88,300 தொகையும் சில வெளிநாட்டு முகவர்களுக்கு Collaborative Arrangment for the Prevention and

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

Management of Public Health events in Civil Aviation மாநாட்டின் வெளிக்கள பரிசோதனைக்காக மத்தளை செல்வதற்காக விமான பிரயாணச்சீட்டிற்காக ரூபா 153,000 ஆக மொத்தம் ரூபா 241,300 தொகை ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் கம்பனிக்கு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்காக வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கட்டிடத்தில் புதிய நிர்மாணங்கள் மற்றும் களஞ்சிய மேம்படுத்தல் என்பவற்றை கட்டிட உரிமையாளரைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளாது அதற்காக மொத்தம் ரூபா 28,214,123 தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. அச் செலவினத்தை குறித்த கட்டிடத்திற்காக செலுத்த வேண்டிய வாடகையிலிருந்து ஈடு செய்வது தொடர்பாக 2015 யூலை வரையிலும் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

விடுமுறைக் கேந்திரத்தின் கதவு யன்னல்களுக்காக திரைச்சீலை இடுவதற்காக சமர்ப்பித்த ஆகக்குறைந்த கேள்வி நியாயமான காரணமொன்று குறிப்பிடப்படாமல் நிராகரிக்கப்பட்டு இரண்டாவது குறைந்த விலை சமர்ப்பித்திருந்த நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டமையால் அதிகாரசபைக்கு ரூபா 722,160 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.6 விளைவற்ற குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் நிலையான சொத்துக்களை கணனிமயப்படுத்துவதற்காக மென்பொருட் தொகுதியொன்றிற்காக ரூபா 4,500,000 தொகை சயன்ஸ் லேன்ட் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பொதியிலிருந்து எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருந்தது.

### 4.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 3.8.9 ஆம் பந்திக்கு முரணாக அமைச்சின் பல்வேறு செலவினங்களிற்காகவும் ரூபா 994,805 அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்ததுடன், அதிகாரசபைக்குச் சொந்தமான 05 வாகனங்களும் 09 உத்தியோகத்தர்களும் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டில் அவ்வாறு விடுவிக்கப்பட்ட வாகனங்களிற்கான எரிபொருள் மற்றும் திருத்தச் செலவினத்திற்காக முறையே ரூபா

1,325,268 தொகையும் ரூபா 3,222,906 தொகையும் உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகளிற்காக ரூபா 4,485,808 தொகையுமாக மொத்தம் ரூபா 9,033,982 தொகையான செலவினம் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 167 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணியினர் 143 ஆக இருந்தமையால் 24 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) வருடக்கணக்காக அதிகாரசபையின் பதவியணியில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற 07 உத்தியோகத்தர்களைச் ஆட்சேர்த்து 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 13,480,410 கூட்டுத்தொகையான்று சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அதிகாரசபைக்கு அவசியமற்ற 02 சந்தைப்படுத்தல் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு அதற்காக ஒப்பந்த அடிப்படையில் இரண்டு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து மீளாய்வாண்டில் ரூபா 1,590,333 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் ஆண்டுதோறும் நீடிக்கப்பட்டு வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்குப் முரணாக மீளாய்வாண்டின் போது 13 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக அந்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,307,116 தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களை உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 56.59 சதவீதம் முதல் 164.34 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக்

கட்டுப்பாட்டின் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

6. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான மற்றும் செலவின நிர்வாகம்
(இ) விமான சம்பவங்களை பரீட்சித்தல்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) சொத்துக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# கணக்காய்வாளர் அறிக்கைக்கு சிவில் விமான சேவை அதிகார சபையின் பதில்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் 2014 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக நிதி வெளிப்பாடுகள் தொடர்பில் 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2)(ஊ) பிரிவிற்கமைய கணக்காய்வாளர் அறிக்கை

2.2.1.

(அ)

(ஐ) அதிகார சபையன் நிதி வெளிப்பாடுகள், அதிகார சபையின் வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதி என்பதுடன் உரிய சகல விடங்களும் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஐஐ) இத்தகவல்கள் வருடாந்த அறிக்கையின் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 01 மற்றும் 02 இன் கீழ் கணக்கு இலக்கம் 116 தொடக்கம் 121 வரை குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) உரிய மாற்று தேய்மான விகிதாசாரம் மறுசீரமைப்பினால் ஏற்பட்ட மாற்றமன்றி 2013 ஆம் ஆண்டின் தேய்மானத்தை கணிப்பீடு செய்யப்பட்டமையினால் ஏற்பட்டமையாகும். 2013 ஆம் ஆண்டுக்குரிய நிலையான சொத்துத் தேய்மானத்திற்காக எழுந்துள்ள மாற்றங்கள் இவ்வாண்டில் வரிகளுக்கு பின்னர் இலாபத்துடன் ஒப்பீடு செய்யும் வேளையில் 0.7மூ தை விட குறைத்த பெறுமதியைக் காண்பிப்பதனால் முன்னைய ஆண்டில் இலாபத்துடன் ஒப்பீடு செய்யாது அமுலில் உள்ள ஆண்டில் இலாபத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இத்தேய்மான மாற்றம் காரணமாக முன்னைய ஆண்டின் இலாபத்திற்கான அழுத்தங்கள் கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

(இ) மேற்பார்வையினை ஏற்றுக் கொள்வதுடன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் உரியவாறு திருத்தியமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுள்ளன.

(ஈ) உரிய தகவல்கள் வருடாந்த அறிக்கையில் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 14 இன் கீழ் பக்க இலக்கம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) இவ் அதிகார சபையின் ஊழியர்களுக்காக ஓய்வூதிய சம்பளத் திட்டம் இல்லை என்பதுடன் 1983 இலக்கம் 12 சுற்றறிக்கைக்கமைய சகல ஊழியர்களுக்காகவும் பணிக்கொடை நிதியத்தை ஒதுத்தி உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ள உரிய நிதிக்குச் சமமான நிதி திறைசேரி முறைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

(ஊ) உரிய தகவல்கள் வருடாந்த அறிக்கையின் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 19 இன் கீழ் பக்க இலக்கம் 130 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ) இம்மேற்பார்வையினை ஏற்றுக் கொள்வதுடன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் உரிய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.2.2.

(அ) இம்மேற்பார்வையினை ஏற்றுக் கொள்வதுடன் 2015 ஆம் ஆண்டில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இவ் அதிகார சபை பொருள் விற்பனை மற்றும் விநியோகப் பணிகளில் ஈடுபடுவதில்லை என்பதனால் விற்பனை மற்றும் விநியோக செலவினத்தின் கீழ் செலவினம் வகைப்படுத்தப்படவில்லை.

2.3.

(அ) அதிகார சபையின் வாகன உரிமை சிரேஷ்ர உத்தியோகத்தர்களின் பகுதியினை பயன்படுத்தும் வாகன இறக்குமதியின் வேறு கடமைச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுவதனால் கணக்கீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருப்பது அவ்வாகனம் பயன்படுத்தப்பட்ட முழுமையான செயற்பாடுகளுக்காகும். மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் எரிபொருளுக்காக எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

(ஆ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த சிவில் விமான சேவை அதிகார சபையின் பணியாளர் சபைச் சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிக் கோவையின் (ளுடுஊயீ 5000) இன் வாசக இலக்கம் 9.7 இன் ஒதுக்கீடுகளுக்கமைய இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் வாசகம் அமைச்சரவையின் புதிய அங்கீகாரத்திற்கமைய மறுசீரமைக்கப்பட்டுள்ளமையினால் 2015 ஜ'ன் மாதம் தொடக்கம் உழைக்கும் போது செலுத்தப்படும் வரி நிதி உத்தியோகத்தர்களிடமிருந்து குறைத்து செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்குக் கோவையின் (ளுடுஊயீ 5000) இலக்கம் 9.3.4 இன் ஒதுக்கீடுகளுக்கமைய கொடுப்பனவுகள மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ை) சிவில் விமான சேவை அமைச்சரினால் சிவில் விமான சேவைச் சட்டத்தின் 31.1 பிரிவிற்கமைய அதிகார சபைக்கு மேற்கொள்ளப்பட்ட கட்டளை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய அக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ை) உத்தியோக பூர்வ வாகனத்திற்காக உரிமை கொண்ட உத்தியோகத்தர்களுக்கு தமது தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் உரிய சுற்றறிக்கைக்கமைய இக்கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்குகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிக்கோவையின் (ளுடுஊயீ 50000) 9.6 இல் ஒதுக்கீடுகளுக்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிவில் விமான சேவை அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிமுறைக் கோவை (ளுடுஊயீ 5000) மீள மீளாய்விற்குட்படுத்தப்பட்டு 2014.09.18 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் இவ் ஒதுக்கீடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஈ)

(ை) சிவில் விமான சேவை அதிகார சபையின் பணியாளர் சபைச் சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்குக் கோவையின் (ளுடுஊயீ 5000) வாசக இலக்கம் 9.4 இல் ஒதுக்கீடுகளுக்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முகாமைத்துவ சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் னுஆளு;1748 மற்றும் 2015.10.28 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பணியாளர் சபைச் சட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிக்கோவையின் (ளுடுஊயீ 5000) இன் ஒதுக்கீடுகளுக்கமைய 2014 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகளை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ை) அதிகார சபையின் நிரந்தரப் பதவிகளுக்காக ஒப்பந்த உடன்படிக்கைளுக்கமைய ஆட்சேர்ப்பை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு அவ் உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தின் பணிக்கொடை நிதி உரித்தாகுவதாக இணங்கியுள்ளமையினால் அவ்வாறு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பணியாளர் சபைச் சட்ட ஒழுங்கு விதிமுறை நிர்வாக விதி முறைக் கோவை (ளுடுஊயீ 5000) இன் ஒதுக்கீடுகளுக்கமைய அக்கொடுப்பனவு நிறுவனத்தின் சகல ஊழியர்களுக்கும் உரித்தாகுவதுடன் ஊழியர் எண்ணிக்கையின் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர் ஒருவரும் அடங்கியுள்ளார்.

(உ)

(ை) சிவில் விமான சேவை அதிகார சபையின் பயணியாளர் சபைச் சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிர்வாகக் கோவையின் (ளுடுஊயீ 5000) இன் இணைப்பு 07 இன் ஒதுக்கீடுகளுக்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ை) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் 2007.05.01 ஆம் திகதி தொடக்கம் 03 வருட காலங்கள் சம்பளமின்றி விடுமுறை பெற்றிருந்த காலத்திற்குள் அப்பதவியில் பிதல் கடமைக்கு அப்போதைய பணிப்பாளர் (விமான சேவை) பதவியை வகித்த டி.எம்.பி. திசாநாயக்க அவர்கள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டதுடன் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மீள சேவைக்கு வருகை

தந்ததைத் தொடர்ந்து டி.எம்.பி திசாநாயக்க அவர்களின் பதவி சிரே`ட பணிப்பாளாராக பதவி உயர்த்தப்பட்டு அப்பதவி மறுசீரமைப்பிற்காக தேயைான அங்கீகாரத்தை வழங்கும் வரை அவ் சிரேஷ்ர பணிப்பாளர் பதவியின் பொறுப்பக்களை நிறைவேற்றுவதற்காக அவருக்கு இக் கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கமைய செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது இப்பதவியினை உருவாக்குவதற்காக தேவையான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் திரு. திசாநாயக்க அவரை இப்பதவிற்கு நியமிக்க இவருக்கு செலுத்தும் இக்கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

(ஊ) ஏற்கனவே இந்நிதி தீர்க்கப்பட்டுள்ளது.

(எ)

(ள) மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் அதிகார சபையின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ளுடுஊயீ-5000 கோவையின் 9.1 வாசகத்திற்கமையவாகும்.

(ளை) நிறுவனத்தின் ஊழியர்களில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களும் அடங்குகின்றனர்.

(ஏ) சர்வதேச சிவில் விமான சேவை அதிகார சபையின் கோரிக்கைக்கமைவாக வெளிநாடுகளில் பங்கேற்புடன் இலங்கையில் நடாத்தப்பட்ட 02 சர்வதேச செயலமர்வுகளுக்காக இந்நிதியில் ரூபா. 1,563,050 நிதி செலவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய நிதி செலவிடப்பட்டிருப்பது மத்தள உப அலுவலகத்தைத் திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்பதற்காகவாகும். சர்வதேச செயலமர்வை நடாத்தும் போது நாட்டின் கீர்த்திக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு உயரிய தரத்தைப் பேண வேண்டும் என்பதனால் இச்செலவினம் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

(ஐ) இந்நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைகள் நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் (Training Plan) தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இப்பயிற்சித் தேவைகளுக்கு உரிய வேலைத்திட்டங்களை வருடாந்தம் இனங்கண்டு வருடாந்த பயிற்சி வேலைத்திட்டம் (Annual Training Programme) நிறுவனத்தின் பயிற்சிகள் தெரிவுக் குழுவின் பரிந்துரைக்கமைய தயாரிக்கப்படுகின்றது. அவ்வாறு இனங்காணப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக உத்தியோகத்தர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சகல பணிகளுக்காகவும் உரிய அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன.

4(4).1

கணக்காய்வாளரினால் வெளியிடப்பட்ட வரைபு கணக்காய்வு அறிக்கையின் பரிசோதனை 14 ல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதில் 10 பரிசோதனைகளை முன்னேற்றங்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூம்ப் பரிசோதனைக்காக விமானத் தள பரிசோதனை, அபாயகர பொருள் பரிசோதனை குறைவதற்குக் காரணம் பரிசோதகர்களின் பற்றாக்குறை என்பதுடன் நிறுவனத்தின் வெளிநாட்டுப் பிரயாணிகள் மட்டுப்படுத்தப்பட்டமையினால் இடவசதி பரிசோதனைகள் குறைவடைந்தன.

- சிவில் விமான சேவைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் 2010 இலக்கம் 14 கொண்ட சட்டத்தின் 57 மற்றும் 61 பிரிவுகள் மூலம் அதன் 2 வது வாசகத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள சர்வதேச சிவில் விமான சேவை இலக்கத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ள விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்களுக்குரியதாக விசாரனைகள் உட்பட தகவல்களை உள்ளடக்கிய கோவையைத் தவிர கோரப்பட்டுள்ள சகல புள்ளி விபரங்கள் மற்றும் தகவல்கள் கணக்காய்விற்காக வழங்கப்பட்டுள்ளது.

இக்கணக்காய்வு தொடர்பிலான வியடங்கள் நிரல் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவரினால் அது தொடர்பில் தெளிவுபடுத்தல்கள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ)

(ள) நாட்டில் இருந்த யுத்த நிலைமைகள் காரணமாக நீண்ட காலமான பெரிதும் பாதிப்பிற்குள்ளான சிவில் விமான சேவைக் கைத்தொழிலை மீள விருத்தி செய்வதற்காகன சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்பதனால் சேவைக்கான கட்டணங்கள் பல ஆண்டுகளாக மறுசீரமைக்கப்படவில்லை என்பதுடன் தற்போது இக்கட்டணம் குறைந்த பட்சம் 10ூ தினால் அதிகரிப்பட்டுள்ளது. இந்நிறுவனம் சேவை வழங்கும் நிறுவனம் என்பதுடன் இங்கு சகல செலவிங்களும் சேவை வழங்குனரிடமிருந்து அறவிட முடியாது சிவில் விமான சேவை மேற்பார்வை நிறுவனமாக கட்டணம் அறிவிடும் போது விமான சேவைக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்குப் பாதிப்புக்கள் அற்றவாறு செயற்பட வேண்டியுள்ளது.

(ஜ) 2014 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பில் இலங்கை விமானக் கம்பனி மற்றும் மிகின் லங்கா கம்பனி ஏற்கனவே தமது அதிர்ப்தியை தெரிவித்ததுடன் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிவில் விமான சேவைகளின பாதுகாப்பினை ஊக்குவிக்கும் நோக்குடன் 2010 இலக்கம் 14 கொண்ட சட்டத்தின் 57 மற்றும் 61 பிரிவுகள் மற்றும் அதன் 2 வது பிரிவில் அமுல்படுத்தப்பட்டுள்ள சர்வதேச சிவில் விமான சேவை இணக்கப்பாட்டில் இணைப்பு 19 இன் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ள விமான விபத்துக்கள் மற்றும் நிகழ்வுகளுக்குரியதான ஆய்வுகள் புள்ளி விபரங்கள் மற்றும் தகவல்களை உள்ளடக்கிய கோவை கோரியிருந்த சகல ஏனைய புள்ளி விபரங்கள் மற்றும் தகவல்கள் ஆய்விற்காக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கூறப்படட ஆய்வு தொடர்பிலான விடயங்கள் நிரல் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவரினால் இது தொடர்பில் தெளிவுபடுத்தல் கணக்காய்வாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.2.

(அ) சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி கணிப்பீடு செய்வதில் தவறு ஏற்படவில்லை என்பதுடன் வரி நிதியினை உரியவாறு கணப்பீடு செய்ய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கையும் அனுப்பப்பட்டுள்ளது. நிறுவனத்தின் உள்ளீட்டு வரி (ஹீரவ வயஓ) பணி நிறைவு வரி (ழுரவிரவ வயஓ) அதிகரித்தமையினால் உள்நாட்டு வருமானத் திணைக்களத்தினால் மீள கிடைக்க வேண்டிய நிதி (வுயஓ சுநகரனெ) அதிகரிக்கப்பட்டுள்ளது. கிடைக்க வேண்டிய நிதி தொடர்பில் நினைவு கூறல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பல சந்தர்ப்பங்களில் அனுப்பப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் நிதி வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைத் திருத்தியமைக்க தேவையான நடவடிக்கைகளை தாமதம் இன்றி எடுக்கப்பட்டுள்ளதுடன் அரச கணக்குச் செயற்குழு சபையின் பரிந்துரை வழங்கப்பட்ட வேளையில் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி சகல பரிந்துரைகளையும் அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.3.

(அ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் விமான சேவை அதிகார சபையின் பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிமுறைக் கோவையின் (ளுடுஊயீ 5000) ஒதுக்கீடுகளுக்கமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. விமான செயற்பாட்டு நிர்வாகியாகச் செயற்படாத சந்தர்ப்பங்களில் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படுவதில்லை என்பதுடன் சிவில் விமான சேவை அதிகார சபையில் மேற்கொள்ளப்படும் மேற்பார்வைச் செயற்பாடுகளுக்காக அனுதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பற்கான அவசியம் இல்லை.

(ஆ) இது தொடர்பில பூரண கணக்காய்வு அறிக்கைக்கு வரவேற்பளிக்கும் வகையில் மற்றும் அது தொடர்பில் (ஊழுீநு) ஆலோசனைகளுக்கமைய நிரல் அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கிணங்க இவ் விடயம் தீர்க்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்களிடமிருந்து நிதி அறவிட வேண்டுமென பரிந்துரை செய்யப்படாமையினால் நிதி மீள அறவிடப்படவில்லை.

(இ) தற்போது இப்பதவி இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் இப்பதவியில் சேவையாற்றும் உத்தியோகத்தரும் நீக்கப்பட்டுள்ளார்.

(ஈ) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தலைவருக்கு வழங்கப்பட்ட எழுத்து மூல கட்டளைக்கமைய பணிப்பாளர் சபையின் தீர்மாத்திற்கிணங்க இக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்பார்வைகள் ; குறைபாடுகளை திருத்தியமைப்பற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதை தடுப்பதற்கான பணிகளை மேற்கொள்வதற்கும் உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

4.4.

(அ) தங்களது மேற்பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதக விடயங்களை அகற்றி வரி உடன்படிக்கையினை மீளப் புதுப்பிக்கும் போது கலந்துரையாடப்பட்ட போதிலும் அவ்வாறு மேற்கொள்வதற்கு கட்டிட உரிமையாளர் இணங்கவில்லை. அவ்வாறு அகற்றுவதாயின் வாடகைக் கட்டணத்தை மறுசீரமைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

கட்டிடத்திற்காக கூடிய வர்த்தக ரீதியிலான கேள்விகள் கொண்ட கொழும்பு நகரில் ஒரு சதுர

அடி ரூபா. 118 என்ற நிதிக்கு மீண்டும் கட்டிடத்தை இனங்காண்பது சிரமம் என்பதனால் பிரதான அலுவலகக் கட்டிடத்தை நிர்மானிப்பதற்கான பணிகளை வகுக்கும் போது மீண்டும் ஏனைய வாடகைக் கட்டிடத்திற்கு செல்வது பயனற்றது என்பதனால் அவ்வாறு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

(ஆ) மத்தள உப அலுவலகத்தை திறக்கும் விழாவில் பங்கேற்ற கௌரவ அமைச்சர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்காக இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்குழுவை விமானம் மூலம் பங்கேற்கச் செய்யுமாறு அமைச்சின் செயலாளர் ஆலோசனை விளங்கியுள்ளார்.

இச்செயலமர்வுக் காலத்தின் ஒரு தினம் மாத்திரம் மத்தள விமான நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் தரை மார்க்கமாக பயணித்திருந்தால் போதியளவு காலம் இருந்திருக்காது மேலும் தரை மார்க்கமாக பயணித்திருந்தால் போக்குவரத்துச் செலவு, உணவு பாணங்கள் உள்ளிட்ட வேறு செலவுகள் ஏற்பட்டிருக்கும் இப்பணிக்காக ஏற்படக்கூடிய செலவிடும் காலம் சிரமம் என்பது தொடர்பில் மதிப்பீடு செய்ததன் பின்னரே இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இது 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினமாகும். அதிகார சபையின் பணிகள் மற்றும் செயற்பாட்டுப் பொறுப்புக்களை மேற்கொள்ளக்கூடியவாறு மாத்திரமின்றி இவ் அதிகார சபைக்குத் தொடர்ந்தும் வருகை தரும் வெளிநாட்டவர்கள் மத்தியில் நாட்டின் தேசிய அடையாளம், கௌரவம் மற்றும் நிறுவன நன்மதிப்பினை பாதுகாக்கக் கூடியவாறான

சூழலுக்கமைய வாடகை அடிப்படையிலான கட்டிடத்தில் தேவையான சுற்றுச்சூழலை விருத்தி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் நிர்மானப் பணிகள் அதிகார சபையின் பணிகளுக்காக தேவையான இட வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக மாத்திரம் தற்காலிக அத்திவாரம் இன்றி வேறுபடுத்தப்பட்டது. (யெசவவைழைெ)

4.5.

சிவில் விமான சேவை அதிகார சபையினால் நிர்மானிக்கப்பட்ட வீரவில விடுமுறை விடுத்திக்காக கதவு ஜன்னல்களால் திரைச்சேலை இடுவதற்காக 10 நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன் 04 நிறுவனங்களின் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. குறைந்தபட்ச விலைகள் சமர்ப்பித்து நிறுவனங்களினால் சமர்பிக்கப்பட்டிருந்த மாதிரி மற்றும் தரம் தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் இவ் அறிக்கை யுனு;41;1;19;4 கோவையில் இலக்கம் 51 இன் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைக்கமைய இரண்டாவது குறைந்தபட்ச விலை சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஜனநயட டீசவைந ர்ழஅந னுநஉழசள நிறுவனத்தின் கதவு ஜன்னல் மற்றும் கட்டிடத்திற்காக திரைச்சேலை மற்றும் வெட்சீட் கொள்வனவுக்கு திணைக்களப் பெறுகைக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

4.6

சிவில் விமான சேவை அதிகார சபையினால் சயன்ஸ் லாம்ப் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கணணி மென்பொருள் தொகுதியினைப் பயன்படுத்தி 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இந்நிறுவனம் கணக்கு செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் இதன் மூலம் நிறுவனம் எதிர்பார்க்கும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவ்வவ் பிரிவுகளினால் இன்வெய்ஸ் தயாரித்தல், வழங்குதல், நாளேட்டுக் கணக்குகளைப் பேணல், இறுதி கணக்குகளை தயாரித்தல், சம்பளத் தயாரிப்பு மற்றும் கணக்கில் பதிதல், முதலீட்டு லெஜரைப் பேணல் மற்றும் வட்டியினைக் கணிப்பீடு செய்தல் உட்பட கணக்கில் பதிதல், களஞ்சியசாலை தொகைக் கணக்கினைத் தயாரித்தல் மற்றும் கணக்கில் பதிதல், வங்கி ஒப்பீடு உள்ளிட்ட பல்வேறுபட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் நிலையான சொத்து ஆவணத்தைப் பேணுதல் போன்ற பல்வேறுபட்ட பிரிவுகளைக் கொண்ட செயற்பாடாகும். இச்சகல செயற்பாடுகள் மூலம் எதிர்பார்க்கப்பட்டவாறு 2013 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலில் இருப்பதுடன் தற்போது பயன்படுத்தப்படுகின்றது.

4.7.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளரின் உத்தரவிற்கமைய உரிய உத்தியோகத்தர்கள் மற்றும் வளம் காலத்திற்குக் காலம் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய விடுவிக்கப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் உத்தியோகத்தர்கள் மற்றும் வளம் அதிகார சபைக்கு மீளக் கிடைக்கப்பெற்றுள்ளது.

4.8.

ஆண்டு தோறும் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு விமான சேவைத் துறையினை உரியவாறு மீளாய்விற்குட்படுத்தி தேவையை தொழில்நுட்பக் பணியாளர் சபை ஊழியர் எண்ணிக்கையினை அதிகரித்தல் மற்றும் அவர்களுக்காகச் செலவிடப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளுக்கு அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பணியாளர் சபை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக அல்லது கைத்தொழிலிலின் கவர்ச்சி மிக்க தொழில் வாய்ப்புகளுக்காக அகற்றவது இந்நிலைமைக்குப் பிரமான காரணியாகும். இது எவ்வாறாக இருப்பனும் ஏற்கனவே இவ் யோசனைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளன.

(ஈ) ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளுக்குப் புறம்பாக எதுவித ஆட்சேர்ப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை.

5.1.

நிறுவனத்தின் பிரதான கட்டிடத்தின் நிர்மானச் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்டவாறு மேற்கொள்ளப்படாமையும் இதனால் முதலீட்டு வருமானத்தின் குறைவு ஏற்படாமையும் தழம்பலுக்கு பிரதான காரணியாகும்.

ஆனந்த விமலசேன
தலைவர் மற்றும்
பணிப்பாளர் நாயகம்.
2015, அவாணி மாதம் 07 திகதி

எச்.எம்.சீ. நிமல்சிறி
சிவில் விமான சேவை பணிப்பாளர் மற்றும்
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

" Safe skies for all "

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
இல. 04, ஹுணுபிட்டிய வீதி, கொழும்பு-02.